இராமசாமி செட்டியார்

ஆயிரம் பிறை விழா மலர்



மெய்யம்மை பதிப்பகம்

கா ரை க் கு டி

1982

உ

நலம் பொலிக

இராமசாமி செட்டியார்

ஆயிரம் பிறை விழா மலர்

துந்துபி ஆண்டு ஆவணித் திங்கள் ஏழாம் நாள்

23—8—82



மெய்யம்மை பதிப்பகம்

காரைக்குடி-1 சென்னை-14

1982

மெய்யம்மை பதிப்பக வெளியீடு : 5

எமது வெளியீடுகள் :

1.	மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்	ரூ 6-00
2.	அபிராமி அந்தாதி	ரூ 6-00
3.	மதுராபுரி அம்பிகை மாலை	ரூ 1-00
4.	கம்பன் இலக்கிய உத்திகள்	ரூ 32-00

மெய்யம்மை பதிப்பகம்

திரு. வி. க. இல்லம்,
49-ஆறு. ஆ. இராம. வீதி,
காரைக்குடி-623 001.

41-மாசிலாமணி தெரு,
பாலாசி நகர்,
இராயப் பேட்டை,
சென்னை - 600 014.

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.
தொலைபேசி : 2211.

பதிப்புரை

பிள்ளைப் பருவத்திலே என்னை மகனெனக் கொண்டு பெற்ற தாயினும் சாலப் பரிந்து வளர்த்து பள்ளிப் படிப்பும் கல்லூரிப் படிப்பும் பாங்குற வழங்கி, உற்ற நேரத்தில் திருமணம் செய்வித்து சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று தொழில் நுணுக்கங்களைக் கற்றுத் தந்து என்னையும் ஓர் ஆளாக்கி அவையத்து முந்தியிருக்கச் செய்த எந்தைபிரான் இராமசாமியின் பொன்னார் திருவடிகட்கு இவ்வெழிலார் மலரினைக் காணிக்கையாக்குகின்றேன்.

எந்தையாரின் ஆயிரம்பிறை விழாவிற்கு மலர் வெளியிடுதல் வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள்ளத்தில் தோற்றுவித்த பன்னூலாசிரியர் உலகம் சுற்றிய தமிழர் சோமலெ அவர்கள் எந்தையாருடன் பலகால் உரையாடி அவர்களின் வரலாற்றைக் கேட்டறிந்து எழுதியிருக்கின்றார்கள். இம்மலர்த் தொகுப்பில் சோமலெ அவர்களின் பங்கு பெரிது; அவர்கட்கு என் உளமார் நன்றி உரியதாகுக.

எந்தையாருடன் நெருங்கிப் பழகிய பேரறிஞர் தமிழ்ச் செம்மல் பண்டாரகர் வ. சுப. மாணிக்கனார், கவிஞர் ரெ. முத்துக்கணேசன், பண்டாரகர் வெ. தெ. மாணிக்கம், புலவர் ந. இராமநாதன், பண்டாரகர் அர. சிங்காரவடிவேலன், புலவர் தெ. முருகசாமி, புலவர் மு. கற்பகவிநாயகம், குழந்தைக் கவிஞர் தமிழ்ச்செம்மல் அழ. வள்ளியப்பா, புலவர் நா. மீனவன், பண்டாரகர் வெ. சு. அழகப்பன், திரு. மெ. காந்தி, திரு. மு. சே. சுப்பையா செட்டியார் ஆகியோர் கட்டுரைகளும் பாடல்களும் வழங்கி இம்மலரினை அழகுபடுத்தியுள்ளனர். அவர்கள் அனைவர்க்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

இம்மலரினைச் சிறப்பாக உருவாக்கும் முயற்சியில் உறுதுணையாக இருந்த எங்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரித் துணைப்பேராசிரியர் நா. சுப்பிரமணியனும் குறித்த காலத்தில் திருத்தமுற அச்சிட்டுத் தந்த புதுக்கோட்டை மதராஸ் ரிப்பன் அச்சகத்தாரும் பாராட்டுக்குரியவர்கள்.

எந்தையும் தாயும் இன்னும் பல்லாண்டுகள் இன்புற்று வாழ்ந்து எங்களை எல்லாம் மகிழ்விக்க எல்லாம் வல்ல அபிராமியன்னை திருவருள் புரிவாளாக.

காரைக்குடி,
23—8—1982.

அன்பன்,
இராம. பெரி. பெரியகருப்பன்.




இயற்கைக் கொடைஞன்

இராமசாமி

பெற்ற தாயும் பெருமகிழ் வெய்த
உற்ற கல்வியும் உண்டியும் அளித்து
வருகுலம் பாராது வறிய சிறார்க்குக்
குருகுலம் நடத்தும் ஒருதமிழ்த் தோன்றல்;
பள்ளிப் படிப்புக்கும் பற்பல ஆயிரம்
அள்ளிக் கொடுக்கும் அறிவுடைக் கையன்;
நாடும் குடிகளின் நலிவு நீக்கி
வாடும் பயிர்க்கு வாய்க்கால் போல்வான்;
தோட்டச் செடிகளைத் துடிக்க விட்டு
நாட்டு மரங்களை நாடாத் தொண்டன்;
ஈட்டுஞ் செல்வர்க் கிதுபொருள் என்று
காட்டும் வாழ்க்கைக் கடமைச் சான்றோன்;
ஆதல் பெருக்கி அறங்கள் வளர்க்கும்
ஈதல் நெறிமேற் காதல் உடையோன்
தன்னெஞ் சுவப்பத் தன்கடன் ஆற்றுவோன்
என்னெஞ் சறிந்த இயல்பு வள்ளல்
செயற்கைப் புகழைச் சிந்தை செய்யா
இயற்கைக் கொடைஞன் இராமசாமி
இல்லறம் தழைக்கும் இனியனைப்
பல்லறம் தழைக்கப் பாடுவம் நாமே.

டாக்டர் வ. சுப. மாணிக்கம்



இராம. வீர. இராம. இராமசாமி செட்டியார் — நாச்சம்மை ஆச்சி

ஆயிரம் பிறைவிழா 23—8—82

உ

கொடி வழி

சேந்தணி பெரியகருப்பன் செட்டியார்

- வெங்கடாசலம் செட்டியார்
  - இராமசாமி செட்டியார்
    - வெங்கடாசலம் செட்டியார்
      - இராமசாமி செட்டியார்
        - மகாதேவன் செட்டியார்
      - சொக்கலிங்கம் செட்டியார் (தைப்பிங்)
    - பழநியப்ப செட்டியார்
      - இராமசாமி செட்டியார்
        - முருகப்ப செட்டியார்
        - நடேசன் செட்டியார்
  - பெரியகருப்பன் செட்டியார்
    - வெங்கடாசலம் செட்டியார்
      - பெரியகருப்பன் செட்டியார்
        - வெங்கடாசலம் செட்டியார்
      - சுப்பிரமணியன் செட்டியார்
        - வெங்கடாசலம் செட்டியார்
        - அழகப்ப செட்டியார்
        - சின்ன அழகப்ப செட்டியார்
    - சாமிநாதன் செட்டியார்
      - ரெங்கநாதன் செட்டியார்
        - முத்துக்கணேசன் செட்டியார்
- வீரப்ப செட்டியார்
  - இராமசாமி செட்டியார்
    - வீரப்ப செட்டியார் (1861—1914)
      - இராமசாமி செட்டியார் (பி.1901)
        - பெரியகருப்பன் செட்டியார்
      - பெரியகருப்பன் செட்டியார்
        - வீரப்ப செட்டியார்
        - பெரியகருப்பன் செட்டியார் (பெரிய தந்தையார் இராம. வுக்கு சுவீகாரம்)
        - பஞ்சநதம் செட்டியார்
        - இராமசாமி செட்டியார்
        - லெட்சுமணன் செட்டியார்
        - சண்முகம் செட்டியார்
      - சிதம்பரம் செட்டியார்
        - வீரப்ப செட்டியார்
        - பெரியகருப்பன் செட்டியார்
        - நாச்சியப்ப செட்டியார்

உ
சிவமயம்

கல்வி வள்ளல்

இராம. வீர. இராம. இராமசாமி செட்டியார் அவர்கள் வாழ்க்கை வரலாறு

சோமலெ.

முன்னுரை :

காரைக்குடியில் இப்பொழுது பெரும் புகழுடன் விளங்கும் உயர்திரு. இராமசாமி செட்டியார் அவர்கள் எளிய நிலையில் வாழ்க்கையைத் தொடங்கி தம் பெரு முயற்சியாலும் பேருழைப்பாலும் சிக்கனமான பழக்க வழக்கங்களாலும், வாழ்க்கை நெறிமுறைகளாலும், ஒழுக்கத்தாலும் பெருஞ் செல்வராகவும் மக்களால் போற்றப் பெறுபவராகவும் விளங்குகிறார்கள்.

பிலவ ஆண்டு ஆடித் திங்கள் எட்டாம் தேதி செவ்வாய்க் கிழமை சித்திரை நட்சத்திரத்தில் (23–7–1901) பிறந்த இவர்கள் உற்றார், உறவினர் மற்றும் பொது மக்களால் வாழ்த்தப் பெறுகின்ற காரணத்தால் நீண்ட வாழ்நாளும் பெற்று ஆயிரம் பிறைகள் கண்டு இன்று பிறந்த நாள் பெருமங்கலம் கொண்டாடுகிறார்கள்.

காரைக்குடியில் இவர்களுடைய குடும்பம் எப்பொழுதும் அடக்கமாகவும், ஆரவாரமின்றியும் இருந்து வந்திருக்கின்றது. இக் குடும்பத்தின் வரலாறு, குறிப்பிடத்தக்க சிறப்பும் வாழ்க்கையில் முன்னேற விரும்புபவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய தகுதியும் உடையது.

சேந்தணியார் வீடு :

இக்குடும்பத்தினரைச் சேந்தணியார் வீட்டார் என்று காரைக்குடி நகர மக்கள் சுட்டுவர்.

நகரத்தார்களுக்குரிய 96 ஊர்களுள் சேந்தணியும் ஒன்றாகும். பல நூற்றாண்டுகளாகவே நகரத்தார்கள் இடம்விட்டு இடம் குடி பெயர்ந்துள்ளனர். ஒரு காலத்தில் நாக நாட்டிலும், அதற்குப் பிறகு தொண்டை நாட்டிலும், பின்னர் சோழ நாட்டுக் காவிரிப் பூம்பட்டினத்திலும் வாழ்ந்து 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பாண்டிய நாட்டிலும் இப்பொழுது வாழ்ந்து வரும் செட்டி நாட்டிற்குக் குடியேறியதை வரலாற்று வாயிலாக அறிகிறோம்

இவ்வாறு குடியேறி 96 ஊர்களில் வாழ்ந்து வந்த பின்னரும் பல்வேறு காரணங்களால் குறிப்பிட்ட சில குடும்பங்களோ அல்லது அந்த ஊர்களில் இருந்த நகரத்தார் அனைவருமோ வேறு ஊர்களுக்குக் குடியேறினர். இவ்வாறு வெளியூர் நகரத்தார்கள் வந்து குடியேறிய பகுதியே கல்லுக்

கட்டியைச் சுற்றி அமைந்த காரைக்குடி ஆயிற்று என்பது ஒரு கருத்து. ஏற்கெனவே செஞ்சை, செக்காலை, முத்துப்பட்டணம் என்ற ஊர்கள் மட்டுமே இருந்தன.

ஆறாவயல் என்னும் ஊரிலிருந்து 5 மைல் (8 கிலோ மீட்டர்) தொலைவில் சேந்தணி என்னும் ஊர் உள்ளது. சேந்தணியில் வாழ்ந்த நகரத்தார் குடும்பங்களில் பெரியகருப்பன் செட்டியார் குடும்பமும் ஒன்று. அவர் மக்கள் வெங்கடாசலம் செட்டியாரும் வீரப்ப செட்டியாரும் வேறு சில நகரத்தார்களும் சேந்தணியிலிருந்து காரைக் குடிக்குக் குடியேறினர். அதே ஆண்டில் சேந்தணியில் வாழ்ந்த எஞ்சிய நகரத்தார் அனைவரும் ஆறாவயலுக்குக் குடியேறினர். பின்னர் அவர்கள் ஆறாவயலிலிருந்து செஞ்சைக்குக் குடியேறினார்கள்.

நகரக் கோயில் பிரிவு :

இக்குடும்பத்தார் நகரத்தார்களுக்குரிய நகரக் கோவில்கள் ஒன்பதில் ஒன்றான வைரவன் கோயில் பெரிய வகுப்பு பிரிவைச் சேர்ந்தவர்கள்.

முப்பாட்டனார் வீரப்ப செட்டியார் :

இன்று விழாக் காணும் இராமசாமி செட்டியாரின் தந்தையாரின் பாட்டனாராகிய வீரப்ப செட்டியார் என்பவர் காரைக்குடிக்குக் குடி வந்தவர்கள். அவர்கள் கோவிலூர் ஆண்டவர் திருப்பெருந்திரு முத்துராமலிங்க ஞானதேசிகர்

அவர்களின் மாணவராகத் திகழ்ந்தார்கள். அந் நாளில் கோவிலூரில், மாணவர்களுக்கு இறைச்சி யுடன் கூடிய உணவே வழங்கப்பெற்றது. தேவகோட்டையைச் சேர்ந்த துறவு சுவாமிகள் பட்டத்திற்கு வந்த பிறகே இறைச்சி உணவு நிறுத்தப்பட்டு சைவ உணவு மட்டும் பரிமாறும் வழக்கம் கோவிலூர் மடாலயத்தில் மேற்கொள்ளப் பெற்றது. நாளும் இறைச்சி உணவையே உண்டு பழகிவிட்ட வீரப்ப செட்டியார், சைவ உணவு முறை அமலுக்கு வந்த பிறகு கோவிலூர் மடத்தை விட்டு வெளியேறினார்கள். எனினும் வேதாந்தத் திலும் கோவில் திருப்பணி வேலைகளிலும் இவர் களுக்கு ஈடுபாடு இருந்தது.

வீரப்ப செட்டியார், தன் மனைவி இறந்த பிறகு ஒரு துறவி போலவே இருந்து வந்தார். திருமெய்யத்தில் நகரத்தார்கள் கோவில் திருப் பணி செய்த பொழுது இவர் அப்பணிகளை முன்னின்று பொறுப்புடன் கவனித்து வந்தார். சாக்கோட்டையில் கோவில் திருப்பணி நடை பெற்ற பொழுதும் அன்றாட வேலைகளை மேற் பார்ப்பதில் வீரப்ப செட்டியார் ஆர்வமாக ஈடு பட்டார். அந்நாளில் இவருடைய முதுமையை அறிந்து இவருடைய மக்கள் சாக்கோட்டைக்குச் சென்று, ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்தி இவரைக் காரைக்குடிக்கு மீட்டு, தங்கள் இல்லத் தில் அமைதியாக இருந்து எஞ்சிய நாட்களைக் கழிக்கச் செய்தனர்.

இவ்வாறு இருக்கும் பொழுது ஒரு நாள் ''கோவிலூர் ஆண்டவர் என்னை அழைக்கிறார்'' என்று மீண்டும் மீண்டும் குரல் கொடுத்து வீட்டை விட்டு ஓடினார். கோவிலூருக்குச் செல்லும் பொழுது அவர் இயற்கை எய்தினார். இவர்கள் காலமானது புரட்டாசி நவராத்திரிக்கு மறுநாள் ஆகும். குடும்பத்தார் செலவில் இவருக்குச் சமாதி கோவிலூரில் கட்டப்பட்டு அதற்குக் குரு பூசையும் நடந்து வந்தது

பாட்டனார் இராமசாமி செட்டியார்:

வீரப்ப செட்டியாரின் ஒரே மகனான இராமசாமி செட்டியார் (விழா நாயகர் இராமசாமி செட்டியாரின் பாட்டனார்) 19—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார். இவர் தமிழும் வடமொழியும் ஓரளவு படித்திருந்தார். கொப்புடையம்மன் கோயில் மண்டபத்தில் அமர்ந்து புராணம் படிப்பதையும் கதை சொல்வதையும் இவர் தமது அன்றாடக் கடமையாகக் கொண்டிருந்தார்.

சேந்தணிக்கு அடுத்த ஊரான மித்திரா வயல் என்னும் ஊரிலிருந்து பள்ளத்தூருக்குக் குடியேறிய குடும்பங்களுள் ஒன்றே இப்பொழுது புகழுடன் விளங்கும் உ. அ. வகை. முன்னாளில் அடுத்தடுத்த ஊர்களில் வாழ்ந்த காரணத்தால் கொள்வினை, கொடுப்பினை நடந்தன. உ. அ. வகையில் இராமசாமி செட்டியார் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்திருந்தார். மகள் வீட்டிற்குச் சென்று காரைக்குடிக்குத் திரும்பி வரும் வழியில் நடுக்காட்டில் இறந்து விட்டார்.

தந்தையார் வீரப்ப செட்டியார் :

மேலே கூறப்பெற்ற இராமசாமி செட்டியாரின் மகன் வீரப்ப செட்டியார் காரைக்குடியிலேயே தங்கம், பொன், அரிசி முதலிய பொருட்களை வியாபாரம் செய்து வந்தார். இத்தொழில்களில் இவர் காட்டிய திறமையை காரைக்குடி அரசப்ப செட்டியார் (பிள்ளையார்பட்டி கோவில் பிரிவு) அறிந்தார். அரசப்ப செட்டியார் பினாங்கில் ஒரு பெரிய கடைக்கு மேலாளராகச் சென்றார். அந்நாளில் மேலாளாராகச் செல்பவர் தன் விருப்பப்படி யாரை வேண்டுமானாலும் அடுத்த ஆளாக நியமித்துக் கடல் கடந்த நாட்டிற்கு அழைத்துச் செல்லும் உரிமையைப் பெற்றிருந்தனர். அவ் வழக்கப்படி, அரசப்ப செட்டியார் தாம் மெச்சிய வீரப்ப செட்டியாரை அடுத்த ஆளாகப் பினாங்கிற்கு அழைத்துச் சென்று ஒரு கணக்கு முடிந்ததும் ஊருக்கு அழைத்து வந்து தம் மகளையே அவருக்குத் திருமணம் செய்து வைத்தார்.

திருமணத்திற்குப் பின்னர் வீரப்ப செட்டியார் சிங்கப்பூருக்கு ஒரு கடையின் மேலாளராகச் சென்றார். அக்காலத்தில் சொந்தத்திலும் தொழில் செய்து வந்தார். சொந்தத் தொழில் சரிவராததால், வேறு ஒருவருக்கும் பங்கு வைத்து புதிதாகக் கூட்டுத் தொழில் தொடங்கினார்.

அடுத்த கணக்கிற்குச் சென்ற பொழுது 7000 வெள்ளி மூலதனத்தில் சொந்தமாகவே தொழில் செய்து நல்ல லாபம் ஈட்டினார். அதன் பிறகு

அதைத் தொடர்ந்து பர்மா நாட்டில் ஈந்தட்டா, தலூன் என்ற இரண்டு ஊர்களிலும் தொழில் தொடங்கினார்கள். இந்த மூன்று தொழில்களின் வருவாயைக் கொண்டு (இப்பொழுது இராமசாமி தமிழ்க் கல்லூரி இருக்கும் இடத்தினருகே) பெரிய தொரு மனையிடம் வாங்கினார்கள். 1908-ஆம் ஆண்டில் பர்மாவில் பொருளாதார மந்தமேற் பட்டு வீரப்ப செட்டியாருடைய இரண்டு கடை களையும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் விளைவாக காரைக்குடியில் வாங்கியிருந்த (மேலே குறிப்பிடப்பட்ட) மனையிடத்தை விற்க நேரிட்டது.

இவருடைய (முதல்) மனைவியும் அவருக்குப் பிறந்த ஆறு மக்களும் இறந்தனர். அதன் பின்னர் இரண்டாவது மனைவியாக கருங்குளம் உமையாள் ஆச்சியைத் திருமணம் செய்து கொண்டார்கள். அதன் பின்னரே குடும்பம் ஏற்றம் பெற்றது.

பர்மாக் கடைகளை மூடிய பிறகு வீரப்ப செட்டியார் சிங்கப்பூர்த் தொழிலை முன்னிலும் கூடுதலான கவனத்துடன் நடத்தி வரலானார்கள். கடன் கொடுத்த பாக்கிக்காக மர அறுவை ஆலை ஒன்றையும் ஒப்புக் கொண்டு நடத்தி வந்தார்கள். அதுவரை நகரத்தார்கள் இத்தகைய தொழில் களை நடத்தியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வீரப்ப செட்டியார் தம் காலம் நெருங்கி விட் டதை அறிந்தார் போலும். 1913–ஆம் ஆண்டில் அவர் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார். அது

தான் அவர் கடைசியாகச் சிங்கப்பூருக்கு மேற் கொண்ட பயணம். போய்ச் சேர்ந்த ஓராண்டில் அங்கேயே காலமாகி விட்டார்.

வீரப்ப செட்டியார் இவ்வாறு புறப்பட்டுப் போகும் பொழுது அவருடைய மூத்த மகன் இராமசாமி செட்டியாருக்கு வயது பதின்மூன்று. இராமசாமி செட்டியார் அப்பொழுது காரைக்குடி யில் படித்துக் கொண்டிருந்தார். அவர் படித்தது ரெங்கவாத்தியார் திண்ணைப் பள்ளியில்தான். ஐத்தாவதுவரை படித்திருந்தார்.

இராமசாமி செட்டியாருடன் படித்தவர்களுள் ஒருவர் காரைக்குடியில் அக்காலத்தில் பெருஞ் செல்வராக இருந்த ராம. வீர. மு. வீரப்ப செட்டி யார் மகன் முத்துக்கருப்பன் செட்டியார் என்ப வராவார். இவர் பிற்காலத்தில் வி. ஆர். எம். செட்டியார் என்று தம் பெயரைச் சுருக்கிக் கொண் டார். இவர் கவியரசர் இரவீந்திரநாத் தாகூரு டன் நெருங்கிப் பழகியவர். அவரைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தவர். ஆங்கி லத்திலும் தமிழிலும் ஆழமான புலமை பெற்றுச் சிறந்த இலக்கிய விற்பன்னராக விளங்கினார்.

மேலே சொல்லப்பட்ட வி. ஆர். எம். செட்டி யார் திருச்சி புனித ஜோஸப் உயர்நிலைப் பள்ளிக்கு மேற்படிப்பிற்குச் சென்றார். அவருடன்

சேர்ந்து இராமசாமி செட்டியாரும் படிக்கச் செல்வதென்று ஏற்பாடாயிருந்தது. ஆனால் வீரப்ப செட்டியார் திடீரென்று அத்திட்டத்தைக் கைவிட்டார். தன் மகன் இராமசாமியைக் கூப்பிட்டார். ''இராமையா எனக்கு உடல்நிலை சரியில்லை. ஆகையினால் இனி நீ படிக்க வேண்டாம். நான் சிங்கப்பூருக்குச் செல்வதால் நீயும் என்னுடன் வந்து நம் குலத் தொழிலைக் கற்றுக்கொள்,'' என்று கூறினார்கள். தந்தையும் மகனும் சிங்கப்பூருக்குச் சென்றார்கள். இருவருமாக அங்கு இருந்தது ஓராண்டு காலம் தான். "அப்பொழுது நான் படித்தது தொழில். அந்தப் பதின்மூன்றாவது வயதிலேயே தொழில் முழுவதும் நான் கற்றுக்கொள்ளும்படியான வாய்ப்புக்களைச் செய்து கொடுத்தார்கள்,'' என்று தந்தையாரைப் பற்றி இராமசாமி செட்டியார் அவர்கள் சொல்கிறார்கள்.

வீரப்ப செட்டியார் ஒவ்வொரு நாளும் காலை 5 மணிக்கு எழுந்து தெய்வப் பாடல்களைப் பாராயணம் செய்வார். பின்னர் முதலைக்காவில் ஏறி இரும்பு பஜாரை அடைந்து அங்கிருந்து படகில் எதிர்க்கரைக்குச் சென்று மர அறுவை ஆலையைக் கவனிப்பார்கள்.

பிறகு வருகிற ஒரு படகில் கடை ஊழியர் ஒருவர் காலைச் சிற்றுண்டியும் வெற்றிலையும், முதலாளிக்கு மர அறுவை ஆலைக்குக் கொண்டு போவார்.

பகல் உணவிற்கு வீரப்ப செட்டியார் கிட்டங்கிக்கு வந்து அதன் பின்னர் மீண்டும் படகில் மர ஆலைக்குச் செல்வார்.

ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்குச் செல்வார். வெள்ளிக்கிழமைகளில் தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் செல்வார். இரண்டு கோவில்களுக்கும் போய்வர ஒன்றரை மணி நேரமாகும். இவ்வாறு இரண்டு கோவில்களுக்கும் 52 வெள்ளிக்கிழமைகளில் தந்தையும் மகனும் சென்று வந்தனர். அப்பொழுது தான் தொழில் நுட்பங் களையும் பிற அறிவுரைகளையும் வீரப்ப செட்டியார் தன் மகன் இராமசாமி செட்டியாருக்குக் கூறிவந்தார். அந்த $52 \times 1\frac{1}{2}$ மணி நேரத்தில், தந்தையிடமிருந்து அறிந்து கொண்டவற்றை மிகப்பெரிய மூலதனமாகக் கருதுகிறார்.

''என் காலம் நெருங்கி வருகிறது. நீ தான் கடைக்கு முதலாளி. எப்பொழுதுமே கடைக்கு முதலாளியாக நடந்து கொள்ள வேண்டும். யாருக்கும் எச்சில் பணிக்கம் தூக்கக்கூடாது. கிட்டங்கியில் பெட்டியடியில் உட்காரக்கூடாது. முதலாளிகள் உட்காருவதற்குரிய பெஞ்சில் தான் உட்காரவேண்டும். ஐந்தொகை பார்க்கத் தெரிய வேண்டும். வட்டிச்சிட்டை போடவும், சரி பார்க்கவும் பழகிக்கொள்ள வேண்டும்,'' என்று வீரப்ப செட்டியார் தம் மகனுக்கு அறிவுறுத்தினார்.

தந்தை கூறியதை மகன் இராமசாமி செட்டியார் வேத வாக்காகக் கடைப்பிடித்தார். அதன் பயனாக சிங்கப்பூரிலிருந்த நகரத்தார் கடைக்காரர் அனைவரும் தங்கள் ஐந்தொகை களையும் வட்டிச் சிட்டைகளையும் இராமசாமி செட்டியாரிடம் சரி பார்த்துக்கொள்வதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

மகன் இராமசாமி, சிறுவனாக இருந்ததால் அவனால் மர ஆலையை நிர்வகிக்க முடியாதென்று நினைத்து அதை விற்று விடுவதற்கான ஏற்பாட் டையும் வீரப்ப செட்டியார் செய்தார்.

தன் காலம் மிக நெருங்கி விட்டதை அறிந்து எல்லா அதிகாரங்களையும் பொறுப்பான ஒரு வருக்கு வழங்க வீரப்ப செட்டியார் முடிவு செய்தார். தம் மகனுக்கு 18 வயது ஆகாததால் அதிகாரப் பத்திரத்தை **(Power of Attorney)** அவர் பெயருக்குப்பதியஇயலவில்லை. ஆண்டியப்ப செட்டியார் என்பவரைக் கடை மேலாளராக நியமித்து அவருக்கே அதிகாரம் வழங்கும் பத்திரத் தைப் பதிந்து கொடுத்தார்.

வீரப்ப செட்டியார் எப்பொழுதும் ஒரு தடிக் கம்பு வைத்திருந்தார். அதை அவர் தம் உயிரினும் மேலாக மதித்தார். ஒரு நாள் படகில் செல்லும் பொழுது அத்தடிக்கம்பு படகிலிருந்து தண்ணீருக் குள் விழுந்து விட்டது. அதை மீட்க முடியவில்லை. அந்நிகழ்ச்சிக்குப் பிறகு எட்டாம் நாளில் வீரப்ப செட்டியார் காலமானார்.

தந்தையாரின் இறுதிச் சடங்குகளைச் சிங்கப் பூரிலேயே செய்து முடித்துவிட்டு, இராமசாமி செட்டியார் தொடர்ந்து அங்கேயேதங்கி தொழில் களைக் கவனித்து வந்தார்.

விழா நாயகர் இராமசாமி செட்டியார்:

தகப்பனார் இறந்து ஓராண்டாகி அவருக்குத் தலைத்திதி கொடுப்பதற்காக இராமசாமி செட்டியார் காரைக்குடிக்கு வந்தார். அதுவரை இராமசாமி செட்டியார் கடை முதலாளியாகவும், ஆண்டியப்ப செட்டியார் சட்டப்படி அதிகாரம் பெற்ற மேலாளராகவும், நிர்வாகியாகவும் இருந்து வந்தனர். ஒரு நாள் அவர், ''இராமையா நடப்புக் கணக்குப் புத்தகத்தைக் கொண்டுவா'' என்று அதிகாரம் தொனிக்கச் சொன்னார். இராமசாமி செட்டியார் கணக்கைக் கொடுத்தார். ஏஜெண்ட் ஆண்டியப்ப செட்டியார் அதை வாங்கி பக்கம் பக்கமாகப் புரட்டிப் படித்துப் பார்க்கத் தொடங்கினார். இராமசாமி செட்டியார் உடனே கணக்குப் புத்தகத்தைப் பிடித்து இழுத்தார். ''நான் எழுதித் தருகிற கணக்கை நீங்கள் வாங்கி வைத்துக் கொள்ளலாமே தவிர சரி பார்க்கக் கூடாது'' என்று இராமசாமி செட்டியார் சொன்னார். அதைத் தொடர்ந்து இருவருக்கு மிடையே உறவு பாதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி நடந்த ஒரு மாதத்தில் ஆண்டியப்ப செட்டியார் தாயகத்திற்குத் திரும்பி விட்டார்.

வீட்டிற்கு வந்த ஆண்டியப்ப செட்டியாரை அவருடைய தகப்பனார் வரவேற்கவில்லை. அவரைப் பார்த்து அவருடைய தகப்பனார் முகம் சுளித்தார். ''உன்னுடைய சம்பளச் சீட்டின் காலமாகிய ஒரு கணக்கு முடியு முன்னர் இங்கே வருவதற்கு உரிமை யில்லை. அது நகரத்தார் களுடைய மரபும் அன்று. உடனே திரும்பிப் போ'' என்று கண்டிப்பாகச்சொன்னார். அவ்வாறே ஆண்டியப்ப செட்டியார் இராம. வீர. கடைக்கு மறுபடியும் சென்றார்.

தந்தையார் திதிக்காக இராமசாமி செட்டியார் காரைக்குடிக்கு வந்ததும் அவருக்குத் திருமணமும் நடைபெற்றது. அப்பொழுது அவருக்கு வயது பதினாறு. காலி வீட்டு இராமன் செட்டியார் என்பவருடைய மகள் அலமேலு ஆச்சி என்பவர்களே இராமசாமி செட்டியார் மனைவியாவார் இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. வள்ளியம்மை ஆச்சி என்ற அந்தப் பெண்ணுக்கு உரிய பருவம் வந்ததும் அவர் திரு. கணேசன் செட்டியாருக்குத் திருமணம் செய்து வைக்கப் பெற்றார்.

மனைவி அலமேலு ஆச்சி இறந்த பிறகு இராமசாமி செட்டியார் (கருங்குளத்திலிருந்து காரைக்குடிக்குக் குடிவந்த) தன்னுடைய தாய் மாமன் திரு நா. சித. நாராயணன் செட்டியார் மகள் நாச்சம்மை ஆச்சியை இரண்டாவது மனைவி யாகத் திருமணம் செய்து கொண்டார்.

இராமசாமி செட்டியார் தம்முடைய பதினாறாம் வயதில் இரண்டாவது தடவையாகச் சிங்கப்பூருக்குப் பயணமானார். அப்பொழுது மதுரைக்குப் போய் மீனாட்சி அம்மனை வழிபட்டு ஓரிரு நாட்கள் அங்கு தங்கி இருந்துவிட்டுப் பிறகு சிங்கப்பூருக்குச் சென்றார். மதுரையில் மங்கம்மா சத்திரத்தில் இவர் தங்கியிருந்த பொழுது இவருடைய தாயார் மதுரைக்குச் சென்றார்கள். "நீ சிறு பையன். தொழில் செய்ய உனக்கு வயது போதாது. நீ போனால் கடை கெட்டுப்போகும். நீ போக வேண்டாம். வா, காரைக்குடிக்குப் போவோம்" என்று அவருடைய தாயார் பயணத்தை வழி மறித்தார்கள்.

"நான் ஆண் குழந்தை. பெண் குழந்தைகள் வீட்டிலிருக்க வேண்டும். ஆண் மக்கள் திரைகடல் ஓடியும் திரவியம் தேட வேண்டும். அதுதான் நம் மரபு. நீ தடுக்க வேண்டாம். நான் கட்டாயம் போய்த்தான் தீருவேன். நம் குடும்பத்துப் பணம் செட்டிய வீடுகளில் டெப்பாசிட்டாக 70,000 வெள்ளிகள் இருக்கின்றன. அதில் 12,000வெள்ளி களை மட்டும் வாங்கி நான் தொழில் செய்கிறேன். என்ற நிபந்தனையின் பேரில் புறப்பட வழிவிடு" என்று இராமசாமி செட்டியார் சொல்லிப் பயணமானார்.

கொடுக்கல் வாங்கல் தொழில்

சிங்கப்பூர் சென்றதும் 12,000 வெள்ளிகளுக்கு மட்டும் தொழில் செய்தார். அந்தப் பணம் முழுவதும் மலாய்க்காரர்களுக்கே கடன் கொடுத்

தார். அந்தப் பணம் ஒன்று கூட வசூலாகவில்லை. 12,000 வெள்ளிகளையும் இழக்க நேரிட்டது. இதைப் பக்கத்துப் பெட்டியிலிருந்த நண்பர் மெய. மெ. சோமசுந்தரம் செட்டியார் கேள்விப்பட்டு உண்மைதானா? என்று கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தார். பிறகு இருவருமாக யோசனை செய்தனர். இராமசாமி செட்டியார் தம் குடும்பத்துப் பணம் செட்டிய வீடுகளில் அடைத்து வைத்திருந்ததில் மேலும் 12,000 வெள்ளிகளை வாங்கிப் புதிதாக மிகவும் எச்சரிக்கையுடன் தொழில் செய்தார். இப்பொழுது தொழில் நல்ல லாபத்துடன் நடந்து வந்தது. சைகோன் அ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் சிங்கப்பூருக்கு வந்து இந்தத் தொழில் நன்றாக நடைபெறுவதை நேரில் பார்த்து மகிழ்வடைந்தார். அவர் காரைக்குடிக்கு வந்ததும் தம் மகளை இராமசாமி செட்டியாரின் தம்பி பெரியகருப்பன் செட்டியாருக்குத் திருமணம் செய்வித்தார். ''நீங்கள் படித்தது போதும். சிங்கப்பூருக்குப் போய்த் தொழிலைக் கவனியுங்கள்'' என்று மாப்பிள்ளைக்கு அறிவுறுத்தினார்.

மர அறுவை ஆலை

மர அறுவை ஆலையில் ஒரு சிலருக்கு 80% பங்கும், இராமசாமி செட்டியார் பொதுக் கடைக்கு 20% பங்கும் இருந்தது. பங்குகளைப் பங்குதாரர்களுக்குத்தான் விற்றுக் கொள்வது என்றும் வெளியில் விற்பதில்லை என்றும் ஒப்பந்தம் இருந்தது.

இராம வீர. கடைக்குரிய பங்கிற்கு 40,000 வெள்ளி விலை மதிக்கப்பட்டது. 10,000 வெள்ளி கள் மட்டுமே அந்தச் சீனரால் ரொக்கம் கொடுக்க முடிந்தது. பாக்கி 30,000 வெள்ளிகளுக்கு அந்தச் சொத்தையே அடமானமாக எழுதி வட்டியை வசூலித்துக் கொண்டிருந்தார்கள். அசலில் ஒரு சிறு பகுதியை மட்டுமே அவர்களால் கொடுக்க முடிந்தது. அந்தச் சீனரால் தன்னுடைய வரவு செலவுகளைச் சரிக்கட்ட முடியாமல் அவர் பெருங் கடனாளி ஆனார். மர ஆலையை இராமசாமி செட்டியார் ஏலத்தில் எடுத்து 1922—இல் அதன் முழுப் பொறுப்பையும் ஒப்புக்கொண்டு அந்தச் சீனரையே சம்பளம் பேசி அவரை நிர்வாகியாக வைத்து அதன் உற்பத்தியைப் பெருக்கினார்கள்.

1930—இல் அந்த ஆலையில் நெருப்புப் பற்றி பெரும் சேதம் ஏற்பட்டது. பெரும் மூலதனம் போட்டு மீண்டும் அந்த ஆலையைப் புதுப் பித்தனர்.

1942—இல் ஜப்பானியர் ஆட்சியில், அரசினர் அந்த ஆலையை ஒப்புக் கொண்டனர். ஜப்பான் ஆட்சி நீங்கிய பிறகு இக்குடும்பத்தார் மீண்டும் அந்த ஆலையையும் புதிதாக ஐந்து ஆலை களையும் ஒப்புக் கொண்டார்கள். இந்த ஆறு ஆலைகளையும் சேர்த்து ஒரே யூனிட்டாக நடத் தினார்கள். அப்பொழுது சிங்கப்பூரில் 27 மர அறுவை ஆலைகள் இருந்தன. 26 ஆலைகள் தொடர்ந்து நஷ்டத்தில் நடந்தன. இவர்களுடைய ஆலை மட்டுமே லாபத்துடன் நடந்து வந்தது.

இவர்களுடைய ஆலை ஒன்று மட்டுமே லாபம் ஈட்டியதற்குக் காரணம் இவர்களுடைய கண்காணிப்பும் கவனமும் தான். காலையில் துயில் எழுந்ததும் சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டு மர ஆலைக்குச் செல்வார்கள். 11 மணி வரையில் அங்கே இருந்து கப்பலில் ஒவ்வொரு நாளும் ஏற்றுகிற சரக்குகளைப் பட்டியலுடன் சரிபார்த்தும், சரக்குகளின் நீளம், அகலம், கனம் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்த்தும் அதன் பிறகே ஏற்ற அனுமதிப்பார்கள்.

அதன் பிறகு அறுவை வேலையைக் கவனிப்பார்கள். அதிலும் ஏமாற்று வேலைகள் நிறைய இருக்கும். ரம்பம் ஒரே நிலையில் இருக்காது, ரம்பத்தூள் குழியில் அதிகமாக விழுந்துவிடும். கண்ணை இமை காப்பது போல் தொழிலில் திருட்டு நடந்து விடாதபடி பார்த்துக் கொள்வார்கள். பிற ஆலைகளில் முதலாளி நடப்பார். ஆலை நிற்கும். இவருடைய ஆலையில் முதலாளி நிற்பார். தொழில் நடக்கும்.

குப்பையிலே கோடி தனம் :

சிங்கப்பூர் நகராண்மைக் கழகத்தில் வேஸ்ட்டேஜ் என்று செலவெழுதி தேவையில்லா மரங்களை விற்றுவிடுவார்கள். இக்குடும்பத்தார் அம்மரங்களை விலை மதித்து விலைப்புள்ளி (டெண்டர்) அனுப்புவார்கள். அவ்வாறு செய்த தொழிலில் ஆண்டு தோறும் 50,000 வெள்ளிகள்

முதல் 60,000 வெள்ளிகள் வரை லாபம் கிட்டியது. ''அந்தப் பணத்தைக் கொண்டு தான் சிங்கப்பூரில் சொத்து வாங்கினோம். பாடுபட்டோம், உழைத்தோம், வெட்டிச் செலவு செய்யவில்லை. அதுதான் எங்கள் வெற்றியின் இரகசியம்'' என்று இராமசாமி செட்டியார் அவர்கள் சொல்கிறார்கள்.

கோந்தான் கடை :

பாகனேரி பெரி. அ. மு. குடும்பத்தார் சிங்கப்பூர்க் கடைக்கு மேலாளராக இருக்கும்படி ராமசாமி செட்டியாரைக் கேட்டார்கள். 6,000 வராகன் சம்பளம் என்று முடிவு செய்யப்பட்டது.

இது நிகழ்ந்தது காரைக்குடியில் சேந்தணியார் வீட்டுக் கல்லுக்கட்டி வீட்டில். அப்பொழுது கண்டரமாணிக்கம் மெ. சி. சொக்கலிங்கம் செட்டியார் அங்கு வந்து சேர்ந்தார். பாகனேரி ஆட்கள் அங்கு வந்த காரணத்தை இராமசாமி செட்டியாரிடம் துருவித் துருவிக் கேட்டார். அவர்களுடைய சிங்கப்பூர்க் கடைக்குத் தாம் சம்பளச் சீட்டு எழுதிக்கொடுக்கப்போவதாகச் சொன்னார்.

''நாங்கள் அண்ணன், தம்பி மூன்று பேர் இருக்கிறோம். மூன்று பேர்களுக்கு எங்கள் கடையில் வேலையில்லை. எனவே ஒருவர் பெரிய கடைக்கு ஏஜண்டாகச் செல்லலாம் தானே. தம்பிகள் சின்னப் பிள்ளைகள். அவர்களைப் போகச் சொல்லக்கூடாது. நான் தான் சம்பளத்திற்குப்போக வேண்டும்'' என்று இராமசாமி செட்டியார் சொன்னார்.

''என்னுடைய முதலாளிக்கும் எனக்கும் கூட்டாகக் கோர்ந்தானில் கடை இருக்கிறது. நான் முதலாளியுடன் வெட்டிக் கொள்கிறேன். பிறகு நம் இருவருக்கும் சரி பங்கு வைத்துப் புதிதாகக் கடை தொடங்குவோம். சம்பளத்திற்கு மேலாள் சேர்க்க வேண்டாம். இருவருமாக மாறி மாறி கொண்டு விற்போம்'' என்று கண்டரமாணிக்கம் சொக்கலிங்கம் செட்டியார் சொன்னார். இராமசாமி செட்டியாருக்கு இந்த ஏற்பாடு கவர்ச்சியாகத் தெரிந்தாலும் பாகனேரிக்காரர்களுடன் வாய்ப் பேச்சாகச் செய்து கொண்ட ஏற்பாட்டிலிருந்து பின் வாங்க முடியவில்லை.

இதற்கிடையில் பாகனேரி பெரி. அ. மு. குடும்பத்தார் இடைக்காட்டூர் என்ற கிராமத்தை விலைக்கு வாங்கியிருந்தார்கள். ஒரு கிராமத்தை நகரத்தார்கள் விலைக்கு வாங்கினால், நல்ல நாள் பார்த்துத் தோரணம் கட்டி ஒரு பெரிய விழா நடத்துவது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. பெரி. அ. மு. குடும்பத்தார் இடைக்காட்டூர் கிராமத்திற்குத் தோரணம் கட்டு விழாவிற்கு இராமசாமி செட்டியார் வரவேண்டும் என்றும் அதற்குப் பிறகு சம்பளச் சீட்டு எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடாகியிருந்தது. சித்திரா பௌர்ணமியன்று அந்த விழா நடந்தது.

வைகைக் கரையில் அழகர் ஆற்றில் இறங்கும் விழாவைப் பார்த்து விட்டு இடைக் காட்டூருக்குப் போய் பிறகு சம்பளச் சீட்டை

எழுதிக் கொடுப்பது என்ற திட்டத்துடன் இராமசாமி செட்டியார் காரைக்குடியிலிருந்து புறப்பட்டார். சித்திரைத் திருவிழாவில் ஆற்றங் கரையில் இவர் அழகர் ஆற்றில் இறங்குவதைக் கவனித்துக் கொண்டிருந்த பொழுது திருடன் ஒருவன் கத்தியால் இவருடைய பணப் பையை அறுத்து விட்டான். சகுனம் சரியில்லை என்று நினைத்துப் பாகனேரியார் கடைக்குப் புறப்பட்டுப் போகும் எண்ணத்தை இராமசாமி செட்டியார் கைவிட்டு விட்டுக் காரைக்குடிக்குத் திரும்பினார்.

பிறகு சொக்கலிங்கம் செட்டியாருடன் பங்கு சேர்ந்து கோந்தானில் கடை வைத்தார். 1930 ஆம் ஆண்டில் ரப்பர் விலை வீழ்ச்சியால் இவர் களுடைய கோந்தான் கூட்டுக் கடைக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. அக்கடைக்குத் தேவைப்பட்ட மேல் பணம் முழுவதையும் சிங்கப்பூரிலுள்ள நகரத்தார் கடைகளில் கடனாக வாங்கியிருந்த தால், அவரே அவற்றைத் திருப்பிக் கொடுக்க நேரிட்டது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கடையில் செல்வம் கொழித்தது. ஒவ்வொரு மாதமும் 5,000 வெள்ளிகள் முதல் 7,000 வெள்ளிகள் வரை ஆதாயம் கிடைத்தது. அப் பணத்தைக் கொண்டு ரப்பர்த் தோட்டங்களும், நகர்ப்புறச் சொத்துக்களும் வாங்கப்பட்டன.

இராணுவத்திற்குப் பொருள் வழங்கல்:

1945-இல் இரண்டாம் உலகப் போர் முடி வடைந்தது. அதற்குச் சில வாரங்கள் முன்னரே பிரிட்டிஷ் படை சிங்கப்பூரில் இறங்கியது. அதைத் தொடர்ந்து மேலும் மேலும் அங்கு வரவழைக்கப் பட்டது. மவுண்ட் பேட்டன் பிரபுவின் தலைமை

யில் தென் கிழக்காசியாவின் தலைமைத் தளமாக சிங்கப்பூர் அமைந்தது. அங்கு தங்கியிருந்த படை வீரர்களுக்கு மீன் வழங்குவதற்கு திரு. சிதம்பரம் செட்டியாரும் திரு பிரான்சிசும் இணைந்து ஓராண்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு நாளும் 5,000 பவுண்டு எடையுள்ள மீன்களை விற்று வந்தனர். ஒரு பவுண்டுக்கு 50 காசு வீதம் லாபம் கிடைத்தது.

கப்பல்களுக்குப் பொருள் வழங்கும் வியாபாரம்: (ஷிப் சாண்டிலியர்ஸ்)

கப்பல்களுக்குத் தேவைப்படும் பொருட்களை அவ்வப்பொழுது வழங்கும் தொழில் ஒன்றை 1947–இல் இக்குடும்பத்தார் சிங்கப்பூரில் தொடங்கினர். இதனைத் தொடங்கியவர்கள் திரு சிதம்பரம் செட்டியாராவர்.

இத்தகைய தொழிலை அந்நகரில் ஒரு நிறுவனம் செய்து வந்தது. அந்த நிறுவனத்திற்கு ராம. வீர. கடையில் கொடுக்கல் வாங்கல் இருந்தது. அந்த நிறுவனத்தில் மொழி பெயர்ப்பாளராக (Dhubash) வேலை பார்த்த பிரான்சிஸ் என்பவர் அந்த நிறுவனத்திலிருந்து விலகிக் கொண்ட பிறகு இக்குடும்பத்துடன் கூட்டாக அதே தொழிலில் புதிதாக ஈடுபட்டார். இராமசாமி செட்டியாருடைய தம்பி சித. பெயரையும் பிரான்சிஸ் பெயரையும் இணைத்து (Chida Francis) என்ற

பெயரால் சில ஆண்டுகள் இந்தத் தொழில் நடை பெற்றது. ஒரு தடவை கப்பலுக்கு விற்ற பொருட்களில் மட்டும் 1,40,000 வெள்ளிகள் லாபம் கிடைத்தன.

இராம. அ. வட்டிக்கடை:

இக்குடும்பத்திற்கும் பிரான்சிஸ் குடும்பத்திற்கும் கூட்டாக ஒரு வட்டிக்கடை நடந்தது. அந்தக் கடையின் விலாசம் இராம. அ. என்பது. இந்த விலாசத்தில் 'அ' என்பது திரு. பிரான்சிஸின் மனைவியைக் குறிப்பதாகும். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு கூட்டாக நடந்த இரு தொழில்களையும் இரு குடும்பத்தினரும் பிரித்துக் கொண்டனர். பிரித்துக் கொண்ட இரு மாதங்களில் திரு பிரான்சிஸின் உடல் நலம் குன்றியது. சிறிது காலத்தில் திரு பிரான்சிஸ் காலமானார்.

நாணயத்தால் கிடைத்த லாபம் :

இக்குடும்பத்தாரிடம் மிகப் பெரிய இரும்புப் பெட்டிகள் இரண்டு இருந்தன. இவர்களுடைய தொழில் முறையையும் நாணயத்தையும் அறிந்த முஸ்லிம்கள் சிலர், யாருக்கும் தெரியாமல் ஜப்பானியர் ஆட்சிக் காலம் முழுவதும் பதுக்கி வைத்திருந்த பிரிட்டிஷ் நோட்டுகளைப் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டவுடன் நம்பிக்கையாக இக்குடும்பத்தினரிடம் கொடுத்து வைத்திருந்தனர். இன்றியமையாது தேவைப்படும் பொழுது தேவைப்படும் தொகையை மட்டும் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு வட்டியில்லாமல் இக்குடும்பத்தினரிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்த தொகை 2,00,000 வெள்ளிகள் முதல் 3,00,000 வெள்ளிகள் வரை இருக்கும். திடீரென்று பணத்தைக் கொடுத்து வைத்திருந்தவர்கள் கேட்டால் அவர்களுக்குக் கொடுப்பதற்காக 40,000 வெள்ளிகளை இரும்புப் பெட்டியில் வைத்திருந்தார்கள். எஞ்சிய பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்கினார்கள். அப்பொழுது பிரிட்டிஷ் நோட்டு புதிதாக அச்சுப் போடப்படவில்லை. 1941 வரை அச்சுப் போடப்பட்டிருந்த பிரிட்டிஷ் நோட்டுக்களை யார் வைத்திருந்தார்களோ அவர்களிடமிருந்த பிரிட்டிஷ் நோட்டுக்கள் மட்டுமே புழக்கத்திலிருந்தன. ஜப்பான் நோட்டு செல்லாக் காசாகி விட்டது. இந்த நிலையில் வியாபாரிகள் 48% வரை வட்டி கொடுத்தேனும் வாங்கி வியாபாரம் செய்ய வேண்டிய நிலையிலிருந்தனர். இதனால் இராம. வீர. குடும்பத்தாரின் தொழில்கள் நூற்றுக்கு மேல் ஊற்று என்ற நிலையை அடைந்தன.

சில சிறப்பியல்புகள் :

இக்குடும்பத்தார் கடைப்பிடித்து வரும் தொழில் முறைகளுள் சில தனிச் சிறப்புக்கள் உண்டு.

பொதுவாக நகரத்தார் குடும்பங்களில் ஒரு மேலாளர் ஒரு கணக்கு (மூன்றாண்டுகள்) தொழில் செய்வது வழக்கம். ஆனால் இவர்கள் குடும்பத்தில் ஓராண்டு முடிந்ததும், அடுத்தவரிடம் பொறுப்பை ஒப்புவிப்பது மரபு.

நகரத்தார் குடும்பங்கள் பிறவற்றில் சம்பளத்திற்குப்பிறரை அனுப்புவார்கள். ஆனால் இவர்கள் அண்ணனும் தம்பிமாருமே மாறி மாறிக் கடைப் பொறுப்புகளைக் கவனித்து வந்திருக்கிறார்கள். ஒருவர் போய் ஓராண்டு முடிவடைந்ததும் அடுத்தவர் காரைக்குடியிலிருந்து புறப்பட்டுச் சிங்கப்பூருக்குச் செல்வார். கப்பலிலிருந்து இறங்கியதும் அவரைக் கிட்டங்கிக்கு அழைத்துச் சென்று பின்னர் இருவருமாகச் சிங்கப்பூர்த் தண்டாயுதபாணி கோவிலுக்குச் சென்று வழிபடுவர். கோயிலுக்குச் சென்று கிட்டங்கிக்குத் திரும்பியதும் ஊரிலிருந்து வந்தவர் பெட்டியடியில் உட்காருவார். கணக்கு ஒப்பிப்பதோ சாவியைக் கொடுப்பதோ இருப்பைச் சரி பார்ப்பதோ வேறு விபரங்களை ஒருவரை ஒருவர் கேட்பதோ கிடையாது. இன்றியமையாதது கேட்க வேண்டி நேரிட்டால் அடுத்த ஆளைக் கேட்டுக் கொள்வது தான் வழக்கம். சிங்கப்பூர்க் கடையில் ஓராண்டு கடை பார்க்கின்றவர்களின் விருப்பப்படியே கொடுக்கல் வாங்கல் நடைபெறும். கடைக் கண்காணிப்பு முழுவதும் (Control) அவர்கள் தான் பிறர் தலையிடுவதில்லை.

அதே கப்பல் சிங்கப்பூரிலிருந்து திரும்பும் பொழுது பழையவர் தாயகத்திற்குப் புறப் படுவார்.

தம்பிமார்கள் :

இராமசாமி செட்டியாரும் அவருடைய தம்பி மார்கள் பெரியகருப்பன் செட்டியாரும், சிதம்பரம் செட்டியாரும் மிகவும் ஒற்றுமையுடன் இருந்து வந்திருப்பது இக்குடும்பத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகும். தம்பிமார்களும்

பல்லாண்டுகள் சிங்கப்பூரில் இருந்து, அண்ணன் அறிவுரையை அணுவளவும் மீறாது குடும்பச் சொத்துக்களைப் பேணியும் தொழில்களை வளர்த்தும் வந்திருக்கின்றனர்.

இராமசாமி செட்டியாரின் பொதுப்பணிகள்

கல்விக்கொடை :

பொதுப் பணிகளில் ஈடுபட விரும்பிய இராமசாமி செட்டியார் சிங்கப்பூரில் தம்முடைய பொறுப்புக்களைக் குறைத்துக் கொள்ள விரும்பித் தம் தம்பிமார்களுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டார். பவ அல்லது யுவ ஆண்டில் தன் மகன் இராம பெரியகருப்பனுக்கும் பங்கு பிரித்துக் கொடுத்தார். 1958ஆம் ஆண்டில் 2, 00, 000 வெள்ளிகளை சிங்கப்பூரில் எடுத்து வைத்து இந்தியாவில் இராமசாமி செட்டியார் கல்வி அறப்பணி என்ற நிறுவனம் அமைத்தார்கள்.

இந்த நிதியிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்களுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் வழங்கப் படுகிறது. இதுவரை ரூ. 15, 00, 000/– வழங்கியுள்ளார்கள்.

திருமண உதவி :

நகரத்தார்கள் ஏழ்மை நிலையில் இருப்பவர்கள் சிக்கனமாகத் திருமணம் செய்து கொள்ள

இசைந்த மணமக்களுக்கு இவர்களுடைய செலவில் இவர்கள் வீட்டிலேயே திருமணங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். இவ்வாறு நடை பெற்றிருக்கும் திருமணங்களின் எண்ணிக்கை 23.

சிங்கப்பூர் நகரத்தார் அறப்பணிக் கழகம் :

இவர்களுடைய பெரும் முயற்சியால் சிங்கப்பூர் நகரத்தார்களுக்குரிய பொதுப் பணத்திலிருந்து சிங்கப்பூர் நகரத்தார்களால் அனுப்பப்பெற்று 25,00,000 ரூபாயை இந்தியா விற்கு வரவழைத்து அதனின்றும் கிடைக்கும் வட்டிப் பணத்தை நகரத்தார் சமூக மாணவர் களுக்கு கல்விக் கொடையாகவும், திருமணக் கொடையாகவும் கடந்த 16ஆண்டுகளாக வழங்கப் பட்டு வருகின்றது. இந்த ஏற்பாட்டைச் சிங்கப்பூர் நகரத்தார்கள் செய்யவேண்டும் என்று இராமசாமி செட்டியார் அவர்கள் நெடுங்காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். கடந்த 16 ஆண்டுகளாக இவர்களே இக்குழுவின் தலைவராக இருந்து வருகிறார்கள்.

குருகுலம் :

இராமசாமி செட்டியார் அவர்களுடைய நெருங்கிய நண்பர் ஒருவரைக் குறிப்பிட வேண்டும். திரு சா. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் கானாடுகாத்தான் வெ. வீர. கடை மேலாளராகச் சிங்கப்பூருக்கு வந்திருந்தார்கள். அந்தக் கடை, திரு. இராமசாமி செட்டியார் அவர்கள் பெட்டியடிக்கு அடுத்த பெட்டியடியாக அமைந்தது. அவருடைய ஊரும் காரைக்குடி (முத்துப்பட்டணம்), இருவரும் வயிரவன்

கோயிலைச் சேர்ந்தவர்களாதலால் பங்காளிகளாக இருந்தனர். இதனால் தொழில் முறையில் இராமசாமிசெட்டியார் அவர்களுடைய அறிவுரையையும் செல்வாக்கையும் பயன்படுத்திக் கொண்டார்கள்.

திரு. சுப்ரமணியன் செட்டியார் தனவைசிய ஊழியர் சங்கத்தில் உறுப்பினராக இருந்ததால், தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர்களுடைய கல்விக்காக ஒரு பள்ளி காண விழைந்தார். அதே காலத்தில் சிராவயலில் அத்தகைய பள்ளி நடத்திய ஒருவர் அதைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலையில் இருந்தார். அந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒப்புக் கொண்டு திரு சுப்பிரமணியன் செட்டியார் ஒரு குருகுலத்தைக் காரைக்குடி முத்துப்பட்டணத்தில் தொடங்கினார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நிறுவனத்திற்கு விரிவான கட்டிடம் கட்ட விரும்பி அமராவதி புதூரில் இடம் வாங்கியிருந்தார்கள். அந்த நிலையில் சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் மீண்டும் சிங்கப்பூருக்குச் சென்று விட்டார்கள். இராமசாமி செட்டியார் அவர்கள் தம் நண்பருக்காகக் கட்டிடம் கட்டும் வேலையைத் தாமே இருந்து செய்து முடித்தார்கள். சிங்கப்பூருக்குச் சென்றிருந்த சுப்பிரமணியன் செட்டியார் கட்டி முடிக்கப் பெற்ற கட்டிடத்தைப் பார்க்கும் வாய்ப்பை, இறைவன் அவருக்குக் கொடுக்கவில்லை.

குருகுலத்திற்காகச் சுப்பிரமணியன் செட்டியார் சிங்கப்பூரில் 27,000 வெள்ளி வைத்திருந்தார்கள். ஆனால் 1941 டிசம்பர் 7–ஆம் நாளில் ஜப்பானியர் இரண்டாம் உலகப் போரில் சேர்ந்து கொண்ட பிறகு சிங்கப்பூருக்கும் இந்தியாவிற்கும் தொடர்பு அறுந்தது. அதனால் அங்கிருந்து குருகுலத்திற்குப் பணம் வரவழைக்க முடியவில்லை. இரண்டாம் உலகப்போர் காலம் முழுவதும் குருகுலத்திற்குத் தேவையான பணத்தை இராமசாமி செட்டியார் அவர்கள் தான் கொடுத்து வந்தார்கள்.

இப்பொழுது பள்ளிக்கூடச் செலவு முழுவதும் அரசினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் மாணவர்களின் உணவு விடுதி இராமசாமி செட்டியாருடைய நிர்வாகத்தில் நடைபெற்று வருகிறது.

மணிவிழா :

பிலவ ஆண்டு ஆடித் திங்கள் ஐந்தாம் நாள் வியாழக்கிழமையன்று (20–7–1961) இராமசாமி செட்டியார் நாச்சம்மை ஆச்சி மணிவிழா (60 ஆம் ஆண்டு சாந்தி) நடைபெற்றது.

ஆயிரம் பிறை விழாவில் மணவிழா :

இந்தச் சதாபிஷேக விழாவில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி ஒன்று உண்டு. பொதுவாக நகரத்தார்களுடைய மணிவிழா (60 ஆம் ஆண்டு)

ஆயிரம் பிறை கண்ட விழா (சதாபிஷேகம்) ஆகிய விழாக்களில் ஏற்கனவே திருமணமான ஒரு பிராமணருக்குச் சம்பிரதாயத் திருமணத்தைச் சடங்காக நடத்தி அந்தணர்களின் வாழ்த்தைப் பெறுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இந்த விழாவில் உண்மையாகவே ஒரு திருமணம் நடைபெறுகிறது. வழக்கத்திற்கு மாறாக இந்த மணமக்கள் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

குணநலன்கள் :

இராமசாமி செட்டியார் அவர்கள் சிறுவயது முதலே இறைப்பற்று மிக்கவர்கள். இரண்டு முறை சிங்கப்பூர் தண்டாயுதபாணி சுவாமி கோவில் அறங்காவலராக இருந்திருக்கிறார்கள். இன்றும் நாள் தவறாமல் காரைக்குடி நகரச் சிவன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வருகிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை திருச்செந்தூர் தல யாத்திரையை மேற்கொள்கிறார்கள். திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் தியாகராஜ சுவாமிகளிடமும் இவர்களுக்கு எல்லையற்ற ஈடுபாடு உண்டு.

காளையார்மங்கலம் கருப்பர், இவர்கள் குடும்பத்துக் குல தெய்வம் ஆகும். ஆண்டு தவறாமல், வசதிப்பட்ட ஒரு நாளில் அங்கே போய் இராம. அவர்கள் இன்றளவும் கருப்பரை வழிபட்டு வருகிறார்கள்.

பெருஞ்செல்வர் குடும்பங்களில் இவர்கள் தம் பெண் மக்களைத் திருமணம் செய்து கொடுப்ப தில்லை. உழைப்பையே செல்வமாகக் கருதுகிறார் கள். அந்த உழைப்பின் பயனாக, அனைவரும் செல்வராக உள்ளனர்.

அறிவுரைகள் :

''சிக்கனத்தைக் கடைப்பிடியுங்கள். நேர்மை யாக நடந்து கொள்ளுங்கள். பாடுபட்டால் பலன் கிடைக்கும், குடும்பத்தில் சகோதரர்களும், அனைவரும் ஒற்றுமையாக இருங்கள்'', என்ற அறிவுரைகளை அனுபவத்தின் அடிப்படையில் இவர்கள் வழங்குகிறார்கள்.

''அறம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு எப்படி உண்டாயிற்று?'' என்று நான் ஒருமுறை இராம. அவர்களைக் கேட்டேன். ''நான் ஒரு காலத்தில் எளிய நிலையில் இருந்தேன். எனவே வறுமையின் கொடுமையை உணர்ந்திருக் கிறேன். யார் கேட்டாலும் இல்லை எனாது ஏதாவது கொடுக்க வேண்டும், தருமம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவான அடிப்படை இதுதான்'' என்று இராம. அவர்கள் விடை கூறினார்கள்.

''நாளைக்கு பெரிய அளவில் வருவாய் வரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. எனவே சூதான (Speculative) தொழில் எதையும் நான் செய்வ தில்லை. அசலுக்கு மோசம் வராமல், இருப்பதைக் காப்பதில் தான் என் கவனம் செல்லும்.

மலை ஏறுவது, படிப்படியாக ஏற வேண்டும். அவசரப்பட்டு ஏற விரும்பி, கால், கைகளை ஒடித்துக் கொள்ளக்கூடாது.

எங்கள் சிங்கப்பூர்க் கடையில் ஏராளமான பணம் கையிருப்பில் இருந்தது. அவ்வளவு தொகை கைவசம் இருக்குமானால், பிள்ளைகள் அத் தொகை முழுவதையும் கடனாகப் பலருக்கும் கொடுத்து, வராக் கடனாக அதில் ஒரு பகுதி போய்விடக் கூடுமே என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. அதனால் இருந்த பணத்தில் பெரும் பகுதிக்கு வீடுகள், சொத்துக்கள் வாங்கினேன். வட்டிக்கடையில் பணம் இருப்பு மிகுதியாக இருந்தால், கண்டபடி கொடுக்கச் சொல்லும். எனவே வட்டித்தொழில் லாபம் ஈட்ட வேண்டுமானால், கையிருப்புத் தொகை அளவாக இருப்பதே சாலச் சிறந்தது''.

வெற்றியின் இரகசியம் :

இராமசாமி செட்டியார் அவர்களுடைய தேவைகள் குறைவு. அவர்கள் உண்பது நாழி: உடுப்பன இரண்டு. கணக்குப் பிள்ளை, எடுபிடி ஆள்கூட அவ்வளவாக வைத்துக் கொள்வதில்லை. தானே கணக்கு எழுதுவார்கள். (இன்றும்!) எதையும் தானே எடுப்பது, கொண்டு போய் வைப்பது, தொலைபேசி மணி ஒலித்ததும் தாமே எடுப்பது போன்ற பழக்கங்களைக் கடைப்பிடிக்கிறார்கள். சொந்த வாகனம் இருந்தும், உடல்

நிலை இடம் கொடுத்தால் பேருந்துப் பயணம் மேற்கொள்ளத் தயங்கமாட்டார்கள். எளிமைக்கு இலக்கணமாகத் திகழ்கிறார்கள்.

தாம் ஈட்டிய பொருளைத் தாம் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் அவர்களிடம் இல்லை.

காட்சிக்கு எளியவராகவும் இன்சொல் உள்ள வர்களாகவும் தளும்பாத நிறைகுடமாகவும் விளங்குகிறார்கள்,

வாழ்க வள்ளல் என வாழ்த்துவோமாக!

திருவாசக நினைப்பு

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

யாருடைய நல்வாழ்வுக்கும் ஒரு பெரியவர் தொடர்போ, ஒரு பெரிய நூலின் தொடர்போ இன்றியமையாதது. இரு தொடர்பும் ஒருங்கே ஒருவர்க்குக் கிடைக்குமாயின், வாழ்க்கைக் கடல் இருகரையுடையதாகும். இத்தொடர்புக் கும் வாழ்க்கையுயர்வுக்கும் உறவுண்டு.

வாழ்வாங்கு வாழ்தல் என்பது என்ன? நினைப்பாங்கு நினைத்தல் ஆகும். நினைவு ஒரு பிறப்போடு அற்று விடுவதில்லை எனவும், ஒரு பிறப்பின் எண்ணங்கள் வரு பிறப்புக்களிலும் தொடக்குற்று வாழ்வினை இயக்கும் எனவும் சமய நூல்கள் பகர்கின்றன. ஏது நிகழ்ச்சி என்று மணிமேகலைக் காப்பியம் இதனைக் குறிக்கும். தங்கள் துன்பத்தைத் துடைத் தோரின் நட்பினை ஏழு பிறப்புக்களிலும் நினைவு கொள்வர் எனவும் ஒரு பிறப்பிற் கற்ற கல்வி எழுமையும் தொடரும் எனவும் எண்ணப்படர்ச்சியைத் திருக்குறள் பல விடங்களிலும் அறிவுறுத்துகின்றது. உயிர் இருந்தாற்கூட நினைவிழந்து விட்டால் வாழ்கின்றான் என்று அவனைச் சொல்வது வழக் கில்லை. எனவே நினைவியக்கமே வாழ்வியக்கம் என்பது தெளிவு.

உண்மையே கடவுள் என்று பெருமகன் காந்தி அறுதி யிட்டது போல் நினைவே வாழ்வென்றால் அந்நினைவு எவ் வண்ணம் இருத்தல் வேண்டும், எங்ஙனம் இருத்தலாகாது என உடன் பாடாகவும் எதிர் மறையாகவும் மக்கள் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர். 'உண்டு உடுத்து இங்கு இருப்பதா னேன்' எனவும் ''ஊனார் புழுக்கூடு இது காத்து இங்கு இருப்பதானேன்'' எனவும் ஊண் வாழ்க்கையை ஊன் வாழ்க் கையாகத் திருவாசகம் இகழ்கின்றது. தேடிச் சோறு நிதந்

தின்று சின்னஞ்சிறு கதைகள் பல பேசும் வேடிக்கை மனிதரைப் பாரதியார் வசை பாடுவர். ஆதலின் உண்பது உறங்குவது ஊடுவதெல்லாம் எண்ணமென்றோ நினை வென்றோ சொல்ல முடியாது. இந்த நாள் நடப்பெல்லாம் சிந்தனைப் பெயர் பெற்றால், மரஞ்செடி கொடி பறவை விலங்கினம் எல்லாம் சிந்தனையாளிகளாய் விளங்காவா? ஒருவன் உண்ணல் தின்னல் உறங்கல் கண்டு குறித்த நேரத் திற் செய்வதற்கு 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்று திருக்குறளை மேற்கோள் காட்டினால் கேலி செய்வது ஆகு மன்றோ? ஆதலின், எண்ணம் நினைவு சிந்தனை என்று நாம் குறிக்கும்போது நாட்கடமைக்கு அப்பாற்பட்ட மனத் தாண்டுதல்களைக் கருதுகின்றோம் என்ற வரம்பைப் புரிந்து கொள்வோமாக.

நிலத்திற்கு மேல் எல்லாமே வானந்தான். எனினும் வானத்திற் பறந்தது, வானளவியது என்று கூறுங்கால் குறிப்பிட்ட ஓரெல்லைக்கு மேற்பட்ட உயரளவையே சுட்டு கின்றோம். இம்மனவளர்ச்சி பெரும்பாலோர்க்கு இல்லை. மெய்ம்மை காணின், பெரும்பாலவர் தம்மனவளம் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு சிலர்க்கு மனமெனும் ஓர் உள் பொருள் இருப்பதான எண்ணச் சுவடே இல்லை. நெஞ்சுவலி வரும்போது நினைப்பார்களோ என்னவோ? அதனாற்றான் தொல்காப்பியம் இச்சிறிய மாந்தரை ஐயறிவுடைய மாக்கள் என்று அழைக்கும். தமிழியலின்படி மானுடவடிவு உயர் திணையாகாது. உயர்மனம் உடையோரே உயர்திணை என்ற மேற்றிணைக்கு உரியர்; மக்கட்சுட்டு என்ற தனி மதிப்புப் பெறுவர் ஆதலின் நம் பிறப்பு உயர்திணைப் பிறப்பாக உருப்பட வேண்டின் நல்ல தூய உயர்ந்த எண்ண விதைகளை நம் மனப் பண்ணையில் வித்தி வளர்த்து வளமார் கதிர்களைப் பெறல் வேண்டும். இவ்வுண்மையை உணர்த்தவே,

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே

என அப்பரடிகள் உழவுப் பாடல் இயற்றினார்.

நிலபுலங்கட்கு வித்துக்கள் தேவைப்படின், அரசு வைத்திருக்கும் வித்து விற்பனைக் கிடங்குகளை நாடிப் பெறுவர் உழவர். சிந்தனை வித்துக்கள் எங்கே கிடைக்கும்? விற்பவர் யார்? விலை யென்ன? இதோ திருவாசகம். நிகரற்ற விலை வேண்டாச் சிந்தனைக் கிடங்கு; எண்ணவியலா எண்ணக் களஞ்சியம்; யாரும் நண்ணத்தக்க நாற்றங்கால். 'கடலினுள் நாய் நக்கியாங்கு' எனவும் 'வெள்ளத்துள் நாவற்றியாங்கு' எனவும் சொல்லியபடி, எவ்வளவு சிந்திக்க அள்ளிக் கொண்டாலும் அப்பாற்பட்ட சிந்தனையுயர்ச்சிக்கு உரிய வேராழமும் வேர்ப்பரப்பும் வேர்ப்பன்மையும் திருவாசகக் குளத்தில் உண்டு.

நினைவே வாழ்வாதலின், நல்வாழ்வுப் பயிற்சி பெற விரும்புவார் திருவாசக எண்ணங்களை அடிக்கடி மனக் களத்துப் பயிலவேண்டும். எல்லோர்க்கும் பெரியோர்கள் தொடர்பும் உறவும் கிடைப்பதில்லை. யான் என்னும் செருக்கால் ஒரு சிலர் யாரையும் பெரியோராக ஏற்றுக் கொள்வதில்லை. அங்ஙனம் கொள்வது தம் பெருமைக்குக் குறைவாகும் என்ற உட்கருத்தாளரும் உலகில் இல்லாமல் இல்லை. ஆனால் திருவாசகம் போன்ற அரிய பெரிய நூல்கள் காட்சிக்கு எளிமையாகவும் கைக்கு அடக்கமாகவும் நம்முன் கிடக்கின்றன. அவற்றோடு ஒரு சில நொடிகள் நட்பாடினாற்கூட வாழ்வில் கலக்கம் கலங்கிக் கவலை நீங்கித் தெளிவு பிறக்கும்.

இந்நூல்களை 'இலங்குநூல்' என்பர் திருவள்ளுவர். 'ஒண்மைசால் நூல்கொடு வெண்மை களைக' என்று வழி காட்டுவர் வ. உ. சி. அத்தகு நூல்களுள் தலையாயது வள்ளலார் போற்றிய திருவாசகம்.

திருவாசகச் சாணையில் நம் அறிவைத் தீட்டினால் என்ன பிறக்கும் எக்காலத்தில் எதனை எதனை விடவேண்டும். எக்காலத்தில் எதனை எதனைக் கொள்ளவேண்டும் என்ற காலப்பக்குவம் நம் மனத்தில் விளையும். பலர் தவறாக எண்ணுவது போலத் திருவாசகம் உலக நல்வாழ்வை வெறுக்கும் நூலன்று; குடும்பம், இன்பம், செல்வம், கல்வி, புகழ் என்ற வாழ்வுப் பாங்குகளையெல்லாம் பழிக்கும் நூலன்று; உலகத்தை விட்டு ஓடுக என்று துரத்தும் நூலன்று. அது பொருளாயின் திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற் சுண்ணம் முதலான பதிகங்கட்கு இடம் எங்கே?

''உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்''

என்ற இல்லற வேண்டுதலுக்கு இடம் எங்கே? தில்லைச் சிற்றம்பலவன் பெண்பால் உகந்து குடும்பியாக விளங்கிக் காட்டுகின்றான் என்ற திருச்சாழல் நோக்குக்கு இடம் எங்கே? ஆதலின் திருவாசகம் திருமண வாசகத்திற்கு எதிரன்று; உடன்பாடு என்று அறையினும் மிகையன்று.

வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலம் கல்வியென்னும்
பித்த வுலகில் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

இத்தகைய துறவுக் கருத்துக்கள் திருவாசகத்தில் வழிந்தோடு கின்றன என்பதை நானும் அறிவேன். நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதியில் இவை மிகவும் வெளிப்படை ஆனால் இவ் விடத்துத்தான் சில அடிப்படை உலகியலை நாம் சிந்திக்க வேண்டும். ஐம்பது வயதில் ஒருவன் மரப்பாவை வைத்துப் பருமன் ஊதி விளையாடலாமா? சிறுதேர் உருட்டி வீதியில் திரியலாமா? வயதுக்கிழவி சிற்றாடை கட்டிச் சதங்கை யொலிக்க நடைபழகலாமா? கல்லூரிக்குச் சென்றவன் உயர்நிலைப்பள்ளி நூல்களையும் பழக்கங்களையும் விட்டு விடுகின்றான். உயர்நிலைப்பள்ளி மாணவன் தொடக்கப் பள்ளிப் பழக்க வழக்கங்களை விட்டுவிடுகின்றான். தாயானவள் கன்னித்தன்மைகளையும் பாட்டியானவள் அன்னைத் தன்மைகளையும் குறைத்துக் கொண்டு பருவத் திற்கேற்ற நடைமுறைகளைக் கொள்ப. ஆசிரியன் ஆனவன் மாணவக் குறும்புகளைக் குறைத்துக் கொள்கின்றான். படையிற் சேர்ந்த மறவன் வீட்டினை மறக்கப் பழகிக் கொள்கின்றான். வணிகன் தன் கடையில் ஒன்றினைத் தன் வீட்டிற்கு எடுத்தாலும் எழுதிக்கொள்கின்றான். உலகியலிற் பருவத்திற்கு ஏற்பவும் நிலைக்கு ஏற்பவும் கழிவன கழித்துக் கொள்வன கொள்ளவேண்டும். இவற்றால் கழிப்பவை வேண்டாதன என்றோ வெறுக்கத் தக்கவை என்றோ பொருளல்ல. விடவேண்டிய காலத்து விடவேண்டியவற்றை விடவேண்டும். பிச்சைக்காரன் போலவும் குப்பைக்காரன் போலவும் எல்லாவற்றையும் விடாது சுமந்து கொண்டு திரியக்கூடாது. உலகியலில் நுகர் பொருள்களைக் காலக் கழிப்புச் செய்து கொண்டு வருவது போல உள்ளத்தின் ஆசை களையும் உணர்ச்சிகளையும் ஒவ்வொரு காலத்திலும் விட்டும்

குறைத்தும் அடக்கியும் மேன்மேல் உயர்ந்தவை புகவும் வளரவும் இடங்கொடுக்க வேண்டும். திருவாசகம் கூறும் வேண்டாமைப் பாடல்களை வெறுப்புப் பாடல்களாகக் கருதாமல், அவ்வக்காலத்து இன்னின்னவற்றை விட்டொழிக்க வேண்டும் என்று படிமுறை காட்டும் வாழ்க்கை வழிநடைக் கல்வியாகக் கருதவேண்டும். இதுவே உலகிய லுக்கும் உளவியலுக்கும் ஒத்தது.

வாழ்வின் ஓட்டத்தில், எண்ணிப்பார்த்தால், நாம் நம்மையறியாமலே எவ்வெவற்றையோ விட்டுச் செல்கின் றோம். பலர் விட்டுச்செல்லவும் காண்கின்றோம். இவற்றை நினைவுபடுத்துவதுதான் திருவாசகம். திருவாசக நினைப்பு மேன்மேலும் நம் உள்ளத்து வளர்ந்தால், விடாது வைத்துக் கொண்டிருப்பவற்றை உரிய உரிய காலத்தில் விட்டு விட்டு உயர்ந்த உயிர்ப்பக்குவம் பெறுவோம். இம்மைப் பெரு வாழ்வுக்கே திருவாசக நினைப்பு எல்லார்க்கும் வேண்டும்.



"பொன் மகன் வாழ்க!"

கவிஞர் **ரெ. முத்துக்கணேசன்,** காரைக்குடி.

கருவிலே வளர்ந்த உள்ளம்
    கடினமாய் உழைத்த உள்ளம்
திருவினை ஆக்கும் உள்ளம்
    திசையெலாம் பொருளை ஈட்டிப்
பெருமிதம் கொண்ட உள்ளம்
    இராமசாமி பெற்ற உள்ளம்
வருபிறை ஆயி ரத்தை
    வணங்கிய அண்ணல் வாழ்க! (1)

உலகினில் நாட்டை ஓம்பும்
    ஒருவனைத் தலைவன் என்போம்;
தலைமுறை மரபைக் காக்கும்
    "சேந்தணி" குலத்தைச் சேர்ந்த
தலைவனாம் இராம சாமி
    தருமத்தை வளர்க்கும் தந்தை
அலகிலாப் புகழ்கள் சூழ
    ஆயிரம் காலம் வாழ்க! (2)

கண்ணினால் வருவார் உள்ளக்
    கருத்தினை அளக்கும் ஆற்றல்
மண்ணெலாம் புகழு மன்றோ!
    மாண்புடை இராம சாமி
எண்பதை அடைந்திட் டாலும்
    இசைப்பதில் தெளிவு தோன்றும்
திண்ணமாய் வகுக்கும் திட்டம்
    தேனீயின் செயலை ஒக்கும்! (3)

இன்னலைக் கண்ட போதும்
எளிதினில் கலங்கி டாது
தன்செயல் வெற்றி யாகத்
தளர்விலாப் பணிசெய் மேலோன் ;
நன்மனம் கொண்டு வீட்டை
நறுமணச் சோலை யாக்கும்
பொன்மகன் இராம சாமிப்
புகலவன் நிலைத்து வாழ்க ! (4)

ஆற்றலைச் செல்வ மாக்கி
அறத்தினை அருளே யாக்கிப்
போற்றிய கல்விக் கென்றும்
புதுத்திரு மணத்திற் கென்றும்
ஊற்றுநீர் ஒப்ப ஈவோன் ;
உமையொரு பாகன் தாளைப்
போற்றிடும் இராம சாமி
பொலிவொடு நீடு வாழ்க ! (5)

வழிகாட்டும் வள்ளல்

டாக்டர். வெ. தெ. மாணிக்கம், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30

வள்ளல் யார்? வரையாது வழங்குவோர் வள்ளல் எனப் பெறுவர். அவர்கள் வழி காட்டுவார்களா? அக்கொடைஞரிடம் சென்று வேண்டுவனவற்றைப் பெற விரும்புவோர்க்கல்லவா பிறர் வழி காட்டியனுப்புவர். அப்படியிருக்க இவ் வள்ளல்கள் வழி காட்டியாமாறு எங்ஙனம்?

வறியோர்க்கு வழங்கிய வள்ளல்களைக் காலக் கண்ணோட்டம் பற்றித் தலையெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் என வரிசைப்படுத்துவது தமிழ் மரபு. வரையாது அனைவருக்கும் வழங்குபவர் தலை வள்ளல், தன்னை நாடிவந்து கேட்போருக்குக் கொடுப்பவர் இடைவள்ளல், தன்னைப் புகழ்வோருக்குக் கொடுப்பவர் கடைவள்ளல் என, கொடையின் நோக்கத்தையும் கொள்வோருடைய எண்ணிக்கையையும் கொடைப் பொருள் சென்றடையும் பாத்திரத்தையும் கருத்திற்கொண்டு வள்ளல்களை வரிசைப்படுத்துவார் பிங்கல முனிவர்.

பாரி, ஓரி, பேகன் முதலிய கடையெழு வள்ளல்கள் வரையின்றி வழங்கிக் கொடைமடம் பட்டோராவர். வழங்கும் முறையை வையத்துக்கு அறிவுறுத்திய இப்பெருமக்கள் ஈட்டும் நெறி குறித்து யாதும் கூறினாரில்லை. காரணம் குறுநில மன்னர்களாகிய இவர்கள் பொருளை முயன்று ஈட்டவில்லை; அது தானாகவே திறைப்பொருளாக இவர்களை வந்தடைந்தது.

காரைக்குடிக் கல்வி வள்ளல் உயர்திரு இராம. வீர இராம. இராமசாமி செட்டியாரவர்களோ ஈட்டும் முறையறிந்தவர்; ஈதல் நெறியறிந்தவர். உழைப்பால் உயர்ந்த

உத்தமர். தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கும் தாளாளர். இவர் வரிசையறிந்து வழங்குவார்; வழங்கும் போதே வாழும் வழியும் கூறுவார்.

தெருவிலுள்ள கைகாட்டி வழிகாட்டும்; ஆனால் சென்று சேருமிடத்திற்கு அது நம்முடன் கூடவராது. பெருமைக்குரிய இப்புரவலரோ வழங்குவார், வழிகாட்டுவார், வழிகூட்டுவார், கூடவருவார், நம்நெறி செந்நெறியாதல் கண்டு, நாம் பெறும் இன்பம், தான் பெறும் இன்பமாகக் கொண்டு மகிழ்வார்.

வழிகாட்டியும் வழித்துணையுமாக விளங்கும் இப்பேராளர் இன்று ஆயிரம் பிறை கண்டு மகிழ்கிறார்; நம்மையெல்லாம் மகிழ வைக்கிறார். உழைக்க அஞ்சுகிற, ஒழுக்க நெறிகளை மீற முற்படுகிற இந்நாளைய இளைஞர்க்கு,

''அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்''

என்றாங்கு, ஆன்றோரது ஆக்கம் குறித்த இக்கட்டுரை பெரிதும் பயன்படும் என்னும் நினைப்பால், அப்பெருமகனார் தன் வாழ்வின் பல நிலைகளில் பல்லோர்க்குக் கூறிய நெறி முறைகள் அறிவுரைகள் ஆகியவற்றிலிருந்து விரிவஞ்சிச் சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்.

வள்ளலின் தோற்றப் பொலிவு :

நெடிதுயர்ந்த தோற்றம், நேரிய பார்வை, நீண்ட முகம், தெளிந்த கண்கள், அடர்ந்த புருவம், அகன்ற காதுகள், பரந்த நெற்றி, நெற்றி நிறைந்த நீறு, துவைத்துக் கட்டிய நான்கு முழ வேட்டி, கழுத்துப்பட்டியில்லாத சட்டை, தோளில் மடிப்புக் கலையாத தூய துண்டு, நெடிய கையில் வளைதடி, வீசி நடக்கும் கால்கள், வீரம் மிகுந்த நெஞ்சம், கூர்த்த அறிவு, புறப்பகட்டில்லாத இனிய பேச்சு, கவர்ச்சியை விரும்பாத எளிய போக்கு-இவை நம் எண்ணத்தை ஈர்க்கும் வள்ளலின் எழில்மிகு காட்சி.

சுறுசுறுப்போடு கூடிய ஆற்றல் :

கடமையை நிறைவேற்ற விடாமுயற்சியுடன் மேற் கொள்ளும் கடின உழைப்பே ஆற்றலாகும். விடாமுயற்சி தன்னம்பிக்கை தரும். ஆள்வினையுடையோரே மனித சமுதாயத்தில் வளத்தோடும் நலத்தோடும் வாழ்வர்.

வள்ளலவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும் இயல்பினர். தன் பணிகளைத் தானே செய்வதில் கருத்து மிக்கவர். பிறர் செய்ய முற்பட்டால், ''என்னை என்ன முடியாதவன் என நினைத்து விட்டாயா? இன்று நீ செய்வாய்; நாளை முதல் நான் தானே செய்யவேண்டும்? தன் கையே தனக்குதவி" என நறுக்குத் தறித்தாற்போல் நயமாகக் கூறுவார்.

சோம்பல் என்பதை அவரிடம் காணமுடியாது. நனைத்துச் சுமப்பது அவர் பழக்கமில்லை. அன்றாட வேலைகளை அன்றே முடிப்பது அவர் நோக்கம் அப்படி முடித்தாற்றான் அவர் நெஞ்சம் நிறையும்; உண்டபின் அறிதுயில் கொள்வார்.

''தன்னால் முடியும் என நம்பிய அனுமன் கடல் கடந்தான். முடியுமா என ஐயுறுபவன் கிணற்றைக் கூடத் தாண்டமாட்டான் முதுமை அடையினும் அவரவர் காரியங் களை அவர்களே முறையாகவும் நிதானமாகவும் செய்தல் வேண்டும். செயலற்றுப் போனால் உடலியக்கம் குறைந்து ஒடுங்கிப்படுத்த படுக்கையாய் விடுவர்" என்பது வள்ளல் கூறும் அறிவுரை.

''பதறாத காரியம் சிதறாது;'' ''அதிவிரைவு அரை வெற்றியே தரும்'' என்பன பழமொழிகள். இதற்கு மாறான இயல்புடையவர் கல்வி வள்ளல், எதிலும் அவசரம், எப்போதும் அவசரம்; எனினும் பிழை நேராது. குறைந்த நேரத்தில் விரைந்து விழிப்புணர்வுடன் செயல்படுவார். பிறர் ஓய்வு கொள்ளும் வயதில், இவர் எடுத்த காரியத்தில் முழு மனத்

தோடு ஈடுபட்டுத் திறம்படச் செய்து முடிக்கும் தன்மையர். சுருங்கச் சொல்லின் சுறுசுறுப்பும் அக்கறையோடு கூடிய உழைப்புமே இவருடைய வெற்றிக்கு அடிப்படை.

ஊக்கமும் உழைப்பும் :

வள்ளலவர்கள் நெஞ்சுரம் மிக்கவர். வெள்ளெனப்படுத்து விடியுமுன் எழுந்து, உழைக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ள எண்ணத்தாலும் காரியசித்தியுள்ள செயலாலும் நிரப்புவதே இவருடைய திறமை. பொறுப்புணர்ந்து ஊக்கத்துடன் உழைப்பவர்களிடம் ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் என்பது வள்ளுவம். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

''உழைப்பு மகிழ்வூட்டும்; உழைப்பின்மை துன்பந்தரும். நேர்மையான வழிகளைப் பின்பற்றியே ஆக்கம் பெறுதல் வேண்டும். உழைப்பில் களிப்புக் காண்போர் நெடுநாள் வாழ்வர். உழைப்பின் பயனை அனுபவிக்கத் தெரியாவிட்டால் பயனென்ன? தோட்டிபோல் உழைக்கவேண்டும். துரை போல் சுகிக்க வேண்டும்" - என்பது வள்ளல் கூறும் அறிவுரை.

சிக்கனமும் சேமிப்பும் :

ஆசைகளை அடக்கிச் செலவைக் குறைத்துச் செட்டாக வாழவேண்டும் என எண்ணும் எண்ணமே சிக்கனமாகும். சிக்கனம் வேறு; மறந்தும் எச்சிற்கையால் காக்கை ஓட்டாத கருமித்தனம் வேறு. உலகம் சிக்கனக்காரனைப் போற்றும்; கஞ்சனைத் தூற்றும்.

வரவுக்கு நிகராகச் செலவு செய்பவன் வாழத் தெரியாதவன்; வரவுக்கு மேலே செலவு செய்பவனோ வாழ முடியாதவன்.

''ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்-போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

எனும் நல்வழிப் பாடல் வரவறிந்து செலவிடப் பழக வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்துகிறது. இதில் வரும் ஈற்றடிக்கு (வரவறிந்து வாழத் தெரியாதவன்) அன்புடைய பெண்ணுக்கும் பொல்லாதவனாவான் எனப் பொருள் கொள்வர் தமிழறிந்தோர். ஆனால் வள்ளலவர்களோ 'நல்லார்' எனும் சொற்கு நன்மையனைத்தின் திருவுருவாக விளங்கும் கடவுள் எனப் புதுப்பொருள் கூறி, பெருஞ் செலவாளி கடவுளுக்கும் கூடப் பொல்லாதவனாய் விடுவான் என உணர்த்துவார்.

ஊதாரி ஒரு போதும் செல்வனாக முடியாது. கஞ்சனைச் செல்வன் என எவருமே ஒப்பமாட்டார். முன்னவன் பகட்டாக வாழ முற்பட்டு வீறாப்புக்காகப் பணத்தைத் தண்ணீராகச் செலவிட்டு ஏழையாவான். பின்னவனோ செலவேதும் செய்யாமல் சேர்த்துச் சேர்த்துச் செல்வத்துப் பயனை அடையாமலே கெட்டொழிவான். பெருந்தீனிக்காரனும் உண்ணாதே உடலை நலிவிக்கும் கருமியும் விரைந்து தங்களை அழித்துக் கொள்வதில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுபவராவர். "முன்னறிவுடன் நன்னெறியிற் பொருளீட்டிச் செட்டாக வாழ்ந்து மட்டாகச் செலவிட்டுச் சிறிது சிறிதாகச் சேமித்துச் செல்வத்தைப் பெருக்கித் தன் தகுதியையும் பெருமையையும் உயர்த்திக் கொண்டு வகையறிந்து வழங்கி வளமாக வாழும் வழியறிந்தவனே செல்வருட் செல்வன்" என்பது கல்வி வள்ளல் கண்டமுடிவு.

செல்வத்தைத் தேடுவது, அதனைக் கட்டிக் காப்பது, நல்ல திட்டங்களைத் தீட்டி அதை முறையாகப் பயன் படுத்துவது ஆகிய யாவும் ஒன்றற்கொன்று அரிய செயல்களே. செலவிடுவது எளிது; அதற்குச் சிந்தனை தேவையில்லை. ஆனால் செல்வத்தைச் சேர்ப்பதும் காப்பதும் வகுப்பதும் ஆகிய செயல்களுக்கு ஆழ்ந்த சிந்தனை தேவை.

"செல்வச் செழிப்பை விரும்புவோர் எந்தச் சூழ்நிலை யிலும் கடன் சீட்டில் கையெழுத்திடுதல் கூடாது. உள்ளதைப் பாழ்படுத்தாமல், அன்றாட வாழ்வில் ஏற்படும் விரயங்களைத்

தடுத்து நிறுத்தி, வருவாய்க்குத் தக்கவாறு செலவுகளை வகைப்படுத்தி வாழக் கற்றுக்கொண்டால் வாழ்வு சுமை யாகாது; சுவையாகும்" என்பது நிரம்பத் தேடும் நெறிகளை அறிந்து வரம்பொடு வாழும் வழிவகை தெரிந்த வள்ளலவர் களின் தெள்ளிய வாழ்வு நெறியாகும்.

நாணயம் :

வாய்மை பிழையாத நா நயமே நாணயமாகும். அது மனித சமுதாயத்தின் முதுகெலும்பு. நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி- இவை ஒருவனுக்கு அவனுடைய நாணயத்தால் வரும் நலன் கள். நாணயமற்றவனால் எதையும் சாதிக்க முடியாது. உழைப்பும் சிக்கனமும் ஒருவனிடம் இருந்தாலும் நாணய மின்றேல் அவன் வாழ்வு தோல்வியுறும்.

''வண்டப் புரட்டர்தாம் முறிதந்து பொன்னடகு
வைக்கினும் கடனீந்திடார் ;
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையிலெ லாங்கொ டுப்பார்''

என வணிகரியல்பு கூறும் குமரேச சதகப் பாடலை வள்ளல வர்கள் திரும்பத்திரும்ப ஞாபகப்படுத்துவார்கள்.

மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு, கடமையிற் கருத்தூன்றி, நெறி திறம்பாத நேர்மையுடன் உழைத்து, நாணயமாக நடந்துகொள்வோரை வள்ளலவர்கள் மிகவும் விரும்புவார்கள் அத்தகைய நல்லோரை எளிதில் இனங்கண்டு கொள்வார்கள் அந்நேர்மையாளர் உயர்வடைய வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுவார் உண்மை உழைப்பாளரை மதித்து, அவர்கள் கேளாமலே வரிசையறிந்து ஊதிய உயர்வும் உழைப்பூதியமும் பதவி உயர்வும் வழங்கி, கடின உழைப்பில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்வார்.

நடுவு நிலைமை :

நடுநிலையுடையோர் விருப்பு, வெறுப்பு, தப்பெண்ணம், ஒருதலைச் சார்பு இவற்றிலிருந்து விடுபட்டு, அமைதியாகவும் பொறுமையோடும் இருந்து, எதையும் சீர்தூக்கி மதிப்பிட்டு உண்மை காண்பர். சிந்தனை மிக்க நீதியாளர் இருபக்கத்தாரையும் சமமாக நோக்கி, அவர்களது கருத்துக்களைக் கேட்டு நடுநின்று முடிவு கூறுவர். வள்ளலவர்கள் சொந்த நலன் கருதாது நேர்மையான முறையில் செய்துள்ள பஞ்சாயத்து முடிவுகள் ஏராளம். பாரதம், இராமாயணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிலிருந்து தக்க சான்றுகளைக் கூறி நீதியை விளக்கி, இருதரத்தாரையும் சம்மதிக்கச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே.

பொருளீட்டல் :

'முறைகேடாக நடப்போரே முன்னேறிப் பெரும்பொருள் ஈட்டமுடியும்; நாணயக் குறைவே வணிகச் செழிப்புக்குவழி' - என நம்புவோர் தொகை இன்று நாட்டில் மிகுந்துவரக் காண்கிறோம். வாழ்வின் உண்மைகளை மேலோட்டமாக அறிந்துகொண்டோரும், அரைகுறையாகப் புரிந்துகொண்டோரும் அத்தகைய முடிவுக்கு வருவதில் வியப்பில்லை. அவரை விதைத்துவிட்டுத் துவரை அறுவடை செய்ய எண்ணும்ஆகாயக்கோட்டை கட்டிகளுக்குச் செந்நாப்போதார் கூறும் அறிவுரை ;

'அழக்கொண்ட எல்லாம் அழப்போம.'

''சலத்தாற் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமட்
கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று."

''எந்த வழியிலாயினும் சரி, பொருள் குவிக்கவேண்டும் என்னும் பேராசை கூடாது. பேராசையால் பிறரை ஏமாற்றிச் சேர்க்கும் பொருள் தங்காது. தம்மின் மெலியாரை நோக்கித் தமது உடைமை பெரிது என அகமகிழும் மனநிலை தேவை.

நேர்வழியிலேயே பொருளீட்ட வேண்டும். படிப்படியான முன்னேற்றமே நிலையானது. பத்தாவது படியில் இருப்பவன் பதினொன்றாவது படிக்கு உயர்வதற்குப் பத்துமாதம் ஆனாலும் பரவாயில்லை. அவலை நினைத்து உரலை இடித்து ஒன்பதாவது படிக்கு அவன் இறங்கிவிடுதல் கூடாது'' – பொருளீட்ட முனைவார்க்கு வள்ளல் விடுக்கும் எச்சரிக்கை இதுவாகும்.

ஈத்துவக்கும் இன்பம் :

செல்வர் யார்? செல்வத்தை உடையவர் செல்வர். உடைமையின் அளவு யாது? அளவு அவரவர் மனம்போல் அமையும். கோடியிருந்தும் மறு கோடிக்கு ஆசைப்படுபவர் தெருக்கோடிக்கு வந்துவிடுவர். தேவைக்கு மேல் பணம் வைத்திருப்பவர் மட்டுமே செல்வர் எனக்கொண்டால் அத்தகையோர் எப்போதும் செல்வராக இருப்பதில்லை; பொருளிருந்தும் அவருக்கு நிறைவில்லை, எந்நாளும் மனக் கவலை. பொருளொடு அருளும் உடையவரே செல்வர். அவரிடம் பொருளும் போகமும் நிலையாகத் தங்கும். அருளிலாச் செல்வரை விட்டுச் செல்வம் 'யாம் செல்வம்' எனக் கடிதேகலின் அவர் செல்வத்துப் பயனை அடைவ தில்லை. இன்புறுத்த வேண்டிய செல்வம் அவரைத் துன் புறுத்தும். பொருளிருந்தும் உயிர்களிடம் இரக்கமில்லாத வர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லை: அருளிருந்தும் கையிற் பொருளில்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லை என்பார் தெய்வப்புலவர்.

அருளும் பொருளும் உடைய செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்; பல்கிளையும் வாடாமற் பகுத்துண்டல்.

''......... செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.''

வறியவர்க்கு வழங்காது வாழ்விழந்தோர் பலர் என வரலாறு சுட்டுகிறது புறநானூறு.

"'ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை."
''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.'"

பூமிக்குப் பாரமாக வாழ்வதை விடுத்து, அற்றார் அழிபசி தீர்த்தலே பிறவிப்பயன் எனச் செல்வர்க்கு வாழும்வழி காட்டுகிறது வள்ளுவம்.

''முற்றொடர்பிற் செய்த முறைமையால் வந்தசெல்வம்
இற்றைநாள் பெற்றோமென் றெண்ணாது பாழ்மனமே
அற்றவர்க்கும் ஈயாமல் அரனபூசை ஓராமல்
கற்றவர்க்கும் ஈயாமல் கண்மறந்து விட்டனையே''

எனப் பட்டினத்தடிகள் ஈதல் நெறிமேற் காதல் கொள்ளுமாறு நம் மனத்தை ஆற்றுப்படுத்துவர்.

வள்ளுவர் வழியில் வாழ்ந்துகாட்டும் வள்ளலவர்கள் இல்லாதார் வாழ்வுக்குத் தந்தையென விளங்குபவர். கல்விப் பயிர் வளர்க்கும் கருமுகில். தன்னெஞ்சு உவப்பத் தன்கடன் ஆற்றும் இயல்பு வள்ளல். வருந்தி வந்தோர்க்கு எல்லாம் வரையாது வழங்கி அவர்தம் திருந்துமுகம் கண்டு திளைப்பவர். நேரமறிந்து பாலூட்டி மகிழும் தாய் போலக் காலமறிந்து கல்வி, திருமணம் எனப் புதுப்புது வழிகளில் முன்னோடியாக இருந்து ஈந்து மகிழும் ஏந்தல் அவர்.

''ஆலிலை பூவுங்காயும் அளிதரு பழமுமுண்டேல்
சாலவே பட்சியெல்லாம் தம்குடி என்றேவாழும்''

எனும் விவேக சிந்தாமணிச் செய்யுளையும்,

''வாங்கும் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயருறா - ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால
ஆரும் கிளையோ டயின்று''

என்னும் நீதிநெறிவிளக்கப் பாடலையும் அடிக்கடி நினைவு கூரும் சிந்தை நிறைந்த செல்வர் அவர்.

4—

மனிதனை மனிதன் வெறுப்பதும் பகைப்பதும் பொறாமைப்படுவதும் செய்கிற இந்நாளில், மனிதனை மனிதனாக மதித்து, அவன் துயரத்தைத் தன் துயரமாகக் கருதி, நலிந்து வருந்தும் அவனுக்கு உதவுவதற்குத் தானாக முன்வரும் வள்ளலனைய செல்வர் கடவுளுக்கு நிகரல்லவா? துன்புற்றார்க்கு அன்புதவி செய்யும் செல்வர் மனிதவடிவில் வாழும் தெய்வங்களே.

பொழுது போக்கு :

இளஞ்சிறுவர் சிறுமியரோடு சிரித்துப் பேசி மகிழ்வதே இவருடைய பொழுதுபோக்கு. ஆயிரம் பிறை கண்ட அண்ணல் அந்நிலையில் குழந்தையொடு குழந்தையாகக் காட்சியளிப்பார்.

''டே! நான் செய்வதை நீசெய்ய முடியுமா?''
''இம்.........செய்கிறேன்''
''எங்கே! இதுமாதிரிச் செய், பார்க்கலாம்''

வாயிலிருந்த பொய்ப்பல் தாத்தா கையில் இருக்கிறது. சிறுவன் வியக்கிறான்; விழிக்கிறான். பல்லைக் கழற்றுவதும் மாட்டுவதும் ஐயாவால் முடியும்; அன்புப்பேரன் பேத்திகளால் முடியுமா?

''ஒரு கிடையில் ஐம்பது ஆடு இருந்தது. பத்தாடு போனா எவ்வளவு?'' - வள்ளல் விடுக்கும் வினா.
''நாற்பது'' - சிறுவர் கூறும் விடை.

''எப்படி? ஐம்பது ஆடு இருந்த கிடையில் பத்து ஆடு போனால் (உள்ளே போனால்) அறுபது ஆடல்லவா இருக்கும்! போனால் .... ன்னு நான் சொல்றபோதே கெடெக்கு உள்ளேயா கெடெக்கு வெளியேயா...ன்னு நீ கேட்டிருக்க வேணும்ல?" - வேடிக்கைக் கணக்கிலும் சிறுவர்க்கு விழிப்புணர்வூட்டும் விந்தை மனிதர் இவர்.

அண்மைக் காலத்தில் வானொலி கேட்பதிலும் தொலைக் காட்சி காண்பதிலும் இவருக்கு நாட்டம் அதிகம். வயலும் வாழ்வும், வாரியார் பேச்சு, கிரிக்கெட்டு ஆட்டம், இலங்கை வானொலியில் சைவநற் சிந்தனைகள் - இவை இவர் விரும்பிக் கேட்பவை, காண்பவை. காலை முதல் கருத்தூன்றிய பணியினால் உழைத்துக் களைக்கும் உள்ளம் மாலையில் ஓய்வை நாடுவது இயல்பன்றோ.

சிவனை மறவாத சிந்தை :

வாழ்த்துப் பொருளாகவும் வாழ்வுப் பொருளாகவும் இறைவனைக் கொண்டவர் வள்ளலவர்கள். அத்தோன்றாத் துணையை நலந்தீங்கிலும் மறவாத சிந்தையர். வழிபடு தெய்வம் புறங்காப்பப் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து பொலிபவர். அதிகாலை ஆண்டவன் திருக்கோவில் சுற்றும் இவர் வழிபடா நாளை எண்ணி வருந்துவார். அஞ்செழுத்தை நெஞ்சமுத்திய இவ்வறவோர்க்குத் தேவாரம் திருவாசகம் திருவிளையாடற்புராணம் ஆகியவற்றில மிக்க ஈடுபாடுண்டு. தேவாரத் திருப்பாடல்களை வீணையில் வாசிக்க வேண்டு மென வேணவாக் கொண்டு பயின்றவர்.

கால் ஒடிந்து மதுரை மருத்துவமனையில் இருந்தபோது, பெரிய புராணத்தைப் பாடிப் பரவி, நூல் சார்த்திப் பார்த்து, வருவதறிந்து, இறை திருவுளம் உணர்ந்து, மனவமைதி கொண்டு, முதுமையிலும் ஒடிந்த கால் ஒட்டியது சிவனருளே என வியந்து மகிழ்ந்தவர்.

காரைக்குடி நகரச் சிவன் கோவில், கொப்புடையம்மன் கோவில்-இவை இவர் நாளும் வழிபடுமிடங்கள். திருவாரூர்த் தியாகராசரும், திருச்செந்தூர்ச் சண்முகநாதனும் இவர் மெய் மறந்து விரும்பித் தொழும் கடவுளவர். இளம்பிறை சூடும் எம்மான் அருளால் வளம் பெற்று ஓங்கி வாழும் இப் பெருந்தகை வாழி பல்லூழி! வாழியர் நன்றென வாழ்த்துதும் பெரிதே! வாழ்த்துதும் பெரிதே!

ஆண்டால் அனுபவத்தால் அறிவாற்றலால் அஞ்சாமை யால் அடக்கத்தால் மேம்பட்டவர் கல்வி வள்ளல் உயர்திரு இராம. வீர. இராம. இராமசாமி செட்டியார் ஆவர். குன்றின் மேலிட்ட விளக்கென விளங்கும் வள்ளலவர்கள் பல் திறப் பண்பாளர், மாசிலா மனமுடையார், காரியமே கண்ணா யினார், வருமுன் காப்பவர், தனக்கென வாழாப் பிறர்க் குரியாளர், இனத்தார் கோட்டை, சமுதாய ஊன்றுகோல்.

சுருங்கக் கூறின் அவர் ஒரு நிறைகுடம், துலாக்கோல், அளந்த மரக்கால், வழித்துணை. நெஞ்சம் நிறைந்த வாழ்வுக்கு வழிகாட்டும் வள்ளலவர்களின் சீரிய பண்புகளையும் அறிவுரைகளையும் நெஞ்சில் இறுத்தி வையத்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

அருளாரும் நற்றெய்வம் அடியர் போற்றும்
ஆறுமுகப் பெருமான்பால் அன்பு கொண்டு
மருளாரும் செல்வத்தால் மயங்கா தென்றும்
மாண்புடனே செல்வத்துப் பயனைத் தேர்ந்து
தெருளாரும் வகையினிலே ஈகை நெஞ்சால்
சீராகப் பல்லறங்கள் சிறக்கச் செய்யும்
பொருளாரும் புகழுடையார் இராமசாமிப்
புண்ணியரின் விழாக்கண்டு பொலிக வையம்!



நூறாண்டு வாழ்க

பெரும்புலவர் மு. கற்பக விநாயகம்
துணைத் தலைமையாசிரியர், அழகப்ப செட்டியார்
மாதிரி மேனிலைப்பள்ளி, காரைக்குடி-3

பூவின தியல்பால் பொலிமுகச் செவ்வியன்
புந்தியில் புலனமுக் கற்றோன்
காவியத் தலைவன் இவனெனத் தக்கோன்
காரைக் குடியினில் வாழ்வோன்
மேவிய பொருளால் மேம்படு கல்வி
மேதினி யெங்கணும் பரவ
ஆவியர் குலத்துப் பேகனோ என்ன
ஆகா றளவிடும் அறவோன்

தேவியுந் தானும் தேடிய செல்வப்
பெருக்கினைத் திருக்குறள் நெறியில்
ஓவிய மென்னத் திகழ்செல் வியர்க்குப்
போகபாக் கியமெலாம் பெறுவான்
மேவிய வாழ்வும் இல்லமும் பொருளும்
வேண்டிய சீருடன் வழங்கி
பூவியல் மகளிர் திருமணம் புணர்க்கப்
போதிய செல்வமும் தருவோன்

இந்திய நாட்டின் விந்தியத் திப்பால்
தமிழக அமரா வதியில்
இந்திரனெனச்சீர் இசைபெருங் குடிவாழ்
எழில் இராம சாமியாம் பெயரோன்
கந்தனின் அருளால் கற்பவர் தம்க்குக்
கனகமா மழையினைப் பொழிவோன்
மந்திர மொழியென மண்மிசை மாந்தர்
உளத்தினில் மன்னிடு பெரியோன்

முந்தையோர் மரபில் பிந்திடாச் செல்வன்
முத்தமிழ்ப் பெரிய கருப்பன்
சந்திரன் ஒளியின் பலகலை பயின்றோன்
சத்துவ குணநிதிச் செல்வன்
அந்தமில் பொருளை அறவழி ஈட்டியே
அன்புடன் திறப்பட அளிக்கும்
தந்தையின் பெயரால் தாய்மொழி தனக்குத்
தமிழ்க்கல் லூரியைக் கண்டோன்

வானக வைப்பும் வளைகடல் வெண்கதிர்
வலம்வரப் பரவிடும் வைப்பும்
போனகம் அளித்தும் போதனை யாற்றப்
போதிய நெல்மணி பொழிந்தும்
பானலம் போற்று பல்கலைப் புலவோர்
பற்பலர் வாழ்குரு குலத்தில்
தேனமு தென்னத் தென்றலின் செல்வம்
தேக்கியே விடுத்திடுஞ் சான்றோன்

குருகுல மதனில் மனுக்குலஞ் சிறக்க
குறைவிலாச் செல்வமும் ஈந்தே
அரும்பெறற் புதல்வர் அருந்திட உணவும்
அன்பொடு கல்வியுந் தோற்றி
குருகுலஞ் சிறக்கக் குலவியே யாண்டும்
ஈதலால் இன்புறச் செய்வோன்
விருப்புடன் தம்பால் வருமவர் தம்மைத்
தலைநாட் போலவே காப்போன்

வாழ்க! வழிவழி வையகம் சிறக்க
வளமெலாம் பெற்றுடன் வாழ்க!
வாழ்க செல்வமும் வளமார் அறமும்
வளர்ந்து நீண்டுநீர் வாழ்க!
சூழ்க இறைப்புகழ் சுற்றமும் நட்பும்
சூழ்ந்திட வாழிநீர் வாழ்க
சூழ்க நற்புகழ் சூரியன் ஒளிதரு
சோதிபோல் விளங்கியே வாழ்க!

காரைக்குடியில் எட்டாண்டுகள்

பேராசிரியர், பெரியார் பேருரையாளர்,
ந. இராமநாதன், *எம். ஏ., பி. ஓ. எல்.,*
முதல்வர்,
பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன
அஞ்சல் வழிக் கல்லூரி,
50. பெரியார் திடல், சென்னை–600007.

காரைக்குடியிலுள்ள இராமசாமி தமிழ்க் கல்லூரி தோற்றம் பெற்றுச் சில ஆண்டுகள் ஆன பிறகு அக்கல்லூரியில் பணி புரியும் வாய்ப்பு எனக்கு வாய்த்தது. தமிழகப் புலவர் குழுக் கூட்டமொன்றில் டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களிடம் என்னை அறிமுகப் படுத்தினார்கள். சில நாட்களில் அவர்களிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. காரைக்குடிக்குச் சென்று அவர்களைப் பார்த்தேன். அப்பொழுது இராமசாமி தமிழ்க் கல்லூரியைப் பற்றியும் கல்லூரி நிறுவனரைப் பற்றியும் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் என்னிடம் கூறிக் கல்லூரி உள்ள இடத்திற்கு ஆற்றுப்படுத்தினார்கள்.

முதலில் கல்லூரிக்குச் சென்றேன். கல்லூரியைக் கண்டதும் வியப்பாக இருந்தது. தமிழ்க் கல்லூரிக்கென தனியே அலுவலகம் அலுவலர் கூட ஒரு காலத்தில் இல்லை. தனியே அலுவலகமும் அலுவலரும் தொலை பேசியும் உடைய கல்லூரியாகக் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி விளங்கியது எனக்குச் சிறப்பாகப்பட்டது. அந்நேரத்தில் நான் என்ன எண்ணினேன் தெரியுமா? 'நாம் தமிழைப் பயின்றதற்கும் பல தொல்லைகள் பட்டுப் பயிற்றுவித்ததற்கும் காரைக்குடிக் கல்லூரியில் தொடங்கும் வாழ்வு ஒரு வெகுமதியாகவே இருக்கும்' என்று எண்ணினேன்.

கல்லூரியைப் பார்த்துவிட்டுக் கல்லூரி நிறுவனர் வீட்டுக்குள் நுழைந்தேன். கல்லூரி நிறுவனரின் மனைவியார் திருமதி மெய்யம்மை ஆச்சி அவர்கள் என்னை வாங்க அய்யா! என்று வாயார முகமலர்ச்சியோடு வரவேற்றார்கள் எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. இங்குள்ள எவரையும் எனக்கு முன்னோ பின்னோ தெரியாது. பொதுவாகத் தமிழ் நாட்டின் இயல்பென்ன? நீங்கள் யார்? எங்கு வந்தீர்கள்? என்ன செய்தி? என்றெல்லாம் மளமளவென்று கேட்பார்கள். நாம் சொன்ன பிறகு, அடடா! தெரியாமல் போய் விட்டதே! இப்படியெல்லாம் கேட்டு விட்டோமே! என்று சிலர் கூறுவர் அல்லது நினைப்பர். பலர் கேட்டதே சரியானது என்பது போல உங்களை யார் என்று தெரியாமையால் இவ்வளவும் கேட்க நேர்ந்தது; என்று விளக்கமும் செய்வர். இதுதான் உலகியல். முன்பின் தெரியாத என்னை ஆச்சியவர்கள் வரவேற்றது இலக்கியத்தில் கண்ட பேசும் பாங்காக இருந்தது. உள்ளே சென்றேன்.

செட்டியார் வீடு பெரியதாக இருந்தது. நடுவில் அகலமாக அமைந்த ஒரு பெரிய கூடம். வழுவழுப்பான கற்கள் பதிக்கப்பெற்றுக் கவர்ச்சியாக இருந்தது. மேலே வெளிச்சம் வர அமைத்த சாளரங்களில் பதித்த நீல நிறக் கண்ணாடிகளில் பட்டு வெளிச்சம் நீல நிறமாக வீட்டுக் கூடத்தின் பரப்பில் விழுகின்றது. அதனால் வெப்பமின்றிக் குளிர்ச்சியாக இருந்ததைக் கண்டேன். வேலைப்பாடுகளை யுடைய விதானம் மேலே விளங்கியது. இத்தகைய கூடத்தின் அகன்ற பரப்பில் மேற்குக் கோடியில் கல்லூரி நிறுவனர் செட்டியார் அவர்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த பிரப்பம் பாயில் உட்கார்ந்திருக்கக் கண்டேன். என்னை முகமலர்ச்சியோடு வரவேற்றுத் தனக்குப் பக்கத்தில் எதிரே உட்காருமாறு பணித்தார்கள். மிக அன்போடு அளவளாவி னார்கள். என்னைப்பற்றி யான் கூறும் போது யான் பயின்ற தும் பயிற்றுவித்ததும் கரந்தைக் கல்லூரி தான். அது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் புரப்பில் அமைந்து விளங்கு கின்றது. சங்கத்தின் வெள்ளி விழா நினைவாகத் திருப்பாப்

புலியூர் ஞானியார் அடிகளால், பேராசிரியர் க. வெள்ளை வாரணர் அவர்களை முதல் ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பெற்று நிகழ்ந்து வருவது. அங்குப் பல ஆண்டுகளாக ஆசிரியராகவும் கல்லூரிப் பொறுப்பையும் ஏற்றுப் பணிபுரிந்துள்ளேன் என்று கூறினேன். அப்படியா? என்று கூறிய செட்டியார் அவர்கள் என்னை மேலே பார்க்கும்படிக் கூறினார்கள். மேலே சங்கத் தலைவர், தமிழவேள் த. வே. உமா மகேசுவரம் பிள்ளையவர்களின் உருவப் படம் இருப்பதைப் பார்த்தேன். அதற்கும் கீழே உட்கார்ந்து கொண்டு உரையாடிக் கொண்டிருக்கின்றோமே என்று எண்ணிய போது நாம் இன்னும் சங்கக் கல்லூரியை விட்டு விலகவில்லை, சங்கத்தைச் சார்ந்த இடத்தில் தான் பணி புரியப் போகின்றோம் என்ற எண்ணம் தோன்றியது. செட்டியார் அவர்களும் தமிழவேள் போலவே தமிழின் மீது மிக்க அன்பு கொண்டவர்கள். அந்த அன்பு வெற்றாரவாரமாகவோ விளம்பரமாகவோ இல்லாமல் உண்மையில் அமைதியாக ஆழமாகச் செய்யும் தமது செயற்பாட்டால் பயனுள்ளதாக அமையவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருப்பவர் என்பதைப் பணியில் சேர்ந்த சில நாட்களில் அறிந்து கொண்டேன்-

தமிழவேள் படம் மட்டுமல்லாமல் தமிழகத்தில் விளங்கிய தமிழ்ப் புலமையாளர் படங்கள் பலவும் வேலைப்பாடுகளையுடைய அந்த அகன்ற கூடத்தில் சுற்றிலும் அணி செய்யும் அழகைக் கண்டேன். வீட்டிற்குப் பெயர் திரு. வி. க' இல்லம். திரு. வி. க. இல்லத்தில் தமிழ்ப் புலமையாளர்களும் தமிழ்ப் புரவலர்களும் சூழ்ந்திருக்கப் ''பிறப்பறியாத் தமிழன்னை பெற்ற மைந்தர்'' பெரியகருப்பனார் வீற்றிருக்கும் செம்மாப்பைக் கண்டேன். கல்லூரிப் பணி நிமித்தமாகப் பெரியகருப்பனாரையோ ஆச்சியையோ காணப்போகும் போதெல்லாம் அந்தப் பெரிய கூடத்தின் செம்மாப்பில் நானும் அங்கிருந்த பல ஆண்டுகளில் கலந்து கொள்ளும் பேறு பெற்றேன். இதனை எழுதிக் கொண்டிருக்கும்போதும் அந்தக் கூடத்தில் இருப்பது போன்ற உணர்வைப் பெறுகின்றேன்.

இவ்வளவு சிறப்பிற்குரிய இல்லத்திற்கும் பிறவியன்ப ராகிய பெரியகருப்பனாருக்கும் பெரிய சிறப்பிற்குரிய அணி கலனாகத் திருமதி. மெய்யம்மையாச்சி அவர்கள் விளங்குகின் றார்கள். ஆச்சியவர்கள் நுணுக்கமான அறிவு படைத்தவர் கள். வரையறையோடு கூடிய பேச்சாற்றல் உடையவர்கள். வினைத்திறம் உடையவர்கள். தங்கத்தில் மணிகள் பதித்த அணிகலன்கள் பலவாக இருந்தாலும் அவைகளைச் சுமந்து கொண்டிராமல் எக்காலமும் இளங்கோவடிகள் பாடியது போலச் செய்யாக் கோலமொடு தோற்றமளிக்கும் ஆச்சி யவர்களின் அடக்கமான வாழ்வுக்கு இணை இல்லை. வளம் படைத்தவர் வீட்டுப் பெண்களுக்கே உரிய சோம்பல் என்பது எங்கள் ஆச்சி இருக்கும் பக்கம் எட்டியும் பார்க்காது எந்த நேரமும் ஏதாவது செய்து செய்து கொண்டே இருப்பார்கள். இத்தகைய பெண்மணிகள் விளங்கும் இல்லங்களைக் கண்டு தான் வள்ளுவனார் "இல்லவள் மாண்பானால் இல்லதென்?" என்று எதிர்மறை முகத்தால் பாடியுள்ளார். தங்களை நாடி வருவார்க்கும் வீட்டில் உள்ள எல்லார்க்கும் எப்போதும் எல்லாமும் உடைய இல்லமாக ஆச்சியவர்களால் அவ்வில்லம் விளங்குவதைப் பல ஆண்டுகள் கண்டிருக்கின்றேன். எல்லாச் செல்வமும் படைத்து விளங்கும் ஆச்சிக்கும் செட்டியாருக்கும் ஆண்களும் பெண்களுமாகிய மக்கள் செல்வத்திற்கும் குறையில்லை. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல அவர்களெல்லாம் நூலறிவும் இயற்கையறிவும் ஒருங்கே பெற்றவர்கள். பிள்ளைகள் பலராக இருந்தாலும் குடும்பத்திற்குச் சுமையாக அவர்கள் ஒருபோதும் இருந்த தில்லை. ஆச்சியவர்களிடம் மற்ற திறமைகள் இயல்பாக அமைந்தமை போலப் பிள்ளைகளை வளர்க்கும் பாங்கிலும் இணையற்றவர்கள் என்பதைப் பிள்ளைகளைக் காணும் எவரும் எளிதில் கண்டு கொள்ளலாம்.

மேலே குறித்த சிறப்புக்களையெல்லாம் தொடர்ந்து வரும் குடும்ப வரலாறும், தம்முடைய முயற்சியாலும் பெற்று விளங்கும் ஆச்சியவர்கட்கும் செட்டியாருக்கும் காரைக்குடியில் தமிழ்க் கல்லூரி நிறுவி நடத்த வேண்டு மென்ற எண்ணம்

தோன்றியது சிறப்பிற்குரியதாகும். இருவருமே தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடுடையவர்கள். செட்டியாரும் நானும் இலக்கியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது ஆச்சியவர்களும் உடனிருந்து கேட்டு மகிழ்வதோடு நுணுக்கமாகச் சில குறிப்புக்களையும் கூறுவார்கள். பிள்ளைகளோடு பெருவாழ்வு வாழும் இவர்கட்கு இலக்கியங்களில் பிள்ளைத் தமிழ் என்றால் மிகவும் பிடிக்கும். அதன் காரணமாகவே மறைமலையடிகள் பெயரால் பிள்ளைத்தமிழ் படைப்பாருக்குத் தக்க பரிசு கொடுத்துத் தமிழ் இலக்கியவுலகுக்கு அணியாக மறைமலையடிகள் பிள்ளைத் தமிழைத் தந்துள்ளார்கள். தனிப்பட்ட ஒருவர் தம்முடைய முயற்சியால் தேடிய பொருளைக் கொண்டு தமிழ்க் கல்லூரி வைத்து நடத்தினார் என்ற வரலாறே தமிழகத்திற்கு இல்லை. சத்திரங்கள்-மடங்கள் என்ற பெயரில் மன்னர்கள் வேறு காரணங்களுக்காக அமைத்துள்ள அமைப்பில் எழுதி வைத்துள்ள ஆவணத்தில் அமைந்துள்ள இடுக்குகளைத் தம்முடைய கல்வித் திறமையால் கண்டு தமிழ்க் கல்லூரிகளும் நடத்தலாமென்று பன்னீர்ச்செல்வம், தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் போன்றோர் முன்னோடிகளாக இருந்து தமிழ்க் கல்லூரிகளை நடத்த வழி செய்தனர். ''தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை' என்று மாணிக்கவாசகர் பாடியது போலத் தமிழுக்கே உரிய தாயகமாகப் பண்டு தொட்டுப் பலராலும் கருதப்படும் தென்பாண்டி நாட்டில் 'நிழலில் நீளிடைத் தனிமரம் போலக்' காரைக்குடியில் இராமசாமி தமிழ்க் கல்லூரி விளங்குகின்றது. இவர்களுடைய எண்ணத்திற்கு உருக்கொடுத்துக் கல்லூரியை உருவாக்கிய பெருமை டாக்டர் வ. சுப. மாணிக்கனாரையே சேரும். இக்கல்லூரிக்குத் தம்முடைய ஆழமான அன்புக்கு உரிமை படைத்த தந்தையார் திருமிகு இராமசாமி செட்டியார் பெயரால் பெயர் அமைந்திருப்பது மிகவும் சிறப்பிற்குரியதாகும் என்பதைப் பின்னர்க் கண்டு கொண்டேன்.

காரைக்குடியில் வாழ்கின்ற செட்டியார் குடும்பங்களில் சிலருக்குக் குடும்பப் பெயர்கள் உண்டு அந்த நிலையில் எங்கள் செட்டியார் குடும்பத்துக்குச் 'சேந்தணியார் குடும்பம்'

என்பது பெயர். அக்குடும்பங்களுக்கு ஒப்பற்ற தலைவராகத் திருமிகு இராமசாமி செட்டியார் அவர்கள் விளங்கு கின்றார்கள். தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வாழும் குடி மக்களில் செட்டி நாட்டார் வெளி நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டி வந்து வளமனைகளை அமைத்துக் கொண்டு பகட்டாக வாழும் வாழ்க்கை முறைக்குப் பெயர் போனவர்கள். இவர்களில் சேந்தணியார் குடும்பங்களும் அக்குடும்பங் களுக்குத் தலைமை தாங்கும் திரு இராமசாமி செட்டியார் குடும்பங்களும் அடக்கமாக ஆரவாரமில்லாமல் வாழும் வாழ்க்கை முறையை இயல்பாகப் பெற்றவர்கள். பெரும் பொருள் படைத்த செட்டிமார்களில் பலர் 'தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு' என்று வாழ்பவர்கள். பெரிய செட்டியாராகிய இராமசாமி செட்டியாரும் அவருடைய மகனார் திரு இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியாரும் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பயன்பட வாழும் வாழ்க்கையினை வழிவழியாக மேற் கொண்டுள்ளனர் ஆகவே தான் யாரையும் எது கருதியும் புகழ்ச்சியுரையாகப் பேசியறியாத பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் பெரிய செட்டியாரையும் அவருடைய அருமை மகனாரையும் என்னிடம் பல முறை சிறப்பித்துப் பேசிய தோடு பொருளும் உணர்ச்சியும் ஒரு சேர விரவி விளங்கும் பாடல்களாகவும் பாடியுள்ளார்கள்.

பெரிய செட்டியாரைக் குறிக்கும் போது,

''மறப்பறியாக் கொடையாளன் இராமசாமி''

என்றும்

'' வருகுலம் பாராது வறிய சிறார்க்குக்
குருகுலம் நடத்தும் ஒருதனித் தோன்றல்''

என்றும் பிறவாறும் பாடியுள்ளார்கள்.

அவருடைய மகனார் இராம. பெரி. பெரியகருப்பனா-ரைப் பாடும் போது,

''பிறப்பறியாத் தமிழன்னை பெற்ற மைந்தன்
பேராற்றற் பெருங்கருப்பன் பிறவி யன்பன்''

என்றும் பாடியுள்ளார்கள்.

பெரிய செட்டியார் அவர்களை யான் முதன் முதல் கண்டு உரையாடிய போது அவருடைய உரையாடலால் சிறந்த பல நூல்களைப் பயில்வது போன்ற மனநிறைவு ஏற்பட்டது. அவருடைய பேச்சில் நெகிழ்வும் குழைவும் இணைந்த பிசிர் கொஞ்சமும் இல்லை. யாருடன் பேசினாலும் எதைப் பற்றிப் பேசினாலும் எப்போது பேசினாலும் வரையறையோடு பேசும் பாங்கினை இயல்பாகப் பெற்றவர் என்பதைப் பல முறை கண்டுள்ளேன். எண்ணுவது-பேசுவது-செய்வது என்ற இந்த மூன்றுக்கும் அவரிடம் அமைந்துள்ள இணைப்பின் வன்மையைப் போல ஆயிரத்தில் ஒருவரிடத்தும் காண்டல் இயலாது. எண்ணுவது போலவே பேசுவார். பேசுவது போலவே செய்வார். சிறிய வயதில் தந்தையாரை இழந்து பதினான்காம் வயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்றுத் தன்னுடன் பிறந்தவர்கட்குத் தந்தை போல இருந்து அறவுரைகளை வழங்கியும் அரும்பொருளை மிகப் பெரிய அளவில் ஈட்டியும் வழங்கிய பெருமகன் இவர். தாமாக அரிதின் முயன்று ஈட்டிய செல்வத்தை இன்னின்ன வகையில் இப்படி இப்படித்தான் செலவழித்து வாழ வேண்டுமென்னும் வரையறையோடு கூடிய வாழ்க்கையையுடையவர். தாம் மட்டுமல்லாமல் தம்முடைய பிள்ளைகள், தம்முடைய தம்பி, தம்பியின் பிள்ளைகள் யாவரும் பொருள் தன்னைப் போற்றித் தக்காங்கு வாழ வழிகாட்டியாக விளங்குபவர். சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் குறித்தது போலக் ''கம்ப மில்லாக் கழிபெருஞ்செல்வராய்ப்'' பெரிய செட்டியாரும் அவர் தலைமையில் அமைந்த குடும்பங்களும் தனித்தனியே வாழுகின்றார்கள். செல்வச் செழிப்பில் சிக்கியவர்கள் எளிதில் காமக்களியாட்டங்களுக்கு ஆளாகி உள்ளம் கெட்டு, உரை கெட்டு, உடலும் கெட்டு மனிதனுக்கு இயற்கையாக அமைந்த வாழ்நாளில் பாதிநாள் கூட வாழ முடியாதவர்களாய் ஆய்

விடுவார்கள். எங்கள் பெரிய செட்டியாரின் குடும்பங்கள் எதுவும் இத்தகைய வெறுக்கத்தக்க வாழ்வுக்கு இலக்கான தில்லை. பெரிய செட்டியாரும் பெரிய செட்டியாரின் தம்பியும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் எளிமைக்கும் அடக்கத்துக்கும் உவமை இல்லை. கடைத் தெருவிற்கோ கோவிலுக்கோ போகும் போது நடந்தேதான் செல்லுவார்கள். அவர்கள் தரித்துள்ள உடையில் பகட்டை ஒரு போதும் கண்டதில்லை.

கையில் பிரம்புடன் பெரிய செட்டியாரும் அவருடைய தம்பியும் காரைக்குடிக்குக் கிழக்கில் உள்ள காட்டுப் பகுதியில் காலையிலும் மாலையிலும் நடந்தே நெடுந்தூரம் சென்று மீளுவார்கள். பெரிய செட்டியாரின் தம்பி நடந்து செல்லும் பாதையும் என்னுடைய பாதையும் சில சமயங்களில் ஒன்று சேரும். அப்போது எளிதில் பெற முடியாத தனிமையில் நாங்கள் இருவரும் மனம் விட்டுச் சிறிது நேரம் உரையாடு வோம். அந்த உரையாடலில் பல ஆண்டுகளாக உள்ளத்தில் சுமையாக இருந்த சில பல உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளும் முறையில் மிகப் பெரிய ஆறுதலை அவர் அடைவதைக் கண்டிருக்கின்றேன். நிற்க.

பெரிய செட்டியார் அவர்கள் தம்முடைய சிந்தனை, பேச்சு எல்லாவற்றிலும் தனித்தன்மையுடையவர்கள். அவர் களிடம் பேசும் போதெல்லாம் நான் என் மதிப்பிற்குரிய தந்தை பெரியாரைத்தான் நினைத்துக் கொள்ளுவேன். இருவருக்கும் பெயர் ஒற்றுமை இருத்தல் போல எண்ணம், செயல்முறை ஒற்றுமைகளும் இருப்பதை யான் கண்டு வியந்ததுண்டு. கல்லூரி நிறுவிய பெரிய செட்டியாரின் மகனாரும் தான் தமிழுக்குத் தொண்டு செய்ய வேறு பல துறைகளில் முயன்றும் அவை சிறப்படையவில்லை. தந்தையின் பெயரை வைத்துத் தொடங்கிய கல்லூரிதான் என் எண்ணத்தை நிறைவேற் றிற்று என்று என்னிடம் உளமாரக் கூறி மகிழ்ந்தார்கள்.

''மறப்பறியாக் கொடையாளன் இராமசாமி''

என்று டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் பாடினார்கள்

என்பதை முன்னர்க் கண்டோம் இதனை விளக்கக் கருதுகின்றேன். முதலில் இப்பாட்டடியின் கருத்தை இரு வகையில் கொள்ள இடம் ஏற்படுகின்றது. ஒரு கருத்து கொடை கொடுக்கும் செட்டியாரோடு சார்த்தி உரைப்பது. இன்னொன்று மறப்பறியாமையை கொடைக்கே அடைமொழியாகக் கொண்டு உரைப்பது. இவ்விரு வகையிலும் பொருந்தி வருகின்றமையைக் காணுகின்றோம். கல்வி பயிலும் இளைஞர்கட்குத் தொடக்கப் பள்ளி முதல் கல்லூரிக் கல்வி வரை ஆண்டு தோறும் பல நூறு பேருக்கு உதவி செய்து வருகின்றார், அமராவதி புதூரில் இவர்கள் புரப்பில் உள்ள குருகுல உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதியொன்று நடந்து வருகின்றது. வசதியுள்ள மாணவரிடம் ஓரளவு தொகை பெற்றுக் கொண்டும் வசதியில்லாத மாணவரிடம் அறவே எந்தத் தொகையும் பெறாமலும் உணவுண்டு மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இந்த வகையில் ஆண்டு தோறும் பல மாணவர்கட்கு உதவி வருகின்றார்கள் ஆகவே மறப்பறியாக் கொடையாளன் என்று கூறினார் என்று கருதலாம்.

கொடை கொடுப்பவர் தாங்கள் கொடுக்கும் கொடையால் தங்கட்கு எவ்வளவு புகழ் பரவும் என்று கருதித்தான் கொடுப்பார்கள். ஆனால் இந்த வகையில் பெரிய செட்டியார் கொடுக்கும் கொடையால் விளம்பரமான புகழ்ச்சிக்கு இடமில்லை யாருக்குக் கொடுத்தோம்—எவ்வளவு கொடுத்தோம் என்ற செய்தி உலகுக்குத் தெரியாமல் ஆண்டு தோறும் மறைந்து போகும் நெறியில் யாரும் கொடை கொடுக்க மாட்டார்கள். ஆனால் இவ்வாறு கொடுக்கும் கொடை மிக இன்றியமையாததாகும். இக்கொடையைப் பெறாவிட்டால் பலருடைய படிப்பு நிறைவேறாது. ஆகவே இக்கொடையின் சிறப்பை உணர்ந்தவர் மறக்க முடியாத கொடையை மறவாமல் ஆண்டு தோறும் உதவியாளும் இராமசாமி என்றும் கூறலாம்.

குருகுலம் உணவு விடுதியை நடத்தும் முறை பற்றி ஒரு முறை என்னிடம் கூறி அது போலத் தமிழ்க் கல்லூரி உணவு விடுதியையும் நடத்துமாறு கூறினார்கள். உணவுக்குப் பயன்படும் பொருள்களில் ஓராண்டுக்குக் கெடாமல் இருக்கக் கூடிய பொருள்களான பருப்பு - புளி - மிளகாய் போன்ற வற்றை அவை விளைந்து விலைக்கு வரும் தொடக்கக் காலங்களில் வாங்கிப் பதமாகக் காய வைத்து இருப்பாக

வைத்துக் கொள்ளுவது, இப்படி வைத்துக் கொண்டால் விலை ஏற்றத்தைத் தடுத்துக் கொள்ளலாம். மேலும் பொருள்கள் சில சமயங்களில் கிடைக்காமல் ஏற்படும் தட்டுப்பாட்டையும் தவிர்க்கலாம் என்று கூறினார். இதனைக் கேட்டதும் எனக்கு வியப்பாக இருந்தது. சொந்த வீட்டுக்குத்தான் இவ்வாறு சாமான்களை வாங்குவார்கள். ஆனால் உணவு விடுதிக்கு இவ்வாறு வாங்கி வைத்துக் கொள்ளும் செய்தியைக் கேள்விப்பட்டதில்லை. இதிலிருந்து என்ன தெரிகின்றது? சொந்த வீடு போலவே உணவு விடுதியை நடத்தி வருகின்ற இயல்பைக் காணுகின்றோம்.

பெரிய செட்டியார் அவர்களின் இன்னொரு கொடையும் மிகவும் சிறப்பிற்குரியதாகும். திருமணம் செய்து கொள்ளுகின்றவர்கட்கு இரண்டு வகையில் ஆண்டு தோறும் உதவி வருகின்றார்கள். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களில் எல்லோரும இன்று வளமாக இல்லை வெளிநாட்டு வருவாய் இப்போது அறவே இல்லை, உள்நாட்டிலும் தக்க முறையில் வாழத் தெரியாதவாகள் இடம்பமாக வாழ்ந்து பிறகு தொல்லைப்படுவாரும் உண்டு. அவர்கட்குள்ள சங்கடம் உணவுக்கோ உறைவிடத்துக்கோ இருக்காது. அவர்கட்குள்ள சங்கடமெல்லாம் தங்கள் வீட்டுப் பெண்களைத் தக்க வயதில் மணம முடிக்க முடியாமல் தொல்லைப் படுவார்கள். பெண்ணைப் பெற்றோர் பெரிய அளவில் பெண்ணுக்குப் பொருள் கொடுக்க வேண்டும். மேலும் பல வகையில் செய்யும் சீர்வரிசை இவைகட்குச் செலவு மிகுதியாக ஆகும். இவ்வாறு செலவு செயய இயலாதவர் வீட்டுப் பெண்கட்குத் திருமணமாகாமல் நின்று போதலும் உண்டு. இந்த நிலையில் உள்ளவர்கட்கு உதவி செய்து தானே திருமணத்தை ஓரளவான செலவுடன் செட்டி நாட்டார் முறைப்படி நடத்தி வைக்கின்றார்.

அடுத்துத் திருமணம் செய்ய ஓரளவு வசதியிருந்தும் போதாமையால் தொல்லைப் படுகின்றவாகட்கும் ஆண்டு தோறும் உதவி செய்கின்றார்கள். மேறகாட்டிய உதவிகளைப் பெரிய செட்டியார் செய்யும் முறையும் தனித் தன்மை வாய்ந்தது. கல்லூரிக்குக் கட்டுகின்ற கட்டணங்களை உரியவா கேட்டால் கையில் கொடுக்க மாட்டார்கள். தாங்களாகப் பள்ளியிலோ கல்லூரியிலோ பணத்தைக் கட்டி விட்டுப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு வந்தால் அந்தப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு பணத்தைக் கொடுத்து

விடுவார்கள். கல்லூரிக் கல்வி பயில்வோரில் உணவு விடுதிக்கு உதவுவதாயின் உணவு விடுதியிலிருந்து பற்றுச் சீட்டைத் தாமே நேரில் பெற்றுக் கொண்டு பணத்தை விடுதிக்கு அனுப்பி விடுவார்கள். திருமணத்திற்குப் பண உதவி செய்யும் போது திருமண அழைப்பைக் காட்டிப் பணம் வாங்கிக் கொள்ள முடியாது திருமணம் நடக்கும் நாளில் தனக்கு வேண்டியவர் ஒருவரை அனுப்பி உதவித் தொகையைக் கொடுத்து வரச் சொல்லுவார். என்னுடைய மாணவர் ஒருவர் திருமணத்திற்கு உதவி வேண்டிப் பரிந்துரை கூறச் சொன்னார். நானும் அவர்கள் நிலைமை கருதி உதவும்படிக் கூறினேன். பெரிய செட்டியாா ஒத்துக் கொண்டார். திருமண நாளில் திருமணத்துக்குச் சென்றிருந்த யான் மண வீட்டாரை அழைத்துச் செட்டியாரின் உதவி கிடைத்து விட்டதா? என்று கேட்டேன். அவ்வுதவி இன்று தான் கிடைத்தது. இதோ உட்கார்ந்திருக்கின்றாரே இவர்தான் கொண்டு வந்து கொடுத்தார் என்றார். நான் அவரிடம் சென்று ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? என்று கேட்டேன். அதற்கு அவர் மறுமொழியாகப் பின்வருமாறு கூறினார் ‘‘முன் கூட்டியே கொடுத்தால் திருமணத்திற்கு என்று சொல்லி விட்டு வேறு வகையில் செலவழித்து விடுகின்றனர். இதைத் தவிர்க்கவே இவ்வாறு செயகிறார் என்று கூறினார்.

கொடையை எவைகட்குக் கொடுக்க வேண்டுமென்பதையும், எவ்வாறு கொடுக்க வேண்டுமென்பதையும் பெரிய செட்டியார் தம்முடைய அனுபவத்தால் தாமே அறிந்து நடத்தி வரும் வழியாகும். இவ்வாறு நடத்தியவர்கள் தமிழக வரலாற்றில் இல்லை. பொருட் கொடையாளர்கள் அறவிலை வாணிகராகத்தான் எப்போதும் வாழ்ந்திருக்கின்றார்கள். இப்போதும் வாழ்கின்றார்கள், ஆனால் எங்கள் பெரிய செட்டியார் கொடையால் வரும் புகழைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது இன்னாரிடத்தில் கொடையாகப் பெற்றுக் கொண்டோம் என்று கூறவும் முடியாத ஏழை எளிய மக்களின் குழந்தைகள் அறிவு பெறுதற்கு உதவுகின்றார்கள் என்றால் அது எளிதான ஒன்றல்ல. இதனைப் போன்றே என் பெண்ணைப் பொருள் இல்லாமையால் திருமணம் செய்து கொடுக்க முடியவில்லை என்று எந்தத் தகப்பனும் தாயும் கூறமாட்டார்கள் தாய் தந்தையரின் இந்த நிலையைப் பெண்ணும் பிறரிடத்தில் கூற முடியாது. இந்த

நெருக்கடியான தாய் தந்தையர், அவர்கள் பெற்ற பெண்கள் இவர்களின் மனநிலையைச் செல்வத்தில் வாழும் பெரிய செட்டியார் தானே தாயாகவும் தந்தையாகவும் நின்று உணர்ந்து மணம் முடித்து வைக்க உதவுகின்றார்கள் என்றால் இதற்கொப்பான ஒரு கொடையை உலகில் காண முடியாது. பெரிய செட்டியாரின் கொடை 32 அறங்களாகக் கூறும் அறங்களிலும் அடங்காது. நீதி நூல்கள் கூறும் பல வகையான அறங்களிலும் அடங்காது. அது மட்டுமன்று. தான் கருதிக் கொடுக்கும் கொடை அதற்குத் தவிர வேறு வகையில் பயன் படுத்த முடியாமல் கொடுக்கும் பாங்கும் யாருக்கும் தெரியாத ஒன்று. இவர் தான் இப்படியென்றால் இவருடைய மகனார் பெரியகருப்பனாரும் தந்தை பெயரால் நிறுவிய தமிழ்க் கல்லூரித் தொண்டும் தனித் தன்மை வாய்ந்து விளங்குகின்றது. இத்தனித்தன்மை வாய்ந்த இரு வரின் நடைமுறைகளையும் இவர்களைப் போலவே எந்தச் சமயக் கோட்பாடுகட்கும் நீதி நூல் கோட்பாடுகட்கும் கட்டுப் படாது சமுதாய அரசியல் நடைமுறைகளைக் கண்டு கூறிய தந்தை பெரியார் அவர்களின் கருத்தாகத் தொண்டைப் பற்றிச் சொன்ன விளக்கத்தில் அடக்கி வைக்கின்றேன்.

தொண்டைப் பற்றிப் பெரியார் சொன்ன விளக்கம் என்ன?

> *''மக்களிடம் நல்ல பெயரை வாங்க விரும்புவதை விட மக்களின் நன்மைக்கான காரியங்களைச் செய்வதே உண்மைத் தொண்டு'' —பெரியார்*

பெரியார் உணர்ந்து உணர்ந்து பொன் மொழியாகச் சொன்னார். எங்கள் பெரிய செட்டியாரும் அவர் மகனாரும் உணர்ந்தோ உணராமலோ செயற்படுத்திக் காட்டு கின்றார்கள்.

இத்தகைய குறிக்கத்தக்க தொண்டு செய்யும் பெரிய செட்டியாரும் அவருடைய மகனாரும் இவர்களைச் சேர்ந்த குடும்பத்தவர்களும் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்தி முடிக்கின்றேன்.

புதுமை வள்ளல்

மு. சே. சுப. சுப்பையா செட்டியார்
பொ. புதுப்பட்டி
செயலர், சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்
அறப்பணிக் கழகம், காரைக்குடி

சீர்வளரும் காரைக்குடி நகரம் வந்த
செழித்துவரும் சேந்தணியார் செல்வக் குடியில்
தேர்வளரும் திருவாரூர் ஈசன் காட்டும்
திருவருளைத் தினந்தோறும் சிந்தை செய்தே
பார்வளரும் கல்விக்காய்ப் படியில் ஏறிப்
படிப்படியாய் வந்தோரைப் ''படிபடி'' என்றே
ஏர்வளரும் செல்வத்தை ஈந்து வக்கும்
எழில்இராம சாமியவர் என்றும் வாழ்க! (1)

கொட்டுங்கள் முழக்குங்கள் என்று கூறிக்
குவலயத்தில் புகழ்விரும்பாப் புதுமை வள்ளல்!
தட்டுங்கள் திறக்கின்றேன் என்று சொல்லித்
தகுதிமிகு ஆடவரை அன்பாய்த் தாலி
கட்டுங்கள் எனச்சொல்லிக் கன்னி யர்க்குக்
கலியாணம் செய்விக்கும் கருணை வள்ளல்!
எட்டுங்கள் உரியபுகழ் என்று கூறி
எழில்சேர்க்கும் இராமசாமி என்றும் வாழ்க! (2)

பேறெல்லாம் பெற்றவராம் பெரிய கருப்பர்
பெருமகனும் வழிக்காலாய் வந்த தாலே
வீறெல்லாம மணக்கவரும் தமிழோ டென்றும்
வீர. இராம. விலாசத்தை விளங்கச் செய்தார்!
ஆறெல்லாம் மணக்கவரும் வெள்ளம் போல
ஆயிரமாய்ப் பிறைகாணும் இராம சாமி
சாறெல்லாம் இனிக்கின்ற கரும்பைப் போலச்
சந்ததமாய் என்றென்றும் வாழ்க! வாழ்க! (3)

சேந்தணியாரின் ஆராய்ச்சி மணி

டாக்டர் வெ. சு. அழகப்பன்,
எம். ஓ. எல். எம். லிட்., பி. எச். டி.,
அழகப்பர் கல்லூரி, காரைக்குடி-3

எங்கள் தகப்பனார் இரண்டாந்தாரம் செய்து கொள்வ தென முடிவெடுத்திருந்த நேரம், தம் மூத்த தாரத்துப் பிள்ளைகளான என் அண்ணனுக்கும் எனக்கும் தம் முதல் மனைவியின் பணங்களை, நகைகளை ஒழுங்கு செய்து பிரித்துக் கொடுப்பதென முடிவு செய்தார்கள். என் பெரிய தந்தையார், என் அம்மான் மகன், இன்று விழா மாந்தராகத் திகழும் உயர்திரு இராமசாமிச் செட்டியார் அவர்கள் ஆகிய மூவர் மட்டும் கணக்குகளைப் பார்த்தனர். இதில் நியாயம் பேச வேண்டி பொது ஆளாக இருந்தவர்கள், திரு இராமசாமிச் செட்டியார் அவர்கள் மட்டுமேயாவர். மற்றவர்கள் யாவரும் நியாயத்தை எதிர் பார்க்கிறவர்கள். கணக்கை இருநாள் மட்டும் பார்த்தனர். மூன்றாம் நாள் திரு இராமசாமிச் செட்டியார் அவர்கள், இரு சாராரும் செய்து கொள்ள வேண்டிய முறைகளை வாய் மொழியாகச் சொன்னார்கள். அன்று இரவே அவர்கள் கைப்பட "முறி" எழுதப் பெற்றது. அதனை இருதிறத்தாரும் ஏற்றுக் கொண்டனர். இது நிகழ்ந்த போது நான் சிறுவன். பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதிருக்கலாம். ஆயின் விவரம் பிடிபடுகிற அகவை. ஆகவே, அன்று தொட்டு அவர்களிடம் எனக்குப் பிடிப்பும் மரியாதையும் உருவாயின. எளிதில் அந்த விவகாரம் முடிந்தது. இப்படி எத்துணையோ வழக்குகளை எளிதில் முடித்து, எல்லோர் மனமும் ஏற்குமாறு செய்திருக்கிறார்கள்.

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையார், மலேயா சென்று அதன் வளர்ச்சிக்காக ஒரு நல்ல தொகை கொண்டுவர விரும்பினர். துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார், திரு இராமசாமிச் செட்டியாரை அணுகி, சில பரிந்துரைக்

கடிதம் வேண்டினார்கள். சபையின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கேட்ட பின்னர், சில கடிதங்கள் கொடுத்தார்கள். அவை நல்ல பயன் தந்தன. ஒரு பெருந்தொகை அங்கே வசூலானது. அதற்கு இவர்கள் மைந்தர் ''இராம. பெரி.'' அவர்களும் முக்கிய காரணம்; இரவு பகல் பாராமல் சபையாரை யாவரிடமும் அழைத்துச் சென்று, சபையைப் பற்றி எடுத்துக் கூறி வெள்ளியாகக் குவியச் செய்தார்கள். அப்பொழுது (1963) நான் சபையில் முதல்வராகப் பணி புரிந்த நேரம். அப்போதைக்கப் போது கடிதம் வரும். நிலை தெரிந்து மகிழ்வேன்.

இங்கு, சபையார் வந்ததும் கணக்கு முடித்தோம். நல்லுதவி செய்த திரு இராமசாமிச் செட்டியார் அவர்களைச் சபைப் பொருளாளராக ஆக்கி இருந்தோம். ஆக்வே, அந்த ஆண்டுக் கணக்கை நான் ஒரு தடவை சுமந்து வந்து திரு ''இராமசாமி செட்டியார்'' அவர்களிடம் காட்டினேன். அவர்கள் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் கொண்டு வந்தார்கள். புரட்டும் போதே அந்தப் பக்கத்தில் உள்ள புள்ளிகளைக் கூட்டி விடுவார்கள். அப்படியொரு மின்சார மூளை (கம்பியூட்டர் மைண்ட்) வேலை செய்வதைப் பார்த்து, நான் அசந்து நின்றேன்.

ஒரு குறிப்பிட்ட இடம் வந்தது. இரண்டு மணித்துளிகள் தயங்கினார்கள். பக்கம் புரளவில்லை. நான் ''என்ன அண்ணன்''? என்று விளக்கம் கேட்டேன். ''இது இப்படி இருக்கிறது சரியா?'' என்றொரு கேள்வி கேட்டார்கள். நான் திக்கு முக்காடிப் போனேன். அந்த இடம் கேள்விக்குரிய இடம் தான். நான் ஏதோ சமாதானம் சொன்னேன். ''இல்லை; அது எனக்குத் திருப்தியாக இல்லை'' என்றார்கள். சபையாரிடம் வந்து அது பற்றிச் சொன்னேன்; பின்னர் அவர்கள் கூறியபடி அந்தக் கணக்கு நேர் செய்யப் பெற்றது.

அப்படித் தவறுகள் சிறு அளவு இருப்பினும் கண்டு கொள்ளும் வியத்தகு திறம் அவர்களிடம் உண்டு.

யார் தவறிழைத்தாலும் நேரே சொல்லுவார்கள். அவர்கள் ஏற்றுத் திருந்தாவிடில் அவர்கள் போக்கில் விட்டு விட்டுத் ''திரு இராம'' அவர்கள் ஒதுங்கி விடுவார்கள். அப்புறம் பேசக்கூட மாட்டார்கள்.

நான் சன்மார்க்க சபையில் முதல்வராக இருந்தபோது, விடுதியில் மாணவர்கள் தம் ஈவுத் தொகை ஒரு பொழுது அதிகமாக வந்தது. அதை எப்படியும் குறைக்க விரும்பினேன். இவர்களிடம் ''நீங்கள் எப்படி அமராவதி பள்ளியில் மாணவர்கள் சாப்பாடு குறைந்த அளவில் இருக்க ஏற்பாடு செய்கிறீர்கள்? விவரம் தேவை என்றேன்''. தம்பி! ''ஆசிரியர், மாணவர் சொல்வதை நம்பி வெற்றுத்தாள் கணக்கை மட்டும் பார்க்காதே! நீயே ஒரு வாரம் எடுத்துக் கொடுப்பது, எண்ணெய், விறகுக் கணக்கு, வாராத பையன் இருந்தால் அன்று அளவுகளைக் குறைப்பது, எரிபொருள் குறைந்த அளவு ஆக வழி செய்வது என இப்படிக் கவனி, சரியாகி விடும்'' என்றார்கள். ஒரு தடவை அமராவதி பள்ளிக்கு நேரில் போய்ப் பார் என்றும் கூறியதோடு, நான் அங்கு வருவேன் என்றும் உரியவர்களிடம் தகவல் கூறி விட்டார்கள். அப்பொழுதுதான் புதிய வகையில் அடுப்பு அமைத்து, எரிபொருள் மிச்சத்திற்கு வழி செய்த நிலையைக் கண்டு, அதன்படி சன்மார்க்க சபையில் செய்வித்து, ஈவுத் தொகையைத் தொடர்ந்து குறைத்தேன்.

நெல், எண்ணெய் இவை ஆண்டுத் தேவைக்கு வாங்கி வைத்து விடுகிறார்கள். ஆகவே இன்றும் ஒரு பையனுக்கு அங்கு மாதம் ஆகும் செலவு 80 அல்லது 90 ரூபாய் தான் என அறிகிறேன்.

இதனால் இவர்கள்தம் நிர்வாகத்திறன் தெரிகிறது. வீட்டிலும் இப்படித்தான். கடை நிர்வாகத்திலும் இப்படித் தான். தானே தம் கைப்படக் கணக்கு இன்றும் எழுதுவார்கள். முக்கிய செய்திகளைத் தாமே தொலைபேசியில் பேசிச் சிக்கலை நீக்குவார்கள். எல்லாம் நேரடிப் பார்வைதான். கணக்கு எழுதிய வெற்றுத் தாள் வரவு செலவுகளை மட்டும் நம்புவதில்லை. நேர்பார்வையும் வேண்டும் என்பார்கள்.

வைரவன் கோயில் பூசா காலங்கள் தவறிய போது. இவர்கள் பெரிதும் வருந்தினார்கள். உச்சிக்காலம், அர்த்த சாமம் ஆகிய பூசைகட்காகப் பலரைத் தொகை கேட்டு, வைப்பு நிதியாக ஆக்கி விட்டால், அந்த பூசைகள் எளிதில் நடக்கும் என்ற யோசனை கூறியவர் இவர்கள்தாம்.

வைரவன் கோயில் கும்பாபிடேகத்திற்கு நகரத்தார் வசூலுக்காக வந்தபோது காரைக்குடியில் ஒரே நேரத்தில் சிறிதும் தயங்காமல் ஒரு பெருந்தொகையை (ரூ. 50,000) முதலில் எழுதிக் கொடுத்த கொடையாளர் திரு இராமசாமிச் செட்டியார் அவர்கள்தாம்.

ஒரு சமயம் நம் செட்டியார் அவர்களோடு நான் பேசிக் கொண்டிருந்தேன். வாலாசாபாத் பள்ளி நிதிக்காகத் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் வந்து அண்ணன் அவர்களிடம் ஒரு தொகை தருமாறு கேட்டார்கள். என்ன தொகை என அவர்கள் சொல்லவில்லை. திரு செட்டியார் ரூபாய் 1,000 என்று நினைக்கிறேன், இரண்டு மணித்துளி யில் கொண்டு வந்து கொடுத்து, வணங்கி நின்றார்கள். அவர் மெத்த மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு விபூதி வழங்கிய காட்சி, என் கண்முன் விரிகின்றது.

இப்படி ஒரு நாளைக்கு எத்துணை எத்துணை பேருக்கோ நமக்குத் தெரியாமல் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

நகரத்தார் பெண்கள் திருமணம் ஆகாமல் தடுமாறுவதைக் கண்டு இவர்கள் குமுறுவார்கள். இதை நீக்கத் தாமே ஒரு திட்டத்தை 20 ஆண்டுகட்கு முன் முதன்முதல் வகுத்தார்கள். ஆண்டுக்கு ஆறு பெண்களுக்குத் தாமே திருமணம் செய்து வைப்பதாய்க் கூறி, வந்தவர்கட்குத் தம் வீட்டிலேயே தம் கண் முன்னரே சில திருமணங்களை நிறைவு செய்தார்கள். ஒவ்வொரு திருமணத்திற்கும் ரூ. 3,000 வரை செலவிட்டார் கள். இது இருபது ஆண்டுகட்கு முன்னர் என்பதை நாம் மறக்க லாகாது. இத்திட்டத்தைப் பின்பற்றியே மற்றைய சங்கங்கள்

- நகரத்தார்கள் பின்னர் தாமும் செய்து வைக்க மனங்கொண்டார்கள். இத்திட்டம் பற்றி ஒரு தடவை திரு கருமுத்துத் தியாகராசன் செட்டியார் அவர்கள் என்னிடம் விரிவாகக் கேட்டார்கள். நான் தெரிந்த அளவு சொன்னேன். பின்னர் அவர்களே இத்திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கியதாய்க் கேள்விப்பட்டேன்.

இந்தத் திட்டம் நிறைவு பெறுவதில் ஏழை நகரத்தார் சிறிது தயக்கம் காட்டிய போது திரு இராமசாமி செட்டியார், தம் திட்டத்தை மாற்றிக் கொண்டார்கள். பள்ளிமாணவர்கட்கும், கல்லூரி மாணவர்கட்கும் படிப்புக் கட்டணத்தைத் தாமே கட்டுவதென முடிவு செய்து. அங்ஙனம் ஆண்டு ஒன்றுக்கு இன்று ரூ. 35,000 வரை கட்டி வருகிறார்கள். இதற்கு என ஒரு நிலையான பெரும் மூலதனத்தோடு ஒரு அறக்கட்டளை நிறுவித் தொடர்ந்து நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இத்திட்டத்தையும் முதன்முதல் நகரத்தாரிடையே பரப்பி, இன்று பலர் இதைச் செய்வதற்கு வழி வகுத்தவர்கள் திரு இராமசாமிச் செட்டியார் என்று பலருக்குத் தெரியுமா? இதைத்தான் வ. சுப. மாணிக்கனார்,

> *''தோட்டச் செடியைத் துடிக்க விட்டு*
> *நாட்டு மரங்களை நாடாத் தொண்டன்''*

என்று பாராட்டினார். தொண்டிலும் இப்படிப் புதுமை கண்ட தூயோர் இவர்கள்.

சூரியன், சிவனைக் காண்பதற்கு முன், இவர்கள் சிவலிங்கத்தைத் தினமும் காலையில் சிவன் கோயிலில் சென்று காண்பார்கள். பனிக்காலம் - மழைக்காலம் எதுவாயினும் இவர்கள் சென்று காண்பது நிற்பதில்லை. எல்லாக் காரியங்களிலும் நேரம் தவறுவதில்லை. பங்காளி வீட்டு விசேடங்களில் முன்னின்று நடத்தி வைப்பார்கள். என் திருமணம், என் மக்கள் திருமணம் எல்லாம் இவர்கள் முன்னிலையில்

முயற்சியில் நிறைவாக நடந்தன. இவர்கள் தம்பி திரு பெரிய கருப்பன் செட்டியார் அவர்களும் பங்காளி வீட்டு விசேடத்தில் முன்னிற்பார்கள். திரு "பெரி" குழந்தைகட்கு நூல்கள் வாங்கி இலவசமாகக் கொடுக்கிறார்கள். அவர்களும் தம் அண்ணன் காட்டிய வழியில் நடப்பது கண்டு, என்போல்வார் களிப்பால் மிதக்கிறோம்.

வக்கீலுக்குத் தெரியாத சட்ட நுணுக்கம், ஆடிட்டருக்கும் தெரியாத வருவாய் பற்றிய புதிய சட்டம், திரு இராமசாமிச் செட்டியார் அவர்கட்குத் தெரிந்திருக்கும். சாதகம் பார்ப்பது, வைரம் பார்ப்பது இவற்றிலும் அண்ணன் அவர்கட்கு பயிற்சி உண்டு. இவ்வளவு ஏன்? வீணையில் கூட இவர்கட்குப் பாட்டிசைக்கத் தெரியும். திருவிளையாடல், பாரதம், ஔவை யார் நூல்கள் ஆகியவற்றிலும் இவர்கட்குப் பழக்கம் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக இவர்கள் நல்ல கைராசிக்காரர். இவர்கள் தொட்டது துலங்கும். எண்ணியது நடக்கும். ஊரெல்லாம் வட்டிக்கடையை ஒடுக்கிய போது இவர்கள் மட்டும் ஊக்கமாக நடத்தினார்கள். ஒன்று பலவாக - நூறு கோடியாக வளர்ந்த வளர்ச்சியை, நாங்கள் அறிவோம்.

வாழ்வாங்கு வாழும் நல்ல தம்பிகளைப் பெற்றார்கள். அன்பும் அடக்கமும் வாய்ந்த மனைவியைப் பெற்றார்கள். நன்றி மிகுந்த மாப்பிள்ளைகளையும், பெண் மக்களையும் பெற்றார்கள்.

அறிவு, ஊக்கம், அறம், கொடை, தமிழ்ப்பற்று இவற்றை உடைய ஒரு மைந்தனை - இராம. பெரியகருப்பன் அவர்களைத் தன் மகனாகவும், உயர்குடிப் பிறந்த மெய்யம்மை ஆச்சியை மருகியாகவும் பெற்றார்கள். பாசம் நிறைந்த பேரன், பேத்திகளைப் பெற்றார்கள். இவர்கள் பெறாதது என்ன உண்டு? இவ்வுலகில் இல்லாதது இவர்கள் பெறாதது. ஆகவே இங்கு உள்ளவை யாவும் இவர்கள் உடைமையாயின.

இத்துணை உடையவர்களை, நாங்கள் உடையவர்கள் ஆனோம். சேந்தணியார் குடியில் இவர்கள் ''ஓர் ஆராய்ச்சி மணி''.

அன்பு, ஒப்புரவு. கண்ணோட்டம், வாய்மை, சொல் மாறா ஆண்மை இவற்றை உடைய அண்ணன் எங்கள் இராமசாமிச் செட்டியார் என்பதிலே எங்களுக்கு நெஞ்சு நிமிர்கிறது.

''நட்டோரை உயர்பு கூறினன்
வலியர் எனவழி மொழியலன்
மெலியர் எனமீக் கூறலன்
பிறரைத் தானிரப்பு அறியலன்
இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்
....
....
செய்ப எல்லாம் செய்தனன்'' (புறம்: 239)

என்று ஒரு பாண்டியனுக்கு ஒரு புலவன் பாடிப் பாராட்டியது இவர்கட்கும் பொருந்துவது போல எனக்குத் தோன்றுகிறது.

இன்று ஆயிரம் பிறை காணும் இவர்கள், இன்னும் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்ந்து, எங்கட்கும் பிறர்க்கும் வழிகாட்டி, வாழ்வு தரவேண்டும். அதற்கு அங்கயற் கண்ணி சுந்தரேசர் அளவில்லா அருள் சுரப்பாராக!

ஆயிரம்பிறை நாயகர் வாழ்க!

காந்தி மெய்யப்பர்,
காரைக்குடி.

வயிரவன் கோயில் வழிபடும் பெரியீர்
வளர்நிதி படைத்த வணிகருள் வேந்தே!
பயிலுவார்க் குதவிடும் பைந்தமிழ்ச் செல்வரே!
பல்லா யிரம்பேர் பயில்வழி வகுத்தீர்
கயிலை மலைச்சிவன் முடிப்பிறை ஆயிரம்
காண்விழாக் கொள்ளும் மணிவிழா நாயக!
எயில்நிகர் சேந்தணி யார்குலத் தோன்றால்
இராம சாமியாம் அருட்பெருந் தகையே! 1

தில்லை ஆச்சியை மனைவியாய்க் கொண்டும்
திருமகள் எழுவரை மக்களாய்ப் பெற்றும்
எல்லையில் காதல் திருமக னான
பெரிய கருப்பன் மெய்யம்மை யோடும்
முல்லையாம் பேரக் குழந்தைகள் பலவாய்
முழுமைசேர் இன்பம் அனைத்தையும் பெற்றே
இல்லற வாழ்வில் அனைத்தும் பெற்ற
இராம சாமிநீர் எழிலுடன் வாழ்க! 2

காந்தி மெய்யப்பர் நட்பினைப் பெற்றீர்
கவின்சேர் குருகுலக் கல்வியை வளர்த்தீர்
சுந்துடன் மகிழும் இதயமே பெற்றீர்
ஏற்புறும் நற்சம் பந்தமே கொண்டீர்
பாந்தமாய் நகரத்தார் தலைமையைப் பெற்றீர்
பங்காளி கட்கெல்லாம் யோசனை சொன்னீர்
சாந்திநாள் காணும் சான்றோர் நீரே
சதாபி ஷேகமுடன் வாழ்க பல்லாண்டே! 3

வல்லமை பெற்றுநீர் வாழ்வாங்கு வாழ்ந்து
வளமும் நலமும் வாய்ப்புடன் வளர்க்க
கல்வியும் செல்வமும் ஒன்றாய்ப் பெற்று
கற்றவர் யாவரும் வாழ்த்தொலி முழங்க
முல்லையும் மல்லியும் மங்களம் மணக்க
முத்தமிழ் ஓசைபோல் முழங்கிடப் பல்லியம்
எல்லையில் காலம் எழுகதிர் போன்றே
இசையுடன் வாழ்க! காந்தியென் வாழ்த்து! 4

நீடு வாழ்க வாழ்கவே !
நிறைந்து வாழ்க வாழ்கவே !
ஈடும் எடுப்பும் இன்றியே
இசைந்து வாழ்க வாழ்கவே !
நாடு வாழ்த்த வாழ்கவே !
நலன்கள் பெற்று வாழ்கவே !
ஏடு போற்ற வாழ்கவே !
இராம சாமி வாழ்கவே ! 5



எண்பதாண்டான இளைஞர்!

குழந்தைக் கவிஞர்,
தமிழ்ச் செம்மல் அழ. வள்ளியப்பா.

சென்ற ஆண்டு ஒரு நாள் மாலை கொப்புடையம்மன் சன்னதியில் நவக்கிரக பூசை நடந்து கொண்டிருந்தது. அங்கு வந்திருந்தவர்களில் பலர் இளைஞர்கள்; சிலர் நடுத்தர வயதினர்; மற்றும் ஒரு சிலர் அறுபது வயதைக் கடந்தவர்கள்.

பூசை ஆரம்பமாகிச் சிறிது நேரத்தில் ஒவ்வொருவராக ஒரு பக்கத்தில் உட்காரத் தொடங்கினர். அரை மணி நேரம் சென்று பார்த்தால், வந்திருந்த அனைவருமே உட்கார்ந்து விட்டனர். ஒரே ஒருவரைத் தவிர;

அந்த ஒருவர் யார்?

எண்பதாண்டான இளைஞர் இராம வீர.இராம. இராமசாமிச் செட்டியார் தான்; ஆம், இந்த இருபதாம் நூற்றாண்டு பிறந்த ஆண்டிலே பிறந்த (24—7—1901) அவர்களுக்கு எண்பதாண்டு பூர்த்தியானதையொட்டி அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது நவக்கிரக பூசை. அது நிறைவேறித் தீபாராதனை பார்த்து வீடு திரும்பும் வரை அவர்கள் நின்று கொண்டேயிருந்தார்கள்.

தமிழ்ப் பேரறிஞர் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவிலே, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் ஒரு வாழ்த்துப்பாடல் அனுப்பியிருந்தார்களாம்.

எண்பதாண்டான இளைஞனே!

எனத் தொடங்குகிறது அப்பாடல். வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்களை நேரில் காணும் வாய்ப்புப் பெறாத எனக்கு, இராமசாமிச் செட்டியாரவர்களைக் காணும்போதெல்லாம் அப்பாடல் நினைவுக்கு வருகிறது. அவர்களது

சுறுசுறுப்பும், சோம்பல் இல்லாத வாழ்வும், நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும், திட்டமிட்ட செயலும், செய்வன திருந்தச் செய்யும் இயல்பும், பிறருக்குதவும் பெருங்குணமும் போற்றுதற்குரியன.

இந்தியன் பாங்க் காரைக்குடிக் கிளையின் மேலாளராக இருந்த போதும். வட்டார மேலாளரான பிறகும் அடிக்கடி அவர்களைப் பார்த்துப் பேசும் நல்வாய்ப்பினைப் பெற்றவன் நான். அவர்களுடன் சிறிது நேரம் பேசிவிட்டு வந்தாலே, உள்ளத்திலே ஒரு தெம்பு பிறக்கும். ஒரு சிறந்த டானிக்கினை உட்கொண்டது போன்ற உணர்ச்சி ஏற்படும். அவர்களது அனுபவ உரைகளும், அறிவுரைகளும் அத்தகைய சக்தி வாய்ந்தவை.

இந்தியன் பாங்கின் ஆலோசகராக சிங்கப்பூரில் பல ஆண்டுகள் இருந்து உதவி புரிந்த அவர்கள். காரைக்குடிக் கிளை நடத்திய விழாக்களில் தலைமை தாங்கிச் சிறப்பித்துள்ளார்கள். சென்ற ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள், இந்தியன் பாங்கின் பவள விழாவைக் காரைக்குடிக் கிளையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு, குத்துவிளக்கேற்றித் துவக்கி வைத்து, இனிய உரை வழங்கிய காட்சி இன்றும் என் நினைவிலே பசுமையாக நிற்கின்றது.

சென்ற ஆண்டு அமராவதி புதூர் குருகுலம் உயர்நிலைப் பள்ளியில் பாரதி விழா நடைபெற்றது. விழாவில் பங்கு கொள்ளச் சென்ற நான், அங்கே விடுதியின் முன்பாக ஒரு கார் நிற்பதைக் கண்டேன். அது யாருடைய கார் என்பதையும் தெரிந்து கொண்டேன். விடுதி அலுவலகத்திற்குள் எட்டிப்பார்த்தேன். அங்கே கணக்குகள் எழுதப்பெற்ற ஒரு புத்தகத்தைக் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் இராமசாமிச் செட்டியார் அவர்கள்.

''வணக்கம்'' என்று கூறியவாறு உள்ளே நுழைந்தேன். நிமிர்ந்து பார்த்த அவர்கள், ''வாங்க, வாங்க'', என்று வரவேற்று உட்காரச் சொன்னார்கள்.

பிறகு, ''எங்கள் விடுதிப்பலகாரம், காப்பியை நீங்கள் சாப்பிட்டுப் பாருங்கள்'' என்று கூறி, பலகாரமும் காப்பியும் கொண்டுவரச் சொன்னார்கள்.

'மாணவர்களுக்கு என்ன கொடுக்கிறோம் என்று தெரிய வேண்டாமா? சாப்பிட்டுப் பார்த்தால்தானே தெரியும்?'' என்றார்கள்

சிறிது நேரத்தில் கோதுமை உப்புமாவும் காப்பியும் வந்தன. சாப்பிட்டுப் பார்த்தேன். ருசியாக இருந்தன. நன்றாக இருக்கிறது என்றேன்.

''இங்கு யார் வந்தாலும் மாணவர்களுக்குக் கொடுப் பதைத்தான் கொடுப்போம. அவர்களுக்கென்று தனியாகச் செய்வதில்லை. நானும் இங்கு வரும்போது இவர்கள் உணவைச் சாப்பிட்டுப் பார்ப்பேன்'' என்றார்கள்.

பிறகு விசாரித்ததில், அவர்கள் குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது வருவார்கள் என்றும், சில சமயங்களில் காரைவிட்டு இறங்கியதும் நேராகச் சமையல் கட்டிற்குச் சென்று அங்கு தயாராகும் உணவுகளைச் சாப்பிட்டுப் பார்த்து, நன்றாக இருக்கின்றனவா எனத் தெரிந்து கொள் வார்கள் என்றும் அறிந்து கொண்டேன்.

இது மட்டுமன்று; மாணவர்கள் எவ்வாறு படிக்கின்றனர், யாருக்கேனும் உடல் நலமில்லாதிருந்தால் மருந்து கொடுத்திருக்கிறதா, காய்ச்சல் இருக்கிறதா என்றெல்லாம் பரிவுடன் விசாரித்துத் தெரிந்து கொண்டு தக்க ஆலோசனை கள் கூறி உதவியும் புரிவார்களாம்.

அப்பவ்ளியை நிறுவிய சுப்பிரமணியம் செட்டியாரவர் கள், இராமசாமிச் செட்டியாரவர்களின் பங்காளி என்பதோடு இனிய நண்பராகவும் விளங்கினார்கள். 'கல்விப் பணியே கடவுட் பணி' எனும் உயர்நோக்கம் கொண்ட சுப்பிரமணியம் செட்டியாரவர்கள் தாம் இறக்கும் தறுவாயில் குருகுலம் பள்ளியைத் தொடர்ந்து நன்முறையில் நடத்தும் பொறுப்பை இராமசாமிச் செட்டியாரவர்களிடம் ஒப்படைத்தார்கள். அப் பொறுப்பை மிகச் சிறப்பாக நிறைவேற்றுவதன் மூலம் நண்பருக்குக் கொடுத்த வாக்கையும் நிறைவேற்றி, கல்விப் பணியிலும் தம்மை மிகுதியாக ஈடுபடுத்திக் கொண்டிருக் கிறார்கள் இராமசாமிச் செட்டியாரவர்கள்.

இந்த வயதிலும் அவர்கள் அப்பள்ளிக்கு நேரிலே சென்று மேற்பார்வையிடுவது, குறைகள் இருப்பின் அகற்றுவது, மாணவர் நலத்திலே அக்கறை செலுத்துவது, ஆண்டு தோறும் செலவாகும் தொகையை முன்னதாகப் போட்டு, பிறகு வரவரத் திரும்பப் பெற்றுக் கொள்வது போன்ற அரும் பணிகளால், அப்பள்ளி சீருடன் நடைபெற உதவி வருகிறார்கள்.

இப்போது பல நகாத்தார் சங்கங்களும் தனிப்பட்ட சிலரும் ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு நிதி உதவி வழங்கி, அவர்களுக்கு வாழ்வளித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட உதவிகள் வழங்கப் படுவதற்கு முன்பாகவே, தனிப்பட்ட முறையில் பல திருமணங்களை நடத்தி வைத்த பெருமை இராமசாமிச் செட்டியாரவர்களுக்கு உண்டு. சீதனமாக ரூபாய் ஆயிரமும் தாலியும் வழங்கியதோடு, சேலை, வேட்டி, மெத்தை, பாய், புழங்குவதற்குத் தேவையான சாமான்கள் முதலியவற்றையும் அளித்தார்கள். இப்படிச் செலவு செய்வதுடன் அவர்கள் நிற்கவில்லை; சிரமத்தையும் பொருட்படுத்தாமல், தமது வீட்டிலே அரசாணிக்கால் கட்டித் திருமணத்தை முறையாக நடத்தி வைத்து, விருந்தளித்து, மணமக்களைத் தமது காரிலே வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கவும் ஏற்பாடு செய்தார்கள்.

அவர்கள் நிறுவியுள்ள வீர. ராம. இராமசாமிச் செட்டியார் கல்வி அறப்பணி நிலையம் (VR. RM. Ramasamy Chettiar Education Trust) ஆறாவது முதல் பத்தாவது வரையிலும் ஆயிரம் மாணவர்களுக்கும், கல்லூரியில் பயிலும் நூறு மாணவர்களுக்கும் ஆண்டு தோறும் நிதி உதவி வழங்கி வருகிறது.

இது தவிர சிங்கப்பூர் நாட்டுக் கோட்டைச் செட்டியார் அறப்பணிக் கழகத்தின் தலைவராக ஆரம்ப கால முதலே இருந்து மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள். ஆண்டுக்கு, வசதியற்ற எண்பது பெண்களுக்கு ரூ. 2500/- வீதம் வழங்கித் திருமணம் நடைபெற உதவுவதோடு கல்லூரி மாணவர்களுக்கும் தகுதியையும் தேவையையும், அறிந்து தக்க முறையில் உதவி வருகிறார்கள்.

காலத்திற்கேற்ற இத்தகைய உதவிகளால், பலர் வாழ்விலே இன்பமும், உலகிலே உயர்வும் பெற்று விளங்குகின்றனர்.

ஒரு நாள் அவர்களுடன் வீட்டிலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது, ஒருவர் வந்தார்.

''ஐயா, உங்க உதவியாலே என் சம்சாரம் பிழைச்சிட்டாங்க. தெய்வம் போல உதவினீங்க'' என்று இரு கை கூப்பி நன்றி தெரிவித்தார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. மாறி மாறி இருவரை யும் பார்த்தேன்.

''தேள் கடிக்கு மட்டுமில்லை; பாம்பு, பூரான், நாய் எது கடிச்சாலும் இந்த மருந்து குணப்படுத்திடும். தெரிஞ்சவங் களுக்கு இப்படி ஒரு மருந்து இங்கே இருக்குன்னு சொல்லி வையுங்க'' என்றார்கள் இராமசாமிச் செட்டியாரவர்கள்.

கிராமத்தில் உள்ள ஒருவர் பச்சிலைகளிலிருந்து விஷக்கடி மருந்து தயாரித்து, சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைத்திருப்பதாகவும், அவரிடமிருந்து வாங்கி வைத்துக் கொண்டு, யார் எந்த நேரத்தில் வந்து கேட்டாலும் கொடுத்து வருவதாகவும் சொன்னார்கள்.

வட்டிக் கடைகளுக்குப் பல இடையூறுகள் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தன. கடன் நிவாரணச் சட்டத்தால், பல்லாண்டுகளாகத் தொழில் நடத்தியவர்கள், தொழிலை நிறுத்திப் பல தொல்லைகளைச் சந்திக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். ஆயினும், இராமசாமிச் செட்டியாரவர்களின் மேற்பார்வையில் எட்டு ஊர்களில் நடந்த வட்டிக்கடைகளில் எதுவும் தொழிலை நிறுத்தவில்லை. தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன; இருக்கின்றன. அக்கடைகளிலிருந்து கடன் உதவி பெற்றவர்

6—

கள், ஒழுங்காகக் கடனை அடைத்து, மீண்டும் மீண்டும் தேவையான போது வந்து கடன் உதவி பெற்று வருகின்றனர். எல்லாரும் அஞ்சி நின்ற சமயம், இதுபோல் தொடர்ந்து தொழிலை நடத்தியது, அவர்களது தீர்க்க தரிசனத்தையும், அபாரத் துணிச்சலையும் காட்டுகின்றன.

எப்போதும் தொலைபேசி அருகில் நாற்காலியில் (சாய்வு நாற்காலியில் அல்ல) அமர்ந்து வட்டிக் கடைகளிலிருந்து வரும் தகவல்களை அறிந்து, வழிவகை கூறுவதும், அன்றாடம் வருகின்ற தபால்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்புவதும், அவர்களது சுறுசுறுப்புக்குச் சான்று கூறுகின்றன.

பர்மா விழுந்த சமயத்தில், பலர் பயந்து போய் சிங்கப்பூர், மலேசியாவிலுள்ள கடைகளை ஒடுக்கவும், இடங்களை விற்கவும் நினைத்தார்கள். ''பர்மா நிலைமை வேறு; சிங்கப்பூர், மலேசியா நிலைமை வேறு. அஞ்சாமல் தொழிலைத் தொடர்ந்து செய்யுங்கள், அவசரப்பட்டு இடங்களை விற்காதீர்கள்,'' என இராமசாமிச் செட்டியாரவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்களின் அறிவுரை கேட்டுப் பலர், அவ்வாறே நடந்தனர்; அதனால், பெரும் ஆதாயமும் பெற்றனர். சிங்கப்பூரில் மர அறுவை நிலையம் வைத்தும், கப்பல்களுக்கு உணவுப் பண்டங்களை விநியோகிக்கும் தொழிலைச் செய்தும், தன்னம்பிக்கையாலும் தளராத உழைப்பாலும் படிப்படியாக முன்னேறி இன்று பலரும் போற்றும் உயரிய நிலையை அடைந்தவர்கள் இராமசாமிச் செட்டியாரவர்கள் என்பதை அறியும் போது, அவர்களது வாழ்க்கை பிறருக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக உதவும் என்பதில் ஐயமில்லை.

இராமசாமிப் பெரியார்

டாக்டர் அர. சிங்கார வடிவேலன்,
கண்டனூர்

கொப்புடைய நாயகி வணக்கம்

சீர்வளரும் காரைநகர்ப் பெரிய வள்ளல்
சேந்தணியார் திருவீட்டுக் கல்வி வள்ளல்
பேர்வளரும் பெரியபிறை காணும் நாளில்
பெரியவரைப் பணிந்தேத்தி மாலை சூட்டத்
தேர்வளரும் கொப்பாத்தா! கல்லுக் கட்டி
தினம்வளர அருள்கொழிக்கும் செல்வத் தாயே!
சீர் வளரும் தமிழ்ப்பூக்கள் நாவில் பூப்பாய்
சிங்கார வடிவேலன் பெயரைக் காப்பாய்!

ஆயிரத்தில் தொளாயிரம்சேர் ஐம்பத் தெட்டில்
அழகப்பர் கல்லூரிப் பட்டம் பெற்றேன்
போயினிமேல் முதுகலையிற் சேர யாரைப்
புகலடைவோம் என்றிருந்தேன்; தமிழ்ப்பே ராசான்
வாயினிக்க எனையழைத்தார்; காரை மண்ணில்
வளர்கல்விக் கொடைவள்ளல் ஒருவர் உள்ளார்
போய்வருவோம் எனச்சொல்லிக் கூட்டிச் சென்றார்
புகழ்மனையின் முற்றத்தில் சென்று நின்றேன் 1

''யாரம்பி நீஎன்றார்?" பெயரைச் சொன்னேன்
அப்பாவை என்னூரை அடுத்துக் கேட்டார்
''நேரான மனிதரப்பா உன்றன் அப்பா
நெடுங்காலம் மலேயாவில் இருந்தோம் அப்பா,"
சீரான ஒருநண்பர் இறுதி நேரம்
திருக்கையால் உன்னப்பா கையைத் தந்து
''வாராத குணமுடையான் அரங்க நாதன்
வாழ்க்கையிலே உதவிடுக என்றார்," என்றார். 2

''இப்போது பள்ளியிலே கற்போ ருக்கே
எழுதுபொருள் உதவிகளைச் செய்கின் றேன்நான்
அப்பாலைக் கல்லூரிக் கல்விக் கின்னும்
அரைக்காசும் ஒதுக்கவிலை; இருந்த போதும்
அப்பா என் பழம்தோழர்; எம்.ஏ., கற்க
ஐந்நூறு நான்தந்தால் உன்றன் வீட்டில்
எப்போதும் விளக்கெரியும்: நண்பர் வாக்கை
ஈடேற்றும் சமயமிது தருவேன்,'' என்றார் 3

ஆயிரமா அவர்தந்தார்! இல்லை இல்லை
அள்ளியள்ளி மனமுண்ணத் தமிழைத் தந்தார்
வாயினிக்கும் முழக்கமிட வாக்குத் தந்தார்
பாட்டுலகில் கொடிகட்டப் பாக்குத் தந்தார்
ஆயிரங்கள் பூச்சரங்கள் பலவும் தாங்கி
அழகம்மை மனைவிவரத் தகுதி தந்தார்
பாயிரமும் என்வாழ்வின் உயர்வுக் கெல்லாம்
படிக்கட்டும் *இராமசாமிப்* பெரியார் தாமே 4

ஆண்டிரண்டில் ஆயிரத்தை அன்று தந்தார்
ஆயிரங்கள் ஒருமாதம் இன்று பெற்றேன்
காண்டகுநல் மனைபெற்றேன்; இரண்டு பெண்கள்
கல்யாணம் முடித்துள்ளேன்; தாத்தா ஆனேன்
மாண்புமிகு டாக்டரெனும் பட்டம் பெற்றேன்
மதிப்போடு வாழ்கின்றேன்; என்றன் வாழ்வில்
ஆண்டுவரும் அத்தனையும் வருவ யாவும்
அப்பெரியார் தந்தகொடை விளைச்சல் ஆகும் 5

ஆயிரமாம் பிறைகாணும் *இராம* வள்ளல்
அறியாமை இருள்நீக்கும் *சாமி* ஆவார்
ஆயிர நூ றாயிரம்பேர் ஆண்டு தோறும்
அவர்கொடையால் ஆளாவார்; அறிஞர் ஆவார்
ஆயிரமாய் வாய்பெற்றுப் பாடி னாலும்
அவர்கொடைக்கோ அவையாவும் ஈடா காது
வாயினிக்க அவராலே உண்டு வாழ்வார்
வயிறுகளே வாழ்த்துப்பாட் பாட வாரீர் 6

கண்ணாடி அணியாமல் காணும் கண்கள்
கைத்தடியை ஊன்றாமல் நடக்கும் கால்கள்
பெண்நாடி அவர்பெற்ற பிள்ளை நாடிப்
பேரர்களின் பேரரையும் தூக்கும் தோள்கள்
பொன்கோடி குவித்தாலும் எளிய வாழ்க்கை
புயல்கோடி வந்தாலும் தாங்கும் நெஞ்சம்
எந்நாளும் இருபதுபோல் இயங்கும் வள்ளல்
இல்லறத்து வெற்றிக்கே எடுத்துக் காட்டு. 7

வள்ளுவனார் சொன்னமனை மாட்சி காட்ட
வந்தவரே நாச்சம்மை ஆச்சி ஆவார்
உள்ளுவதைச் சொல்லாமல் உணர்ந்து செய்வார்
உள்வீட்டில் எந்நாளும் விளக்காய் வாழ்வார்
கொள்ளையெழில் முல்லைமலர் முறுவல் பூப்பார்
கொடைக்கென்றும் தடையாக நிற்க மாட்டார்
வள்ளலவர் ஆலமரம் என்று சொன்னால்
மனைகாக்கும் ஆச்சியவர் ஆணி வேரே! 8

தன்பெயரைத் தமிழோடு சேர்த்துக் காக்கும்
தக்கவரைத் தன்தம்பி தனக்காய்ப் பெற்று
முன்செய்த தவத்தாலே வளர்க்கக் கண்டு
முற்றத்தில் வரவேற்று வளர வைத்தார்
பொன்செய்யும் திறத்தினிலும் புகழைச் சேர்க்கும்
பொதுப்பணிகள் செய்வதிலும் தன்னை வெல்லும்
கண்மணியை மகனாகக் கொண்ட வள்ளல்
காலத்தை வென்றவரே ஐயம் இல்லை! 9

தொகையொதுக்கி அறஞ்செய்யும் இராம வள்ளல்
துறைபலவாய்ப் பேரறங்கள் தொழிலாய்ச் செய்க
மிகையொதுக்கி அறஞ்செய்யும் மேதை வள்ளல்
மிடியொதுக்கும் பெருந்தொழில்கள் அறமாய்ச்செய்க
நகையொதுக்கிப் பணம்ஒதுக்கிப் பெற்ற மக்கள்
நலம்காக்கும் பெரியவர்கள் மேலும் நூறு
வகையொதுக்கும் நலம்கண்டு நீடு வாழ
வடிவேலன் திருவருளை வழங்கு வானே! 10

கல்லூரித் தந்தை

புலவர் தெ. முருகசாமி, *எம். ஏ., பி. ஓ. எல்.,*

முதல்வர் இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி–1

'பெரிய செட்டியார்' என்று நாங்கள் அன்புடன் அழைக்கும் திருமிகு வீர. இராம. இராமசாமி செட்டியார் அவர்கள் கல்விக் கொடைஞர். நல்ல அறப்பணியாளர். தேர்ந்து தெளியும் சிந்தையர். செயற்கரிய செய்யும் செம்மல். ஆரவாரம் விரும்பாத பண்ணப்பணைத்த பெருஞ்செல்வர். இங்ஙனம் எல்லா நலனும் வளனும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற செட்டியார் அவர்களை எங்கள் ''இராமசாமி தமிழ்க் கல்லூரியின் தந்தை'' எனக் கூறிக் கொள்வதில் பெருமை கொள்கின்றோம்.

கல்லூரித் தந்தையின் வாழ்வுத் தொடக்கம் எளிமையும் உழைப்புத் திறமும் கொண்டது. கூர்த்த பொருளியல் நிபுணரைப் போலத் திட்டமிட்ட வாழ்க்கை முறையால் முன்னேறி இன்று நகரத்தார் சமூகத்தில் ஒரு பெரும் புள்ளியாகத் திகழ்கிறார்கள். அவர்கள் வாழ்வே ஓர் இலக்கியம். அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் நினைவில் கொண்டு போற்றும் அளவிற்குப் பல நற்பண்பு களையும் பட்டறிவுகளையும் பெற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

ஒரு முறை அவர்கள் கல்லூரி மாணவர் மன்றக் கூட்டத்தில் சுருக்கமாகச் சில அறிவுரைகள் சொன்னது இன்றும் பசுமையாகவே உள்ளது. ''இளமைக் காலத்தை வீணாக்கி விடக்கூடாது. தன் சொந்த முயற்சியால் முன்னேற வேண்டும். நமக்காக வாழ்கிறோம் என்ற தன்னம்பிக்கை தான் ஒருவரை உயர்த்தும், இப்படி ஒவ்வொருவரும் தம் காரியத்தை ஒழுங்காகச் செய்தால் எல்லாம் சரியாகி விடும். எனவே படிக்க வேண்டிய பருவத்தில் படிக்கவேண்டும்.

சம்பாதிக்க வேண்டிய பருவத்தில் சம்பாதிக்கவேண்டும். சம்பாதிக்கும் போது விரிவான தானதருமங்களைச் செய்து விரைவில் புகழ் பெற வேண்டும் என்று எண்ணக் கூடாது. செடியின் இலை, கிளைகளை அடிக்கடி நறுக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அது செடியின் வளர்ச்சியைப் பாதிக்கும், செடி நன்றாக வளர்ந்து பலமாகவேரூன்றி மரமானால் தான் காற்றுக்கும் மழைக்கும் நிலைக்கும், வளர்ந்த அந்த மரத்தின் ஒரு பக்கக்கிளையை வெட்டினாலும் மரத்திற்குக் கேடில்லை, வெட்டப்பட்ட இடமும் பின்னர் தழைக்கும், பிறகிளைகளும் மரத்தைக் காக்கும், செடியிலேயே அதன் கிளையை நறுக்கினால் 'குருவி குறங்கறுப்பக் (தொடை) குடல் சரிந்தது' போலாகும். எனவே தொடர்ந்து செல்வத்தை ஈட்டுகையில் ஓரளவு வாழ்க்கைக்குப் போதுமான செல்வத்தின் எல்லையை அடைந்ததும் ஒரு பகுதியை நாம் வாழ்வதற்கு அடையாளமாக அவரவருக்குப் பிடித்தமான அறங்களைச் செய்ய வேண்டும்.''

இவ்வறிவுரைப் பகுதி மிகமிக எளிமையானது பட்டறிவின் சாரமானது அனைவருக்கும் பயன் தரத் தக்க தமிழ்மறை வாக்காக அமைந்துள்ளது. செடிபோன்றது இளமை அதற்குத் தீங்கு வாராமல் நீரூற்றிக் காத்து மரமாக வளர்ப்பது போன்றது இளமையைப் பேணிப் பாதுகாப்பது. இலக்கியத் தரம்மிக்க இவ்வெளிய இனிய உவமையை விட இதற்கு வேறோர் உவமையைக் கூற முடியுமோ?

கல்லூரித் தந்தை அவர்கள் கல்வி கற்கும் பள்ளிப் பிள்ளை முதல் கல்லூரி மாணவர் வரையான படிப்பிற்கு உதவி வருகிறார்கள் என்பது நாடறிந்த உண்மை, அவர்களின் கல்வி அறக்கொடையால் பலன் பெற்றோர் பலர். எங்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கும் ஈந்து வக்கிறார்கள் என்பதை நன்றியுடன் எடுத்துக் கூறக் கடமைப் பட்டுள்ளேன். சங்க காலத்தில் பண்ணன் என்பவன் இல்லத்தில் சோற்றுத்திரளுடன் நின்ற சிறுவர்களின் வரிசையைக் கண்ட கிள்ளிவளவன் கீழ்வருமாறு புகழ்கிறான்.

''பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்ப
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்''

புறம் 173

மழைக்காகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மேட்டு நிலந் தேடி வரிசையாகச் செல்லும் எறும்புகளைப் போலச் சிறுவர்கள் திரிந்தததாகக் கூறும் இப்புறநானூற்றின் காட்சியைக் கல்லூரித் தந்தை வீட்டில் கல்விக்காக மாணவர்கள் வரிசையாக வந்து உதவி பெற்றுச் செல்லும் இன்றைய செயலோடு ஒப்பிடலாம். கண்ணுடையோர் அனைவரும் கண்டுகளிக்கும் பேறாகும். இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் திரு ந. இராமநாதனாருடன் கல்லூரி ஆசிரியர்களும் கல்லூரித் தந்தையைப் பார்க்கப் போனோம், அப்போது தம் கல்விக்கொடையால் கற்றுத் தேர்ந்து உயர் பதவி பெற்ற ஒருவர் பம்பாயிலிருந்து நன்றியுடன் எழுதிய அஞ்சலைக் காட்டி அதுபற்றி எங்களுடன் உரையாடினார்கள். கல்விக் கண் திறந்து என் வாழ்க்கையில் ஒளிகாட்டிய தாங்கள் என் இல்லத்திற்கு ஒரு முறையேனும் வருகை புரிந்து என் இல்லத்தைப் புனிதப்படுத்த வேண்டும் என்றும் அதற்கான வானூர்திச் செலவைத் தாம் ஏற்பதில் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும் அந்த அன்பர் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு அவர்கள் எழுதியதாகச் சொன்ன பதில் கேட்டு நாங்கள் வியந்தோம்.

''நான் அங்கு வரவேண்டும் என்பதில்லை. இருந்த இடத்திலிருந்து கொண்டே வாழ்த்தினால் போதும். அதுவே எல்லா நலனையும் தரும். நான் அங்கு வரவேண்டும் என்று விரும்பிச் செய்ய உள்ள செலவை பத்துப்பேருக்குப் படிப்பிற்காக உதவி செய்தால் அதுவே நான் அங்கு வந்தால் ஏற்படும் மகிழ்ச்சிக்குச் சமம்.'' இப்படிப் பதில் எழுதி அறம் செய்யத் தூண்டும் ஆன்றோர் ஒருவரை இக்காலத்தில் இலட்சத்தில் ஒருவராகக் காண இயலுமா என்பது ஐயந்தானே!

ஒருவர் பெற்றுள்ள பல பண்புகளில் சில பரம்பரைக் குணங்களால் அமையும். சில அவரவர் அனுபவ அறிவால் அமையும். ''ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி'' என்று இளங்கோவடிகள் கூறியது போல வழி வழியாக நகரத்தார் மரபிற்கேற்ப வட்டித் தொழில் புரிந்து பெருஞ் செல்வம் திரட்டித் தம் குடிப்பெருமையை ஓங்கச் செய்தார்கள் ஈட்டிய பொருளை வரையறுத்ததொரு திட்டத்தால் அறக் கொடை செய்கிறார்கள். அவர்களின் கல்விக்கொடை முறையிலும் அவர்களுடைய அருங்குணச் சிறப்புக்கள் வெளிப்படுவதைக் கண்ட அவர்தம் இளவல்களும் கல்விக் கொடை செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ''கன்றும் உதவும் கனி'' என்பதற்கொப்ப அவர்தம் மகனார் திரு, இராம. பெரி. பெரியகருப்பன் அவர்கள் தம் தந்தையின் பெயரால் ''இராமசாமி தமிழ்க் கல்லூரி''யை நிறுவி தாய்மொழியாம் தமிழ்காத்து எங்களையும் புரந்து வருகிறார்கள் என்று நினைக்கும் போது நெஞ்சம் இறும்பூ தெய்துகின்றது. தந்தையறிவு மகனறிவன்றோ!

இங்ஙனம் ஆரவாரமின்றி விளம்பரப்படுத்திக் கொள்ளா மல் தொண்டாற்றிவரும் இத்துணைச் சீரும் சிறப்பும் பெற்ற எங்கள் கல்லூரித் தந்தை அவர்களின் ''ஆயிரம் பிறைகாண் விழா'' ஒரு தனிமனித வரலாறாயினும் சேந்தணியார் குடும்பத்தின் வேராய் நகரத்தின் நகரத்தார் சமூகத்தின் விழுதாய் மனிதகுல வாழ்வின் செழுங்கனியாய் விளங்குகிறது எனக் கூறி அவர்களை இந்நாளில் வணங்கி அவர்கள் அறிவுரைகளை நெஞ்சிற்கொண்டு வாழ்வோமாக.



வாழ்கநீர் கோடி நாட்கள்

கவிஞர் நா. மீனவன், எம். ஏ., பி. எட்.,

துணைத் தலைமையாசிரியர்
இராமநாதன் செட்டியார் மேனிலைப் பள்ளி
புதுவயல்

காலைவான் எழுந்த கோலக்
கதிரெனும் செய்ய மேனி
மாலைவான் எழுந்த வெள்ளி
மதிப்பிறை வென்ற நீற்றுக்
கோலமார் நெற்றி இன்பக்
குமரனை ஈன்ற தாதை
சீலமார் அடியை என்றும்
சிந்தையில் சேர்த்த நெஞ்சர்.

திரைகடல் ஓடிச் சேர்த்த
திரவியம் கோடி என்றும்
விரிபுகழ் ஞானம் சேர்க்கும்
வியன்பெரும் கல்விக் காகக்
குருகுலம் பார்த்துச் சேர்த்துக்
கொடுத்ததும் கோடி, அன்னார்
தருபொருள் தேடி வந்து
நலமுற்றார் கோடி கோடி.

கதிரவன் எழுந்த பின்னர்
காலார நடந்து சென்று
நதியணி வேணி பாகம்
நங்கையை வைத்த செம்மல்
மதியணி காண நின்று
மலரடி தொழுத கைகள்
பதியிலே கல்வி காக்கும்
பாரதி கரங்க ளாகும்.

சிறந்தசேந் தணியார் என்னும்
சீர்பெறும் குடும்பத் துள்ளே
பிறந்தவர் தம்முள் என்றும்
பெரியவர் உதவி பெற்றார்
மறந்தனர் என்றாற் கூட
மதித்திடும் இனிய பண்பால்
அறந்தவ றாத கொள்கை
அதனையே உயிராய்க் கொண்டார்.

வாலிபம் வந்த போதே
வாணிகம் கற்ற மேதை
ஞாலத்தை அளந்த மால்போல்
நண்ணிய செயல்க ளாலே
காலத்தை அளந்து செய்யும்
கடமையைக் கொண்ட வீரர்
பாலமாய்க் குடும்பம் காக்கும்
பண்பினில் சிறந்த மேதை.

அற்புத ஞானம் காட்டும்
அளவிலே வளர்ந்த பேச்சு
கற்பவர் வியக்கு மாறு
கருத்தினைக் கூறும் மாண்பு
முற்பவத் தாலே வந்து
முன்னிய குடிப்பி றப்பு
வெற்பென உறுதி வாய்ந்து
விளங்கிடும் கொள்கைச் சான்றோர்.

உயர்பொருள் சேர்ப்பார் செய்யும்
உழைப்புக்கோர் கல்விக் கூடம்
இயல்பிலே மாற்றா வண்ணம்
இருப்பதில் மலையைப் போல்வர்.
பயபக்தி நேர்மை மீது
பாசமோ கல்வி மீதாம்;
உயர்வுள இராம சாமி
கல்வித்தாய் உருவ மாகு ।

கன்னியாய் வளர்ந்தோர் தாங்கள்
கவின்மணம் கொள்ள எண்ணி
முன்னிய பொருளைத் தேடி
முன்வரக் கண்ட போதே
தன்னிரு கரத்தால் அள்ளித்
தருவதே இன்ப மென்னும்
நன்னலக் கோமான் வாழ்க
நாளெலாம் நீடு வாழ்க !

கச்சித மாகப் பேசும்
கலையினை அறிவார், என்றும்
இச்சகம் பேசி நிற்போர்
இயல்பினை வெறுப்பார் வையம்
மெச்சிடும் நேர்மை காக்கும்
மேலவர் என்றால் தூக்கி
உச்சியில் வைத்துப் போற்றும்
உயர்ந்தவர் வாழ்க வாழ்க !

எண்பதைக் கடந்த போதும்
இருபதிற் குரிய ஆற்றல்
பண்மலி சிறுவர் வந்து
படிப்பென நின்றால் அன்னார்
கண்பொலி அறிவு கண்டு
கைப்பொருள் நல்கும் செம்மைப்
புண்ணியர் நெஞ்சில் என்றும்
பொய்யினைக் காணா வள்ளல்.

தன்பெரு மரபு காத்த
தயரதன் போல்வார் இந்த
மன்பதை மதிக்க வாழும்
மாபெரும் குணத்தார் மக்கள்
அன்புடன் பேரன் பேர்த்தி
அனைவரும் கும்ப நீரை
இன்பமாய்ச் சொரியக் கண்டோர்
இரண்டுகை கூப்பி நின்றார்.

இருப்பினில் தன்னை ஒத்தார்
 இல்லங்கள் தேடிச் சென்று
விருப்புடன் பெற்ற பெண்கள்
 வியன்மணம் செய்த லின்றி
உருப்படி யாகச் செய்யும்
 உத்தமர் பிள்ளை கட்கு
வருமான வழிகள் காட்டி
 வாழ்ந்திட வைத்த மேலோர்.

குருகுலம் காக்கும் தோன்றல்
 குறையென வந்து நிற்பார்
வருகுலம் தனைஎண் ணாது
 வழங்கிடும் வள்ளல் தங்கள்
மரபினைச் சுற்றத் தாரை
 மதிப்புடன் காப்பார்க் கென்றும்
உரியவர் தில்லை ஆச்சி
 உறவுடன் நீடு வாழ்க.

தேவர்கள் ஆசி கூறத்
 திகழுநான் மறைகள் பாடப்
பூவினில் வளர்ந்த தேவி
 பொலிதரும் அருளைக் காட்டப்
பாவினில் புலவர் வாழ்த்த
 பண்ணிசை முழங்கும் இன்பத்
தேவாரம் கண்ட ஈசன்
 திருவருள் பெற்று வாழ்க !

ஆயிரம் பிறைகள் கண்ட
 அண்ணலே உங்க ளுக்குப்
பாயிரம் ஆக இந்தப்
 பைந்தமிழ் வாழ்த்துச் சொன்னோம்
தாயினும் சிறந்த உங்கள்
 தண்ணளி பொறுமை நேர்மை
வாய்மையைக் கண்ட தாலே
 வாழ்த்தினோம் நீடு வாழ்க !

பேரறம் செய்யும் உங்கள்
பெரும்பணி தொடர வந்து
சீர்மிகு தமிழ்க்கல் லூரி
உம்பெயர் தாங்கச் செய்தார்
காரெனக் கொடைவ ழங்கும்
கான்முளை யாக வந்த
பேர்மிகும் பெருங்க ருப்பர்
பெற்றிசேர் நலங்கள் காக்க!

மேன்மைகொள் நூல்கள் தந்த
மெய்யம்மை பதிப்ப கத்தார்
யான்மைகொள் தமிழ்க்கல் லூரி
பாலிக்கும் புலவர் அன்பர்
தேனினும் இனிய வாழ்த்தைத்
திருவடி சேர்த்தோம் இந்த
நானிலம் வாழ நாங்கள்
நலம்பெற அருள்செய் வீரே.

சந்தனத் தென்றல் வந்து
சதிரிடும் மதுரை மீனாள்
இந்துவெண் பிறையைச் சூடும்
இனியசொக் கேசர் மற்றும்
செந்தில்வாழ் முருகன் பொங்கு
சீர்அபி ராமி எல்லாம்
சந்ததம் உம்மைக் காக்கச்
சத்தியம் போல வாழ்வீர்!

காலத்தை வென்று மூத்த
கன்னியாம் தமிழைப் போல
சீலத்தை உலகுக் கீந்த
செய்யசீர் குறளைப் போல
கோலத்தைத் தன்னுள் வைத்தே
குலவுதிரு வாச கம்போல்
ஞாலத்தார் போற்ற வாழ்க
வாழ்கநீர் கோடி நாட்கள்!



மெய்யம்மை பதிப்பகம்